# உதயன்




www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 27 கதிர் 356 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை (16/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

# வன்னியில் தமிழ் பெண்களை ஆள்சேர்க்கிறது இராணுவம்

## 100 பேர் விரைவில் இணைவர்

கொழும்பு,நவம்பர்16
இலங்கை இராணுவத்தில் வன்னியில் பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர். இதற்கான முயற்சிகள் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் முதல் தடவையாக அதனை இராணுவம் பகிரங்கமாக அறிவித்துள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழும் தமிழ்ப் பெண்களே இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். முதல்கட்டமாக 100 பெண்கள் தொண்டர் படையில் இணைக்கப்படுகின்றனர்.

முற்றுமுழுதாகச் சிங்களவர்களைக் கொண்ட இலங்கை இராணுவத்தில் தமிழ்ப் பெண்கள் இணைக்கப்படவுள்ளனர் என்பதை இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய உறுதிப்படுத்தி உள்ளார்.

சீன செய்தி நிறுவனத்துக்குக் கருத்துத் தெரிவித்த அவர், 'இராணுவத்தில் தமிழர்களைச் சேர்த்துக்கொள்வது ஒன்றும் புதிய விடயம் அல்ல; ஆனால் ஒரே தடவையில் 100 தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது இது தான் 'முதல் தடவை'' என்று தெரிவித்திருக்கிறார்.

சேர்த்துக்கொள்ளப்படும் தமிழ்ப் பெண்கள், இலங்கை இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் கீழ் இயங்கும் தொண்டர் படையினராக இருப்பர்.

இவர்களை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளும் சம்பிரதாய

பார்க்க பக்கம் 4

தமிழ் மக்கள் மீது அத்துரலிய ரத்ன தேரர் காட்டும் பரிவு வேடிக்கைக்குரியது. இது 'ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதை' போன்றது. இவ்வாறு கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி. பாஸ்கரா விசனம் தெரிவித்துள்ளார். 5

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகவுள்ளது. 8

சீனாவின் புதிய ஜனாதிபதியாக ஜீ ஜின்பிங்கும், பிரதமராக லீ கேகியாங்கும் தேர்வு செய்யப்பட்டனர். 9

# '13' மீது கைவைத்தால் நாட்டுக்கு பேராபத்து

### சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, நவ.16
அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழித்தாலோ அல்லது அதில் திருத்தம் செய்தாலோ நாட்டின் எதிர்காலம் கடும் ஆபத்தை எதிர்நோக்கும் என்றும் ''13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதாக இருந்தால் அது தமிழருக்கு அதிக பட்ச அதிகாரப்பகிர்வை வழங்குவதாக இருக்கவேண்டும்'' என்றும் ஆர்.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் இது குறித்து தெரிவித்ததாவது:-

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவும் அக்கறை காட்டி வருகின்றது. இலங்கையின் இறைமைக்கு உட்

பார்க்க பக்கம் 4

## அறிக்கையை ஆராய குழு

கொழும்பு, நவ.16
இலங்கை இறுதிக்கட்டப் போரின்போது ஐ.நா. தனது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளது என சாள்ஸ் பெற்றி குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையை ஆராய்ந்து, தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு மூத்த அதிகாரிகள் குழு ஒன்றை உடனடியாக நியமிக்கவுள்ளார் ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ - மூன் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றி குழுவின் அறிக்கையில், ஐ.நா தலைமையகம், முகவர் அமைப்புகள், பாதுகாப்புச்சபை, மனித உரிமைகள் சபை என்பன தமது பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

''இந்த அறிக்கை உலகம் முழுவதிலும் எமது பணிகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் மோசமான நிலை

பார்க்க பக்கம் 4

தமிழர்களைக் காப்பாற்றாமல்

## ஐ.நா. விட்ட தவறை ஏற்றார் பான் கீ-மூன்

கொழும்பு, நவ.16
''இலங்கை இறுதிப் போரில் தமிழ் மக்களைக் காப்பாற்ற ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது என்ற உள்ளக விசாரணை அறிக்கையின் குற்றச்சாட்டை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்கிறோம்.''
- இவ்வாறு ஒப்புதல் அளித்தார் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூன்.

இலங்கையில் ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட சாள்ஸ் பெற்றி குழு, எட்டு மாத காலமாக மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையில் ஐ.நா. தலைமையகம், முகவர் அமைப்புகள், பாதுகாப்புச் சபை, மனித உரிமைகள் சபை என்பன தமது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் சில பகுதிகள் வெளியாகி இருந்த நிலையில் முழு அறிக்கை

பார்க்க பக்கம் 4

## பளை விபத்தில் அருட்தந்தை சாவு

யாழ்ப்பாணம், நவ.16
பளையில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த கத்தோலிக்க குருவான அருட்தந்தை கீத பொன்கலன் லக்ஷ்மன் (வயது-34) தூக்கிவீசப்பட்

பார்க்க பக்கம் 4

## தாதியர்கள் போராட்டத்தால் நோயாளர்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம்,நவ.16
வடக்கில் உள்ள வைத்தியசாலைகள் உட்பட நாடெங்கிலுமுள்ள அரச வைத்தியசாலைகளில் தாதியர்கள் நேற்று ஒரு நாள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நோயாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலைகளின் விடுதியில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உரிய நேரங்களில் மருந்து மாத்திரைகள், ஊசி மருந்துகள் போடப்படவில்லை. இதனால் அவர்கள் பெரும் அவஸ்தைப்பட்டனர்.

பார்க்க பக்கம் 4

## ஐ.நா. இரகசிய அறிக்கையின் முக்கிய பகுதிகளில் கறுப்பு மை

நியூயோர்க்,. நவ.16
வன்னி இறுதிப் போரின் போது ஐ.நாவின் செயற்பாடு தொடர்பாக வெளியாகியுள்ள மீளாய்வு அறிக்கையில் பல பகுதிகள் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

வன்னிப் போரின் போது தமிழர்களைப் பாதுகாக்க ஐ.நா. தவறியமை தொடர்பான அறிக்கையை, ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் நேற்றுப் பகிரங்கமாக வெளியிட்டார்.

128 பக்கங்களைக் கொண்ட இந்த இரகசிய அறிக்கையில், பல பகுதிகள் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டுள்ளன.

போரின் போது இலங்கை அரசினால் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், ஐ.நா. தனது பொறுப்பிலிருந்து தவறியமை குறித்த விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், போர் வலயத்தில் சிக்கியிருந்த மக்களைப் பாதுகாக்கும் பணியில் ஐ.நாவின் உயர்மட்ட அதிகாரிகள் எவரும் தலையிடவில்லை என்ற பகுதிகளும், மிகமோசமாக பரந்தளவில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் குறித்த தகவல்களும் கறுப்பு மையினால் அடைக்கப்பட்டுள்ளன.

அறிக்கையில் கறுப்பு மையினால் அழிக்கப்பட்ட தகவல்கள் மிக முக்கியமானவையாக இருக்கக் கூடும் எனவும் இந்த விடயத்திலும் ஐ.நா. தவறிழைத்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# முல்லையில் தென்னிலங்கை மீனவர் தொடர்ந்தும் சட்டவிரோத மீன்பிடி

### அமைச்சரின் தடை உத்தரவும் உதாசீனம்

முல்லைத்தீவு, நவ.16
முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் தொடர்ந்தும் சட்டவிரோதமாக மீன்பிடித்து வருகின்றனர்.

இந்த மீனவர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு கடல்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஏற்கனவே உத்தரவிட்டிருந்த போதும் அவர்கள் அங்கிருந்து வெளியேறவில்லை என முல்லைத்தீவு கடல்தொழிலாளர் சங்கங்கள் கூறுகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 5ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறிச் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றமை குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் 153 படகுகளுடன் 80 தென்னிலங்கை

பார்க்க பக்கம் 4



மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிறந்ததினத்தையும் அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்று 8வது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன், எமது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது வளமான எதிர்காலத்திற்கு மஹிந்த சிந்தனையின் நற்பலன்களை நாமும் குடாநாட்டில் அறுவடை செய்வோம்



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின்
யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர்
இ. அங்கஜன்

கட்சி உறுப்பினர்கள் மற்றும்
ஆதரவாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் நம்பியாரை காப்பாற்றியது ஐ.நா.

## இதுகுறித்து பதிலளிக்க பேச்சாளர் மறுப்பு

கொழும்பு, நவ.16

ஐ.நாவின் மூத்த அதிகாரி சாள்ஸ் பெற்றி சமர்ப்பித்துள்ள இலங்கையில் ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்த உள்ளக மீளாய்வு அறிக்கையில், பான் கீ - மூனின் மூத்த ஆலோசகர் விஜய் நம்பியார் குறித்த எந்தத் தகவலும் இடம்பெறவில்லை. இது குறித்து இன்னர் சிற்றி பிரஸ் எழுப்பிய கேள்விக்கு ஐ.நா. செயலரின் பேச்சாளர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

போர் இறுதிக்கட்டத்தை அடைந்திருந்தபோது ஐ.நா. பொதுச்செயலரின் பிரதிநிதியாக இலங்கை விவகாரங்களைக் கையாண்டவர் விஜய் நம்பியார்.

போரின் முடிவில் சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளுக்கு, பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என தகவல் பரிமாறுவதில் அவர் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

ஆனால், அவரது உத்தரவாதத்தின் பேரில் வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த புலிகளின் தலைவர்கள் பலர் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்களுக்குத் துணைபோனதாக விஜய் நம்பியார் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதும், உள்ளக மீளாய்வு அறிக்கையில் அவர் பற்றிய குறிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை என்று இன்னர் சிற்றி பிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

## சிவப்பு மழை

கொழும்பு, நவ.16

இலங்கையின் சில பகுதிகளில் நேற்று நண்பகல் பெய்த மழை நீர் சிவப்பு நிறத்தில் காணப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

திம்புலாகலை, மனம்பிட்டிய, சீலபுற ஆகிய இடங்களில் நேற்று சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இந்த சிவப்பு மழை பெய்துள்ளது.

## கல்விக் கருத்தரங்கு

இணுவில் பொதுநூலகமும், சனசமூக நிலையமும் இணைந்து க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாபெரும் கல்விக் கருத்தரங்கொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை நான்கு தினங்களுக்கு இந்தக் கருத்தரங்கு இடம்பெறும்.

இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் தினமும் முற்பகல் 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கணிதம், வரலாறு, விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்கள் தொடர்பில் முன்னணி ஆசிரியர்களின் விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. அத்தோடு பாடநெறி சார்ந்த கையேடுகள், குறிப்புகள் என்பனவும் இதன்போது இலவசமாக மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ங)

## பிரேரணையை உடனடியாக நிறுத்துங்கள்!

இலங்கை அரசு பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வந்துள்ள குற்றவியல் பிரேரணையை இடைநிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட நிபுணர் கெப்ரியேல் க்னாவுல் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உடல் மற்றும் உள ரீதியாக நீதித்துறையைச் சேர்ந்தவர்கள்மீது அரசு மேற்கொள்கின்ற தாக்குதல்கள் உடனடியாக தவிர்க்கப்பட வேண்டும்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவந்துள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

நீதித்துறையில் இருந்து உயர் நீதியரசர் நீக்கப்படுவதே, நீதித்துறை மீது அரசு மேற்கொள்கின்ற அதிக பட்ச வன்முறையாக அமையும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் விட்ட தவறுகளை ஐ.நா. இனியும் தொடரக் கூடாது

### வலியுறுத்துகிறது சனல் – 4

கொழும்பு, நவ.16

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் விட்ட தவறுகளை எதிர்வரும் காலங்களில் மீண்டும் விடக்கூடாது என்ற உறுதி வழங்கப்பட வேண்டும் என்று 'சனல் - 4' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

'இலங்கையின் கொலைக் களம் திரைப்படத்தை இயக்கிய 'சனல் 4' கொலம் மக்ரே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இரத்தக் களரியை அரசு ஆரம்பிக்கும் போது, இந்தச் செயற்பாடுகளுக்குச் சாட்சியங்களை இல்லாது செய்யும் பணிகளையும் அரசு நடத்தியது. அதன் அடிப்படையில் வடக்குக்குச் செல்ல ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

அத்துடன் இந்த பகுதியில் இருந்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் அகற்றப்பட்டன. அதன் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் சபையும் அங்கிருந்து விலகிக் கொண்டது.

இந்தச் செயற்பாடுகள் அரசு பொது மக்களுக்கு எதிரான இரத்தக் களரிக்குத் துணை போகும் வகையிலான செயற்பாடுகளாக அமைந்திருந்தன. எனவே இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் நடைபெறாது இருக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மீதான நம்பிக்கை பேணப்பட, ஐக்கிய நாடுகள் சபை அதற்கு ஈடான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானிய இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ.16

ஜப்பானியத் தூதரகத்தின் இசை நிகழ்ச்சி நாளை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்வில் எய்ஜிசுக்ஸுக்கியின் இசையமைப்பில் செல்வி கெய்கோ கொபயாதயின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. (16)

# கேள்விகளை சிறிதாக கேளுங்கள் அப்போதே விரைவாகப் பதில் தரலாம்

## சபையில் நேற்று கேள்விகளுக்கு கால அவகாசம்; கேள்விகேட்கும் முறைபற்றி விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 16.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவிட இன்று அரசே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கூடுதலான நெருக்கத்தையும் நல்லுறவையும் பேணிவருகிறது என்று சுட்டிக்காட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். தனக்கு மிக நம்பிக்கையுடையவர்களாகவும், ஆதரவாளர்களாகவும், ஆலோசகர்களாகவும் புலிகளே இருக்கின்றனர் என்றும் கோடிட்டுக் காட்டினார் அவர்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9:30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட உரை மீதான ஐந்தாவது நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

**ஒரு வினாவுக்கு விடையளிக்க 4 மாதங்கள் 40 லட்ச ரூபா செலவு**

நாடாளுமன்றத்தில் வழமைபோல் நேற்றும் வாய்மூல வினாக்களுக்கான விடை நேரத்தில் சர்ச்சை ஏற்பட்டது.

அதாவது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி கேட்கும்போது பல வருடங்கள் கடந்த விவரங்களையும், புள்ளி விவரங்களையும் கேட்கின்றனர். இப்படியான ஒரு கேள்விக்கு சரியான விடையைப் பெற்றுக் கொடுக்க நான்கு மாதங்கள் பிடிக்கின்றன. அதேவேளை 40 லட்ச ரூபாவும் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்காகத்தான் விடையளிக்க கால அவகாசம் கோரப்படுகின்றது. கேள்வி எழுப்பும் உறுப்பினர்கள் தமது கேள்விகளை இயன்ற அளவு சுருக்கமாகக் கேட்டால், வீண் விரயங்களைத் தவிர்க்க முடியும் என்றார் ஆளும் கட்சிக் கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன.

அடேயப்பா ஒரு கேள்விக்குப் பதில் அளிக்க இவ்வளவு பெரியதொகை செலுத்தப்படுகின்றதா என வியப்பாக இருக்கின்றதல்லவா!

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர பெருந்தோட்டத் துறைகள் அமைச்சரிடம் அமைச்சுக்கு சொந்தமான பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தொடர்பாக ஒரு கேள்வியை எழுப்பினார்.

அரச தோட்டங்கள் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டவை போக அரசுக்குச் சொந்தமான அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் எத்தனை தோட்டங்கள் இருக்கின்றன. அந்தத் தோட்டங்களில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

அவர்களுக்கான ஊழியர் சேமலாபநிதி, நம்பிக்கை நிதி என்பன செலுத்தப்படவில்லை என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டார் தயாசிறி.

பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் 12 தோட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. அங்கு 4,909 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

அங்கு இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக மேலும் அறிக்கை சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை நீக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது புதிய பணிப்பாளர் சபை அமைக்கப்பட்டுள்ளது. ஊழியர்களுக்குச் சேரவேண்டிய பணம் கட்டங்கட்டமாகச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பிரதி அமைச்சர் தயாசிந்த சிகேரா கூறினார்.

**தொழிலாளர்களின் வீதிப்போராட்டம்**

இந்தத் தொழிலாளர்கள் தமக்குச் சேரவேண்டிய ஊழியர் சேமலா நிதியும், நம்பிக்கை நிதியும் மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துகின்றனர். இப்படி செலுத்தப்படாத தொகை 50 கோடிக்கும் மேலானது என்றும் கூறப்படுகின்றது. அந்தத் தோட்டங்களிலுள்ள மரங்களை வெட்டி விற்றாவது அப்பாவித் தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தயாசிறி ஜயசேகர மீண்டும் கேட்டார்.

இத்தோட்டங்களில் மரங்கள் இருக்கின்றனதான். அவை வெட்டக்கூடிய பருவம் வந்தவுடன் வெட்டி விற்கப்பட்டு தொழிலாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுப்போம் என பதிலளித்தார் பிரதி அமைச்சர்.



**தனிமரமான அஜித் குமார**

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தலைமையிலான ஜனநாயக தேசிய முன்னணியின் கூட்டுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

தேசிய முன்னணி (ஜே.வி.பி.) உறுப்பினரான அஜித்குமார தனது அடிப்படை சிறப்புரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. வரவு, செலவு திட்டத்தின் போது எனது எனது பெயர் குறிப்பிடப்படிருந்த போதும் பின்னர் நீக்கப்பட்டுள்ளது. எனது கட்சிக்காரர்களே எனக்கு குழி பறிக்கின்றனர். எனவே இனிமேல் சுயேட்சையாக செயல்படப்போகின்றேன். கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படும் வரப்பிரசதங்கள் எனக்கும் வழங்கப்பட வேண்டும் என்றார் அஜித்குமார.

**உரம்போட்டார் அமைச்சர் தினேஸ்**

கௌரவ அஜித்குமார எந்தக் கட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். ஆனால் அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டியது என்றார். ஒருவேளை அஜித்குமாரருக்கும் அரசு வலை விரிக்கின்றதோ பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**சபையில் பேசாமலே சாதனை படைத்த டிரான் அலஸ்**

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு தமக்கு பேச வாய்ப்பு கிடைக்கவில்லை என்று சர்ச்சை எழுப்புகின்றனர்.

ஆனால் இந்தச் சபையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து வந்த நாள் முதல் இந்தச் சமயம் வரை சபையில் ஒரு நிமிடமாவது உரையாற்றாமல் இருந்து ஒருவர் சாதனை படைத்துள்ளார். அவர் தான் கௌரவ உறுப்பினர் டிரான் அலஸ். அவரைப் பாராட்டி ''சபையில் பேசாதவர்'' என்று பரிசு வழங்கவேண்டும் என்றார் ரணில் விக்கிரமசிங்க.

இவரது கூற்றைக் கேட்டு சபையில் இரு பக்கத்திலும் கொல்லன சிரிப்பொலிகள் கேட்டன.

**பூச்சாண்டி காட்டுகிறது மஹிந்த அரசு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் அடிப்படைச் சீர்திருத்தத்தில் தான் செயற்படுகின்றனர். நாட்டைக் களங்கப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம் என்று குறைகூறுகின்றனர். இது தவறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட அரசு தான் புலிகளுடன் நெருங்கிய தொடர்பை வைத்துள்ளது. அரசின் மிக நம்பிக்கைக்குரியவர்களாகவும் ஆலோசகர்களாகவும் புலிகள் தானே இருக்கின்றனர் என ஒரு போடு போட்டார் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன்.

இந்த அரசாங்கம் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக மீண்டும் புலிகள் தலைதூக்கப்போகின்றார்கள் என்று சிங்கள மக்களிடம் பூச்சாண்டி காட்டுகின்றது. பேரினவாத சிந்தனைக் கேற்ப அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டுவர சிலரும் முயற்சித்தனர் எனவும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

**நடமாடும் எலும்புக்கூடுகளாக மக்கள்-கபீர்ஹாசிம்**

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான கபீர்ஹாசிம் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் தனவந்தர்களுக்காக தயாரிக்கப்பட்டது என்று விமர்சித்தார். நாட்டில் மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டு நடமாடும் எலும்புக்கூடாகக் காணப்படுகின்றனர். ஆனால் ஆடம்பரமாகவும் தனவந்தர்களின் கொழுப்பு குறையவேண்டும் என்பதற்காக ஜிம்களையும், உடற்பயிற்சிக் கூடங்களையும் அமைக்கின்றனர். இதுதான் வறுமை ஒழிக்கும் மஹிந்த சிந்தனை என்றார் கபீர்ஹாசிம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்கறி விலை உயர்வு

வலி.தென்மேற்கு, நவ.16

குடாநாட்டில் பருவ மழையைத் தொடர்ந்து மரக்கறி வகைகள், நாட்டரிசி ஆகியவற்றின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

இந்த விலையேற்றத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் கடலுணவின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நிலை பாவனையாளர்களுக்குச் சற்று ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது. பருவ மழை காரணமாக சகல மரக்கறி வகைகளின் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் ஒருகிலோ 50 ரூபாவில் இருந்து 100 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த மரக்கறி வகைகள் தற்போது 200 ரூபாவிலிருந்து 300 ரூபா வரை அதிகரித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பு பாவனையாளருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல் நெல்லின் விலையும் அதிகரித்துள்ளது. 50 ரூபாவிலிருந்து 60 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த நாட்டரிசி தற்போது 70 ரூபாவிலிருந்து 75 ரூபா வரை விற்பனையாகிறது.

அரிசி, மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பை ஈடுசெய்யும் வகையில் தற்போது கடலுணவின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மழை காலத்தைத் தொடர்ந்து கடலுணவுகள் அதிகமாகப் பிடிபடுவது மற்றும் விரத காலங்களால் கடலுணவின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (ம-115)

## நிகழ்வுகள் இன்று

**ஒளி விழா**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஒளிவிழா இன்று முற்பகல் 10 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி கிறிஸ்தவ மன்றத் தலைவர் சகாய ராஜா டனுஜன் தலைமையில் நடைபெறும் விழாவில் வழிபாட்டு நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். பிரதேச கிறிஸ்தவ, கத்தோலிக்க மற்றும் சபைகளின் மதகுருமார் போதகர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9)

**பரிசில் நாள்**

ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயத்தின் பரிசில் நாள் விழா பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்துகொள்வார். (ம-14)

**விருது வழங்கல்**

இலங்கை வங்கியின் மெகாவசரி விருது வழங்கும் நிகழ்வு பிற்பகல் 2.45 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் மத்திய வங்கியின் வடமாகாண வங்கி முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் கலந்து கொள்வார். (ம-14)



சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான பாடசாலை மருத்துவ பரிசோதனை முகாம் நேற்றுச் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்றது. கல்லூரியின் ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு பல், கண், காது, தோல், தொண்டை, மூக்கு, குருதிச் சோகை, இருதயம், சுவாசம் ஆகிய பரிசோதனைகள் மருத்துவர் ச.அம்பிகைபாகனால் நடத்தப்பட்டன. சாவகச்சேரி நகரசபைப் பொதுசுகாதாரப் பரிசோதகர் பி.தனிஸ்ராஜ் முகாமுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். (ம-9)

## குருநகர் கடற்பரப்பில் கம்பிகள் சிக்குண்டு இரு படகுகள் சேதம்

யாழ்ப்பாணம்,நவ.16

குருநகர் கடற்பரப்பில் கம்பிகள் நடப்பட்டுக் களங்கட்டி தொழில் செய்யப்பட்டு வரும் நிலையில் இதற்குள் சிக்குண்ட இரு படகுகள் சேதமடைந்துள்ளன.

யாழ்.மாவட்டக் கிராமிய கடற்றொழிலாளர் சம்மேளனச் செயலாளர் எம்.சி.டொனல்ட் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குருநகர் கல்முனையை அண்மித்த பகுதியான பண்டிப்பள்ளத்தில் தனியார் மீனவர்கள் கடலின் அகலப் பாட்டுக்குப் பாய்ந்து தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மீனவர்கள் ஆழ் கடல்வரை சென்று இரும்புக் கம்பிகள் நட்டு களங்கட்டி வலையால் அடைத்து தொழில் செய்கின்றனர்.

இதனால்வெளியிணைப்பு இயந்திரம் பூட்டப்பட்ட 2 படகுகள் சேதமடைந்துள்ளன. தனி நபர்கள் அல்லது சங்கங்கள் ரீதியாகச் தொழில் செய்பவர்கள் கடற்கரையிலிருந்து 2 கிலோமீற்றர் தூரம் வரையே தொழில் செய்யமுடியும்.

ஆனால் இந்த மீனவர்கள் கரைகளிலிருந்து ஆழ்கடல் வரை சென்று தொழில் செய்கின்றனர். சாவற்கட்டு, பாஷையூர், குருநகர் ஆகிய கடற்பகுதிகளிலேயே அதிகமாக இந்த வகையில் தொழில் செய்கின்றனர். கடற்கரைப் பகுதியில் இருந்து 2 கிலோமீற்றருக்கு அப்பால் தொழில் செய்யும் மீனவர்களுக்கு சங்கத்தினால் கடந்த வருடம் கடிதங்கள் அனுப்பப்பட்டு அவர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

ஆனால் அவற்றை மீறியும் பல பகுதிகளில் இந்த வகையில் தொழில் செய்வதால் ஏனைய மீனவர்கள் பாதிப்படைகின்றனர். இது தொடர்பான முறைப்பாடு கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. - என்று கூறினார். (ம-13)

# உரிய நேரத்துக்குப் புறப்படாத தனியார் பஸ்களுக்கு தண்டம்

## தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடத்துக்கும் 1,500 ரூபா வீதம் அறவிடப்படும் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், நவ.16

*தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட நேர அட்டவணைக்கு அமைவாகவே தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட வேண்டும். அத்துடன் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடத்துக்கும் ஆயிரத்து 500 ரூபா வரையில் தண்டம் விதிக்கப்படும். யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.*

யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாகத் தனியார் பஸ்கள் விபத்துக்குள்ளாவதும், பொதுமக்கள் உயிரிழக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

அதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் யாவும் இதுவரை காலமும் இணையத்தால் தயாரிக்கப்பட்ட நேர அட்டவணைக்கு அமைவாகவே சேவையில் ஈடுபட்டன.

இந்த நிலையில் தற்போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட நேர அட்டவணை சகல பஸ்மார்க்கங்களுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக யாழ்.- பருத்தித்துறை வீதி மார்க்கத்துக்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேர அட்டவணை அறிமுகப் படுத்தப்பட்ட பின்னர், உரிய நேரத்துக்கு முக்கிய இடங்களைக் கடக்காத பஸ்கள், ஒரு நிமிடம் தாமதிப்பதற்கு ஆயிரத்து 500 ரூபா வரையில் தண்டம் விதிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்று மேலும் அரச அதிபர் தெரிவித்தார். (ம-5)

## மாதகல் மேற்கில் குடியமர்ந்த 137 குடும்பங்களுக்கு தகரங்கள்

யாழ்ப்பாணம், நவ.16

22 வருடங்களின் பின்னர் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ள மாதகல் மேற்குப் பகுதியில் குடியமர்ந்த 137 குடும்பங்களுக்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் தகரங்கள்வழங்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டிலிருந்து கடற்படையினர் கட்டுப்பாட்டிலிருந்து வந்த மாதகல் மேற்கு பிரதேசம் கடந்த மாதம் 22 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக அனுமதிக்கப்பட்டது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஆரம்பத்தில் உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை. பின்னர் 221 குடும்பங்களுக்கு பற்றைகளைத் துப்புரவு செய்வதற்குரிய உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிலையம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால், மீளக்குடியமர்வதற்குப் பதிவு செய்த 261 குடும்பங்களில் 137 குடும்பங்களுக்கு தலா 12 தகரங்கள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

137 குடும்பங்களும் உடனடியாகவே மீளக் குடியமர்வதற்குப் பதிவு செய்துள்ளமையாலேயே அவர்களுக்குத் தகரங்கள் வழங்கப்பட்டதாகவும், ஏனைய குடும்பங்களுக்கு விரைவில் அவை வழங்கப்படும் என்றும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைவிட பண்டதரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாதகல் மேற்கில் தனது கிளை ஒன்றை திறக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் யாழ்.மாவட்ட செயலகத்தால் இன்று வெள்ளிக்கிழமை மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (த-5)

## சாவகச்சேரிச் சந்தையில் நீரிழிவு பரிசோதனை முகாம்



தென்மராட்சி, நவ.16

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் நேற்று காலை நீரிழிவு பரிசோதனை முகாம் நடைபெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை பிரிவினரும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவினரும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

நீரிழிவு பரிசோதனையில் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் நீரிழிவு தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

யாழ். போதனா வைத்திய சாலை விசேட பொது வைத்திய நிபுணர் மருத்துவர் சிவன்சுதன், மருத்துவர் இ.பரமேஸ்வரன் ஆகியோர் தலைமையிலான குழுவினரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொதுவைத்திய நிபுணர் மருத்துவர் தி.ஸ்ரீகரன், மருத்துவர் இ.கிஷோர் தலைமையிலான குழுவினரும் மற்றும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் லயன் எஸ்.எஸ். அருளானந்தமும் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

- நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் நடத்தப்பட்டது. (ம-9)

## 20 வருடங்களின் பின்னர் கடற்கரை வீதி திருத்தம்

கொழும்புத்துறை, நவ.16

பாஷையூரில் இருந்து கொழும்புத்துறை துண்டிச் சந்தி வரையிலான கடற்கரை வீதிப் பகுதி கடந்த 20 வருடங்களின் பின்னர் புனரமைக்கப்பட்டு 'காப்பெற்' வீதியாக அமைக்கப்பட்டு வருகிறது. எழிலூர், வளன்புரம், மகேந்திரபுரம், சூரியபுரம் மற்றும் பாஷையூரின் சில பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு பல வருடங்களாக சேதமடைந்த இவ்வீதியையே பல சிரமங்களின் மத்தியில் பயன்படுத்தி வருகின்றனர்.

இப்பகுதியில் பல குடும்[illegible] இயங்கி வருகின்றன. தற்போது இந்த வீ[illegible]க்கான போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்படுமென மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய நீதித்துறை மாநாட்டில் பிரதம நீதியரசரின் விவகாரம்

## ஷிராணியின் சட்டத்தரணிகள் முஸ்தீபு

கொழும்பு, நவ.16

இந்தோனேஷியாவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.'லோ ஏஷியா'(LAW ASIA) என்னும் சட்ட உயர் மாநாடு இந்த மாநாட்டில் இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை ஆராயப்படவுள்ளது. இது அரசுக்குப் பெரும்அதிர்ச்சியைக் கொடுத் திருக்கிறது.

'லோ ஏஷியா' அமைப்பு சட்டத்துறை நிறுவனங்கள், நீதிபதிமார் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகளை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள ஓர் உயர் அமைப்பாகும்.

இதன் 25ஆவது சர்வதேச மாநாடு எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 21 ஆம் திகதி புதன்கிழமை வரை இந்தோனேஷியா பாலி தீவில் வெஸ்ட்டின் சர்வதேச சுற்றுலா விடுதியில் நடைபெறவுள்ளது.

சர்வதேச மட்டத்தில் பிரபலம் வாய்ந்த சட்டத்தரணிகள், நீதிபதிகள், நீதியரசர்கள் இந்த மாநாட்டில் ஒன்றுகூடி பிராந்தியத்தில் நீதித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

இலங்கையில் பிரதம நீதிரசருக்கு எதிராக அரசு முன்வைத்துள்ள குற்றப் பிரேரணை குறித்தும் இந்த மாநாட்டில் பேசப் படவிருப்பதாகவும், பிரதம நீதியரசரின் சட்டத்தரணிகள் இதற்கான முன்முயற்சிகளை எடுத்துவருவதாகவும் நீதித்துறை உயர் வட்டாரங்கள் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தன.

இதற்கிடையில், பாலி மாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படாது தடுக்கும் விதத்தில் உயர்மட்ட சட்ட வல்லுநர் குழு ஒன்றை இந்தோனேஷியாவுக்கு அனுப்ப இலங்கை அரசு தயாராகி வருவதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-சி)

# தினமும் 11 பேர் தற்கொலை'ஆசியாவின் அதிசயம்' இது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.16

''இலங்கையில் நாளாந்தம் 11 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர். ஜனாதிபதி, நாட்டை ஆசியாவின் அதிசயமாக மாற்றப் போகிறார் எனக் கூறும்போது, தற்கொலை வீதம் வெகுவாக அதிகரித்துள்ளது'' எனச் சுட்டிக்காட்டியுள்ளார் ஐ.தே.க. உறுப்பினர் கபீர் ஹாஸிம்.

தற்கொலைகள் அனைத்தும் வறுமை மற்றும் கடன் தொல்லைகள் காரணமாகவே இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரவு-செலவுத்திட்ட உரை மீதான இரண்டாவது வாசிப்பு விவாதத்தில் நேற்று உரையாற்றினார் ஹாஸிம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தவறான முறையில் இடம்பெற்றுள்ள வளப் பகிர்வுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நாட்டின் மொத்த செலவினங்களில் 45 சதவீதம் ஜனாதிபதியின்கீழ் வரும் மூன்று அமைச்சுகளுக்கும், அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷவின்கீழ் வரும் பொருளாதார அமைச்சுக்கும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, ஏனைய 41 அமைச்சுகளுக்கும் 45 சதவீதம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு அபிவிருத்தி என்று அரசு கதை விடுகிறது. ஆனால், நாட்டு மக்கள் மீது வாழ்க்கைச் செலவு, பொருள்களின் விலை அதிகரிப்பு என்பனவற்றின் மூலம் மறைமுகமாக 80 சதவீத வரிச்சுமையை ஏற்றிவைத்துள்ளது. வர்த்தகர்களிடம் வருமான வரியாக 20 சதவீதத்தை மட்டுமே அது அறவிடுகின்றது.

முன்பு தனவந்த கம்பனிகளுக்கு 35 சதவீதமாக இருந்த வரியை 27 சதவீதமாகக் குறைத்துவிட்டது. 20 சதவீதமாக இருந்த 'வற்' வரியை 12 சதவீதமாகக் குறைத்துள்ளது.

உலக நாடுகளில் தனவந்தர்களிடமும், கம்பனிகளிடமும் 60 சதவீதமான வரியை அறவிடுகின்றனர். ஆனால், இங்கு பொது மக்கள் மீதே வரிகளை அதிகரித்துள்ளனர்.

அண்மையில் வெளியான பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அறிக்கையில் 9 கம்பனிகள் 100 கோடி ரூபாவுக்கு மேல் ஆதாயம் காட்டுவதாகக் கூறப்பட்டுள்ளது.

கம்பனிகளின் வருமானம் கோடி கோடியாக அதிகரித்துள்ளபோது தேசிய வருமானம் எப்படி குறைகின்றது என்று கேட்க விரும்புகின்றேன் - என்றார். (உ-சி)

## முல்லையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மீனவர்கள், தொழில் செய்து வருகின்றனர். அத்துடன் கொக்குளாய் பகுதியில் 300 தென்னிலங்கை மீனவர் குடும்பங்களும், புலி பாய்ந்தகல் பகுதியில் 15 தென்னிலங்கை மீனவக் குடும்பங்களும் தங்கித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

முன்னர் மீனவர்கள் மட்டுமே தற்காலிக கொட்டகைகள் அமைத்து மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர். தற்போது அவர்கள் குடும்பங்களுடன் வந்து தங்கியிருந்து தொழில் செய்கின்றனர்.

இந்த மீனவர்கள் தாம் பிடித்த மீன்களை 'கூலர்' வாகனங்களில் தென்னிலங்கைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர்.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சிறிய படகு, வலைகள் ஆகியவற்றையே மீன் பிடிக்கு இவர்கள் பயன்படுத்துகின்றனர். இவர்களால் பெருமளவில் தொழிலில் ஈடுபட முடியவில்லை.

தென்னிலங்கை மீனவர்கள் சட்டவிரோதமான முறையில் மீன் பிடிப்பதால் உள்ளூர் மீனவர்கள் தொழிலுக்கு செல்வதற்கு அச்சம் அடைகின்றனர் என்று கடல்தொழிலாளர் சங்கங்கள் கூறுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கடல் தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் சென்றிருந்தார். இதன்போது நாயாறு, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் குறித்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதையடுத்து அனுமதி பெறாத தென்னிலங்கை மீனவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அமைச்சர் உத்தரவிட்டிருந்தார். ஆயினும் அந்த உத்தரவைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தொடர்ந்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (த-13)

## ஐ.நா.விட்ட...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யும் நேற்று பான் கீ - மூனிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதை பொதுமக்களுக்கு வெளியிட்டார் பான் கீ மூன் -

''தமது உள்ளக குழு ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்கிறோம்.

இறுதி போர்க் காலத்தில் இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபை தமது பொறுப்புகளை சரிவர செயற்படுத்தவில்லை. இதனை ஐக்கிய நாடுகள் சபை ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும்.

இனிவரும் காலங்களில் ஐக்கிய நாடுகள் சபை மீதான நம்பிக்கையை மக்கள் இழக்காமல் அதன் செயற்பாட்டாளர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் -பான்கீ-மூன் தெரிவித்தார். (உ-சி)

## தாதியர்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தமது ஐந்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுமாறு கோரி நாடெங்கிலுமுள்ள அரச 9 வைத்தியசாலைகளிலும் தாதியர்கள் நேற்று வியாழக்கிழமை காலை தொடக்கம் இன்று காலை 6 மணிவரை சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி, பருத்தித்துறை, காரைநகர், கரவெட்டி ஆகிய ஆதார வைத்தியசாலைகள் சங்கானை, வேலணை பிரதேச வைத்தியசாலைகள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகள் உட்பட பல இடங்களிலும் போராட்டம் காரணமாக வைத்தியசாலையின் நாளாந்தப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

பிரதானமாக விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உரிய நேரங்களில் சிகிச்சை அளிக்க முடியாமல் போனது.

வைத்தியர்களுக்கும் வேலைச் சுமை அதிகரித்தது. ஏனைய ஊழியர்கள் தம்மால் இயன்ற அளவு பணிகளை மேற்கொண்ட போதும் நோயாளர்களுக்குத் திருப்தியான சேவை கிடைக்கவில்லை.

வாரத்தில் 5 நாள்களை மட்டும் வேலை நாள்களாக மாற்றி 2 நாள்கள் விடுமுறை வழங்க வேண்டும் 'மேலதிக கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும், 'இடர்காலக் கொடுப்பனவு மற்றும் உடைமைகள் காப்புப்படி அதிகரிக்கப்பட வேண்டும் 'தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மாகாண ரீதியிலான தாதியர் ஆள்சேர்ப்பை நிறுத்த வேண்டும், முன்னர் வலியுறுத்தியதன்படி தாதியர்களுக்கான அரசமைப்பைத் திருத்தி அமைத்தல் வேண்டும்'' ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே தாதியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் தாம் மீண்டும் போராட்டத்தில் குதிப்பார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (த-4-9)

## பளை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டார். அடிகாயங்களுக்கு உள்ளான அவர் பின்னர் உயிரிழந்தார்.

எழுவைதீவைச் சேர்ந்த இவர் முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயத்தின் உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றி வந்தார்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் இருந்து புறப்பட்டிருந்தார். தாளையடிக்குச் சென்று அருட்தந்தை ஒருவரைச் சந்தித்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தார்.

இரவு 10 மணியளவில் இவர் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் பளைக்கும் மருதங்கேணிக்கும் இடையில் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த அவர் பளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இடைவழியில் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் யாழ். ஆயர் இல்ல குருக்களிடம் கையளிக்கப்பட்டது. விபத்துக்கான காரணம் சரிவரத் தெரியவில்லை. (த-7)

## '13' மீது...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டு தீர்வு வழங்கப்படவேண்டும் என்று இந்தியா கூறுகின்றது. 13 ஆவது திருத்தத்துக்கு ஏற்ப தீர்வு வழங்கப்படும் என்று இலங்கை அரசு இந்தியாவிடம் உறுதியளித்துள்ளது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் அதிகாரப்பகிர்வை சிபாரிசு செய்துள்ளன. ஆனால், அந்த அறிக்கைகள் அரசால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சந்திரிகா அம்மையாரின் தலைமையிலான அரசு 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் முன்மொழிவுகளைக் கொண்டுவந்த போது அந்த அரசில் அமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் சம்மதமும் இதில் உள்ளடங்கி இருந்தது. இப்போது இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்ன?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகள் ஆதரவுக் கட்சி என்று அரசு கூறுகின்றது. ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் அவர்கள் தான் புலிகளுடன் அதிக தொடர்பு வைத்திருந்தனர்.

அதுமாத்திரமன்றி, புலிகளின் பல முக்கிய தலைவர்கள் அரசுடன் உள்ளனர். அவர்களை நல்லமுறையில் கவனித்து அவர்களிடமிருந்து நல்ல பயன்களை அரசு பெறுகின்றது.

சிங்கள மக்களின் ஆதரவைத் தொடர்ந்தும் பெறவேண்டும் என்பதற்காக மீண்டும் புலிகள் வருவார்கள் என்றொரு மன நிலையை மக்கள் மத்தியில் இந்த அரசு தோற்றுவித்துக்கொண்டிருக்கிறது.

தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அரசு அழுத்தங்கொடுத்து வருகின்றது. பொருளாதார நலன்களுக்காகத்தான் அவர்கள் வெளியேறுகிறார்கள் என்று காட்டுவதான் மூலம் தமிழர்களுக்குப் பிரச்சினைகள் இல்லை என்று உலகுக்குக் காட்டப்பார்க்கின்றது.

தமிழ் மக்களின் சட்டரீதியான உரிமைகளை வழங்குவதற்கு மறுக்கும் அரசு அவர்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக ஆட்சிசெய்வதற்கே விரும்புகிறது. இது சர்வதேச சட்டத்தை மீறுவதாகும்.

தமிழர்கள் இன்று சர்வதேச ஆதரவைக் கோரி நிற்கின்றனர். இது எமது உரிமை என்பதால் எந்தவொரு நாடும் இதைத் தடுக்கவில்லை. எமக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

சர்வதேச தலையீட்டை நிறுத்தக்கோரும் அருகதை இந்த அரசுக்கு இல்லை. நான் இந்த அரசில் அதிருப்தியடைந்துள்ளேன்.

அரசு வாயால் கூறுவதை நடைமுறைப் படுத்துவதில்லை. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று அரசு கூறியது. அந்தத் தீர்வு எங்கே?

ஒரு நாட்டின் உள்விவகாரத்தில் சர்வதேசம் தலையிட முடியாதுதான். இருந்தாலும், சர்வதேசத்துக்கு ஒரு பொறுப்புண்டு. இந்த அரசின் தடுமாற்றத்திற்கு அதில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளும் காரணமாகும் - என்றார். (உ-சி)

## வன்னியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பூர்வ நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாரதிபுரத்தில் விரைவில் நடைபெறும் என்று பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

அடிப்படைப் பயிற்சிகளின் பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே இந்தப் பெண்கள் இப்பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்று கூறப்படுகிறது.

இணைத்துக்கொள்ளப்படவுள்ள பெண்களின் பெற்றோர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்து முறைப்படி, இணைப்பு சம்பிரதாயங்கள் இடம்பெறும் என்று இராணுவப் பேச்சாளர் கூறினார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள இராணுவ முகாம்களால் நடத்தப்படும் பயிற்சி நிலையங்களுக்கு வரும் பெண்களில் இருந்து இந்த 100 பேரில் பெரும்பான்மையானவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனை 28.10.2012 'சூரியகாந்தி' பதிப்பில் 'இராணுவத்துக்குப் பெண் எடுக்கிறார்கள்' என்ற தலைப்பில் உதயன் அம்பலப்படுத்தி இருந்தது.

வன்னியில் நிலவும் வேலைவாய்ப்பின்மை, இளம்பெண்களில் சிலரையாவது இராணுவத்தில் சேர நிர்ப்பந்திக்கிறது என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (உ-16)

## அறிக்கையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மைகளைத் தடுக்க நாம் மேற்கொண்ட முயற்சிகளை குழுவின் அறிக்கை அங்கீகரித்துள்ளது. எவ்வாறாயினும், நாம் இன்னும் அதிகம் செய்வதை உறுதிப்படுத்த வேண்டிய முழுமையான பொறுப்பு உள்ளது.

அதன் உடனடியான முதல் நடவடிக்கையாக, இந்தப் பரிந்துரைகளைக் கவனமாக ஆராய்ந்து எனக்கு ஆலோசனை கூறுவதற்கு ஒரு மூத்த அதிகாரிகள் குழுவை நியமிக்கவுள்ளேன்.

ஐ.நாவின் சட்டபூர்வத்தன்மை மற்றும் நம்பகத்தன்மைக்கு வெளிப்படைத்தன்மையும், பொறுப்புக்கூறலும் மிகவும் முக்கியமானவை.

இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துவதற்கு நான் பல நாள்கள் முன்னதாகவே தீர்மானித்து விட்டேன்.

ஐ.நா. பொதுச்செயலர் பதவியை ஏற்றுக் கொண்ட காலத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் ஐ.நாவின் அடிப்படை நோக்கத்தை வலுப்படுத்துவதில் உறுதியாக உள்ளேன்'' என்று பான் கீ மூன் தெரிவித்தார். (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி கல்விக் கோட்டத்தில் ஆறு பாடசாலைகளுக்கு மூடுவிழா

அக்கராயன், நவ.16

பல்வேறு காரணங்களால் கிளிநொச்சி மாவட்டம் பூநகரிக் கல்விக்கோட்டத்தில் ஆறு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னாவெளி அ.த.க, பல்லவராயன்கட்டு அ.த.க, தம்பிராய் அ.த.க, செட்டிய குறிச்சி அ.த.க, அத்தாய் முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம், கௌதாரிமுனை அ.த.க ஆகிய பாடசாலைகளே மூடப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றன.

தற்போது பூநகரிக் கல்விக் கோட்டத்திலுள்ள 30 பாடசாலைகளில் இந்த ஆறு பாடசாலைகள் நீங்கலாக 24 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

பூநகரியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தமை, இடம்பெயர்ந்த பலர் தமது சொந்த இடங்களில் மீள்குடியமராது நகரங்களை நோக்கி நகர்ந்துள்ளமை, மக்களின் வாழ்விடங்கள் உவராக மாறியமை, தொழில் முயற்சி இல்லாமை காரணமாக மக்கள் தொழில்தேடி வேறு இடங்களை நாடியமை ஆகிய பல்வேறு காரணங்களால் இந்தப் பாடசாலைகள் இயங்காத நிலையிலுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்லவராயன்கட்டுக் கிராமம் முழுமையாக உவரடைந்திருப்பதனால் அங்குள்ள பாடசாலை இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

ஜெயபுரம் கிராமமும் உவராகும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை மூடிய நிலையில் இருக்கும் இந்தப் பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தினர் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

**புதிய பாடல்களுக்கான இசையமைப்பு, ஒளிப்பதிவு**

இசையமைப்பாள ஹரிகுகனின் இனிய இசையில் ஆலய பக்தி கீதங்கள் புதிதாக இசையமைத்து, ஒலிப்பதிவு செய்து தரப்படும்.

ஏனைய குரல் ஒலிப்பதிவு தேவைகளுக்கும்..........

ஸப்தஸ்வரம் ஒலிப்பதிவு கலையகம்

விநாயகர் வீதி, கல்வியங்காடு.

0776980573

(25395)(3.14)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com

0215671111

# அடம்பன் கள்ளிக்குளம் வீதியில் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்கள்

## கால்வாயைக் கடக்க பாலம் அமைக்கப்படவில்லை

*மன்னார், நவ. 16*

*கள்ளிக்குளம் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாததுடன் பாலமும் நிர்மாணிக்கப்படாமையால் இந்த வீதி வழியாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். மன்னார், அடம்பன் பிரதேசத்தின் கள்ளிக்குளம் கிராமத்தில் காணப்படும் விவசாய வீதியானது மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாததுடன் அவ்வீதிக்கான பாலமும் அமைக்கப்படவில்லை. இந்த வீதி கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட விவசாயப்பகுதியின் பயன்பாட்டுக்கு உரியதாகும்.*

இப்பகுதியில் ஏறக்குறைய 100 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாயக்காணிகள் வருடந்தோறும் செய்கை பண்ணப்படுகின்றன.

நெற்செய்கையின் பொருட்டு பயன்படுத்தப்படும் அனைத்து உழவு இயந்திரங்களும் பாலமின்மையால் கால்வாயின் குறுக்காகவே இறக்கி ஏற்றப்படுகின்றன. இதனால் அந்த இடம் சிதைந்து போய்க் காணப்படுகின்றது.



புனரமைக்கப்படாத கள்ளிக்குளம் வீதி

அத்துடன் உழவு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் அனைத்து உழவு இயந்திரங்களும் இக்கால்வாயினுள் நிறுத்தியே கழுவப்படுகின்றன. இதனால் கால்வாயின் இரு பகுதிகளும் சேதமடைந்துள்ளதுடன் நீர் விநியோகத்தின் போது நீர் கால்வாயினைக் கடந்து வெளியேறும் நிலையும் தோன்றியுள்ளது.

இதனால் கள்ளிக்குளம் கிராமத்தில் நீண்டகாலமாக வசித்து வரும் குடும்பங்கள் போக்குவரத்தில் சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றன.

இந்த மக்கள் தமது போக்குவரத்துக்கென ரயில் தண்டவாளங்களினால் அமைக்கப்பட்ட மூன்று அடி அகலமான தற்காலிக கடவையையே பயன்படுத்துகின்றனர். இதனூடாக ஓட்டோக்கள் கூடச் செல்ல முடியாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் திடீர் சுகவீனம் அடையும் நோயாளிகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையில் இங்குள்ள மக்கள் அவலப்பட்டு வருகின்றனர்.

எனவே இந்த வீதியை உடனடியாகப் புனரமைத்து அதன் கீழ் வரும் பாலத்தையும் அமைத்து தமது போக்குவரத்துச் சிரமங்களை நீக்கித்தருமாறு கள்ளிக்குளம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-86)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி இராசையா



இருபாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி இராசையா நேற்றுமுன்தினம் (14.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலைகிழக்கு,
அரசடிலேன் இருபாலை. (25394)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி லில்லி ஜேற்றூட் பற்றிக்



யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தை வசிப்படமாகக் கொண்ட திருமதி லில்லி ஜேற்றூட் பற்றிக் அவர்கள் (14.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு -மாகிறேட் தம்பதியாரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை -றோசமுத்து தம்பதியாரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை பற்றிக் இன் அன்பு மனைவியும், இரவீந்திரன் (ஜேர்மனி), குணேந்திரன் (ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ் மாநகர சபை), தனேந்திரன் (எஸ்.ஜே எலேக்ரிக்கல்ஸ்), சுரேந்திரன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், ஹட்டன்), சுகந்தி (கனடா), விஜேந்திரன் (கியுடெக், வன்னி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மேரி, யுகலிஸ்டா(ஜேர்மனி), கொண்செப்ரா (முன்னாள் பிரதம லிகிதர், கத்தோலிக்க அச்சகம்), யூலியட் சகாயராணி ( ஆசிரியர் திருக்குடும்ப கன்னியர்மடம், புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி பாசையூர்), றுகுணகுமாரி (ஹட்டன்), பத்மராஜா (கனடா), யூடி ஜக்குலின் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை வலிகாமம் கிழக்கு) ஆகியோரின் மாமியாரும், ஜெயமணி (டென்மார்க்), இந்திராணி (மன்னார்), புஸ்பராணி (ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர்), ஜெயராணி, சந்திராணி (லண்டன்), இராஜ குமாரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நீக்கலஸ் (டென் மார்க்), காலஞ்சென்ற அருள்ரெட்ணம் மற்றும் பாலேந்திரா, இரட்ணராஜா, இராஜகுலேந்திரன், சியாமளா, செல்வராஜா, காலஞ்சென்ற மேரி இமெல்டா, மற்றும் பொன்ராசா, எட்வேட், மேரி பெனிஸ்டஸ், பிரான்சிஸ் ஆகியோரின் மைத்துனியும் ஜனீனா, எறேனா, லியோனா, எமேர்ஸன், துஹானி, டரின், சறுக்ஸன் (ஹட்டன்), குயின்ரன், எல்டன், ஜெய்சன், சுரோஸன், சுரோன்ஸியா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 16.11.2012 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*1/14 புது வீதி, முதலாம் ஒழுங்கை*
*கொய்யாத்தோட்டம்* (25392)

தகவல்:
குடும்பத்தினர்.

# முல்லைத்தீவில் கடந்த ஆண்டைவிட அதிகளவில் நிலக்கடலை செய்கை

முல்லைத்தீவில் இம்முறை கடந்த ஆண்டைவிட அதிகளவில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேவிபுரம், வள்ளிபுனம், கைவேலி, உடையார்கட்டு, தேராவில், றெட்பானா உள்ளிட்ட பகுதிகளில் கடந்த ஆண்டை விட அதிகளவான நிலப்பரப்பில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமர்ந்த நிலையில் அதிகளவான நிலப்பரப்பில் நிலக்கடலைச் செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தகவலை அந்தப் பகுதிகளிலுள்ள கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நிலக்கடலைச் செய்கையில் அதிக அறுவடை கிடைத்து உரிய விலையும் கிடைக்குமாயின் மீள்குடியமர்ந்த மக்கள் அதிக பயனைப் பெற முடியுமெனவும் தெரிய வருகின்றது. (க-6)

# மது விற்பனையாளருக்கு தண்டமும் சிறையும்

கிளிநொச்சியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டமும், சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன.

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பினை தனது உடைமையில் வைத்திருந்த ஒருவரை கடந்த 6 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ். விஜயராணி முன்பாக முன்னிலைப்படுத்தினர்.

இந்த நபருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் இந்த நபர் ஏற்கனவே நீதிமன்றினால் தண்டிக்கப்பட்ட போதும் அதே குற்றத்தைச் புரிந்தமையால் இரண்டு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

**ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பினை வைத்திருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

# தற்காலிக வீடுகள் அமைப்பதற்கு உதவிகள்

நெளுக்குளம், நவ.16

வவுனியா மாவட்டம் போகல கிராம சேவையாளர் பிரிவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சரால் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

சுமார் 150 குடும்பங்கள் இங்கு மீள்குடியமர்ந்துள்ளன. கடந்த 11 ஆம் திகதி இங்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சரான குணரத்ன. வீரக்கோன் தற்காலிக வீடுகளை அமைக்கும் பொருட்டு குடும்பமொன்றுக்கு எட்டு பைக்கற் சிமெந்து, 12 கூரைத் தகரங்கள் ஆகியவற்றை வழங்கினார்.

அன்றைய தினம் பிற்பகல் வவுனியா அரச அதிபர், தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் போது இந்த உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)

# மழை வெள்ளத்தால் அவதியுறும் அனிஞ்சியன்குளம் கிராம மக்கள்

துணுக்காய், நவ.16

அனிஞ்சியன்குளம் கிராமத்தில் பெய்து வரும் மழையினால் வெள்ளம் ஏற்பட்டதால் தாழ்வான நிலப் பகுதியில் வாழும் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களில் கடும் வறட்சிக்குப் பின்னர் தற்போது மழை பெய்து வருகின்றது. இதனால் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனிஞ்சியன் குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்த 2 ஆம் பகுதியில் தாழ்வான பகுதியில்உள்ள நான்கு வீடுகளில் மழை வெள்ளம் நிறைந்து நிற்பதால், இந்த வீடுகளில் வசிப்பவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.



மேலும் இவர்கள் உபயோகிக்கும் வீதியும் சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் மக்கள் சிரமத்தின் மத்தியில் பயணிப்பதைக் காண முடிகின்றது. எதிர்வரும் ஆண்டிலாவது மக்களின் வாழ்விடமான தாழ்ந்த பகுதியை உரியவர்கள் புனரமைப்பார்களாவென பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.(க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சச்சிதானந்தம்

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சச்சிதானந்தம் (சச்சி) நேற்று (15.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜகாரியர் வீதி (உச்சியோடை),
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். (25398)(9.14)

தகவல்:
குடும்பத்தினர்.

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

**NOV.'2012 TO APRIL'2013**

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## தவறிவிட்டது

15.11.2012 மதியம் 12 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் Toyata keytech போடப்பட்ட Premio கார் திறப்பு தவறிவிட்டது. அதனை கண்டு எடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(#/1846)(3.14) **0777229080**

## வீடு வாடகைக்கு

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் st.Ann's Lane இல் விசாலமான வரவேற்பறை 4 படுக்கையறைகள், 2 குளியலறைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் கூடிய 3 1/2 பரப்பு காணியில் அமைந்த வீடு உடன் வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்களுக்கு உகந்தது)

தொடர்பு-0774527671
0217903444

(25389)(6-14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**ரவீந்திரன் மனோஜின்**

யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையிலிருந்து தோற்றி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த, சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த **ரவீந்திரன் - சாந்தலட்சுமி** தம்பதியரின் செல்வப் புதல்வன் **மனோஜின்** அவர்களைப் பல்கலையும் கற்றுக் கல்வியில் சிறப்புற மனமார வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*

**வீ.மகேந்திரன் (சித்தப்பா), டுபாய், ம.பத்மரூபி (சித்தி). அபிதன் (தம்பி). சாருஜன் (தம்பி), லக்ஷிகா (தங்கை)**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

(#/1841)(2-5.7)



## திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் கார்த்திகைத்திங்கள் 3-ம் நாள் (18-11-2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணி தொடக்கம் 12.00 மணி வரையுள்ள உத்தராட நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்



எமது புத்திரன், திருநிறைச் செல்வன்
**பாலமுருகன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி, திருநிறைச் செல்வி
**அகலியா**
அவர்களுக்கும்




எம்பெருமான் திருவருள் துணையும் சான்றோர் ஆசியும் பெற்று இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருமண மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை இனிதே எதிர்பார்க்கும்**

**திரு. திருமதி R கணேசன்**
**சிவபாதம்(நாதஸ்வரம்)**
**சுலோசனா**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

(இருவீட்டார் அழைப்பு)
**0213215594, 0773768457**

**திரு. திருமதி k. நகுலேசன் விஜி குடும்பத்தினர்.**
**சங்கம் வீதி, சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**



# லக்ஷ்மி இஞ்சினியரிங்

# Lukshmee Engineering

**கணினி பழுதுபார்த்தல், வலையமைப்பு (Computer Repair, Net works, Computer Services)**

*Computer Services - 350.00 * Windows Installation - 500.00
*Computer Repair - 500.00 * Software Installation - 100.00 (per one)

**மின்இணைப்பு வேலைகள் (House & Industrial wiring)**

*5APlug Point- 350.00 *Light Point - 350.00 *Fan Point -350.00
*15A Plug Point - 450.00 * D Box - 1500.00

**மீளச்சுற்றுதல் (Rewinding Works)**

பான், மோட்டார், கிறைண்டர், டைனமோ, ராண்ஸ்போமர்.

**குழாய் பொருத்துதல் (Plumbing Works)**

1 அடி - 30.00 தொடக்கம் 40.00

**மின் ஒட்டுதல், கேற் ,கிறில், றஸ், றோலிங் சட்டர் வேலைகள் (Welding. Gate, Grill , Truss, Roller Shuter works)**

கேற்-சாதாரணம் 10' - 25000.00 கிறில் - சதுரஅடிக்கு - 350.00
றோலிங் சட்டர் - சதுரஅடிக்கு- 525.00 றஸ் நீளஅடி - 1300.00

**கடைச்சல் வேலைகள் (Lathe Works)**

ஒவ்செற் அச்சு இயந்திரங்கள் பழுது பார்த்தலும் அதற்கான கடைச்சல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

பேப்பர் கட்டர் கத்தி தீட்டிக்கொடுக்கப்படும். (இயந்திரம் மூலம்)

**வாகன சுத்திகரிப்பு (Vehicle Services)**

மோட்டார் சைக்கிள் - 350.00

**TP.021 567 0256**

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்மம் தொடர்ந்து நீண்டால் அதன் வினை நீண்டு தாவும்..

ஐ.நா. உள்ளக விசாரணைக் குழு அறிக்கை வெளிவந்து அதனால் ஏற்பட்ட பரபரப்பு அடங்குவதற்கு முன்னர், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரங்களுக்கான குழு வெளியிட்டுள்ள அறிக்கை அடுத்த நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய நாடுகளினது தலைவர்களின் உச்சி மாநாட்டில் பிரிட்டன் பங்குபற்றுவதைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

53 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய அமைப்பின் தலைமை நாடான பிரிட்டன் இலங்கையின் விவகாரத்தை முன்வைத்து உச்சிமாநாட்டைப் பகிஷ்கரிக்குமானால், அது இலங்கைக்கு ஒரு பின்னடைவாகவே கருதப்படும்; அமையும். பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் நெருக்கடி அதிகரிக்கவும் வகை செய்யும்.

சமீப காலமாக, வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின்போது இடம்பெற்ற பேரழிவுகளுக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாடு, நல்லிணக்கம், மனித உரிமைகள் மீறல் போன்ற விடயங்களில் முழுதாக அக்கறை காட்டிச் செயற்பட வேண்டும் என்று இலங்கை அரசிடம் பிரிட்டனின் டேவிட் கெமரூன் அரசு வலியுறுத்தி வந்தது. தற்பொழுது பொதுநலவாய தலைவர்களின் உச்சிமாநாட்டைப் பகிஷ்கரிக்கும் கோரிக்கையை பிரிட்டனின் வெளிவிவகாரங்களுக்கான குழு முன்வைத்துள்ள நிலையில், எதிர்காலத்தில் இலங்கை விவகாரத்தில் பிரிட்டனின் போக்கு கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்தும் முடிவு தவறானது என்று தெரிவித்துள்ள வெளிவிவகாரங்களுக்கான குழு, கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் போன்று டேவிட் கெமரூன் மிகவும் தெளிவான, உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுத் தொடர்பாக இலங்கை முன்னேற்றகரமான செயற்பாடுகளைக் காண்பிக்கத் தவறும் பட்சத்தில், இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கனேடியப் பிரதமர் ஏற்கனவே அறிவித்திருந்தார். நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை ஏதாவது முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதா என்பதை கனடா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகச் சமீபத்தில் தெரிவிக்கப்பட்டது.

இன்னும் ஒருவருட கால அவகாசம் இலங்கைக்கு இருக்கிறது. அதற்கு முன்னர், முன்னேற்றகரமான நடவடிக்கைகளை இலங்கை காண்பிக்க வேண்டும் என்பது கனேடியப் பிரதமர் ஹாபரின் நிலைப்பாடு. அதே நிலை நின்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமெரூனும் பகிரங்கமாகத் தனது முடிவை அறிவிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை வெளிவிவகாரக் குழுவின் அறிக்கை ஏற்படுத்தி உள்ளது.

பிரிட்டன், கனடா ஆகிய இருநாடுகளுமே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு நடத்திய போரின் போது, இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டவை. விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையும் இந்த நாடுகளில் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது. எனினும், இறுதிப் போர் வேளையில் மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் என்று இந்த நாடுகள் எதிர்பார்க்கவில்லை.

இலங்கை அரசு தமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்றே இந்த நாடுகள் நம்பின. ஆனால் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாக இந்த நாடுகள் தற்போது கறுவுகின்றன. இந்த இரு நாடுகளும் பொதுநலவாய உச்சி மாநாட்டை பகிஷ்கரிக்குமானால், அது தனது முக்கியத்துவத்தை இழந்துவிடும். எதிர்காலத்தில் பொதுநலவாய அமைப்புக்கு இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதன் மதிப்பும் இறங்கிவிடலாம். அதன் பலமும் உடைந்து போகலாம்.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா வருட ஆரம்பத்தில் இலங்கை வந்த வேளையிலும், மாநாட்டை இலங்கையில் நடத்துவதில் உண்டாகக் கூடிய தடங்கல்கள் குறித்து அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. மாநாட்டு இடத்தை மாற்றுவதற்கான வாய்ப்புக் குறைவு என்று அவர் அப்பொழுது கருத்துத் தெரிவித்திருந்தார். மீண்டும் கடந்த மாதம் அவர் வருகை தந்தபோது மனித உரிமைகள், நலலிணக்கம் குறித்து இலங்கை அரச தரப்புடன் பேச்சு நடத்தினார். ஆகவே மாநாட்டை இடம் மாற்றும் வாய்ப்பு மிகமிகக் குறைவு என்று கொள்ளப்பட்டது.

வேண்டுமானால் பொதுநலவாய மாநாட்டைப் பகிஷ்கரிக்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நெருக்கடியை எதிர்நோக்கும் இலங்கைக்கு பொது நலவாய அமைப்பிலும் நெருக்கடி உருவாகலாம் என்று கொள்ளப் பட்டது..

சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த இன்னும் ஒருவருட கால அவகாசம் இலங்கைக்கு இருக்கிறது. கனேடிய, பிரிட்டிஷ் பிரதமர்கள் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வது முழுக்க முழுக்க, இலங்கையின் நடவடிக்கைகளிலேயே தங்கி உள்ளது.

பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடு, மனித உரிமை மீறல்கள், போர் முடிவடைந்த பின்னரும் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பல நூற்றுக்கணக்கான தமிழர்களை விசாரணை இன்றித் தடுத்து வைத்திருப்பது, ஆள் கடத்தல், தடுப்புக்காவலில் சித்திரவதை, மட்டுப்படுத்தப்பட்ட பேச்சுச் சுதந்திரம், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளில் காணப்படும் மந்த நிலைமை, நல்லிணக்கம் ஏற்படுத்துவதில் இருந்துவரும் தயக்கம், தாமதம் ஆகியனவற்றை நீக்கி ஏனைய நாடுகள் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவில், இலங்கை முன்னேற்றங்களைக் காண்பிக்க வேண்டும்.

அதனைப் பற்றுறுதியுடன் செயற்படுத்தத் தவறின், மேற்குலகின் பகையை நிரந்தரமாகத் தேடிக்கொள்ளும் ஆபத்து ஏற்படலாம். மேலை நாடுகளின் முன்னணித் தலையாரிகளில் இரண்டான பிரிட்டனும் கனடாவும் செல்லும் வழியை ஏனையனவும் பின்பற்றும் சாத்தியம் அதிகம் உண்டு. அதனையும் இலங்கை அரசு அசட்டை செய்யுமாயின், வன்மம் தொடர்ந்து நீடிக்குமானால், அதன் விளைவு, வினை நீண்டு தாவும் என்பதனை மறக்கலாகாது.

# தமிழ் மக்கள் மீது அத்துரலிய தேரர் காட்டும் பரிவு வேடிக்கைக்குரியது

### கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்கரா தெரிவிப்பு

கொழும்பு, நவ.16

தமிழ் மக்கள் மீது அத்துரலிய ரத்ன தேரர் காட்டும் பரிவு வேடிக்கைக்குரியது. இது 'ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதை' போன்றது. இவ்வாறு கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி. பாஸ்கரா விசனம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தமிழ்த் தலைமைகள் குரல் கொடுப்பதில்லை என்று வலிந்து வருத்தம் தெரிவித்துள்ளார் வண. அத்துலியரத்னதேரர்.

ஆரம்ப காலங்களில் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள் குறித்து இவரது கட்சி ஒரு வார்த்தையும் பேசவில்லை.

தமிழ் மக்களின் உச்சக்கட்ட இழப்பான முள்ளிவாய்க்கால் இழப்பைப் பற்றிக்கூட எதுவும் பேசவில்லை.

அதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் பெரும் துன்பம் அடைந்த போது அவர்களது துயர் துடைப்புப் பற்றியும் எதுவும் பேசவில்லை.

இந்த நிலையில் அண்மையில் தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்த் தலைமைகள் குரல் கொடுப்பதில்லை என்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களது உணர்வுகளையும் உரிமைகளையும் கிள்ளி விளையாடமுனையும் பெரும்பான்மை இனவெறி, மத வெறிபிடித்த கட்சிகளை உலக நாடுகள் கண்டித்த போதும் தேரர் இன, மதவாதக் கருத்துகளைத் தாராளமாக தெரிவித்து வந்தார்.

இந்த நிலையில் தற்போது கூறப்பட்டுள்ள கருத்து வேடிக்கைக்கு உரியது- என்றுள்ளது. (ம)

# சட்டவிரோத முறைகளில் மீன்பிடி இந்த வருடம் 30 முறைப்பாடுகள்

### கடற்றொழில் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.குடாநாட்டுக் கடற் பரப்பில் சட்டவிரோதமான முறையில் கடற்தொழிலில் ஈடுபட்டோர், அனுமதிப்பத்திரம் இன்றி மீன்பிடியில் ஈடுபட்டோர் என்று இந்த வருடத்தில் 30 குற்றங்கள் பதிவாகியுள்ளன என்று யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வந்துள்ளதாவது:-

கடற்றொழில் சட்டங்களுக்கு அமைவாக கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தமது படகுகளின் பதிவுகளைத் திணைக்களத்தில் வருடா வருடம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

மீன்பிடியைத் தவிர்த்து சங்கு பிடித்தல், கடலட்டை பிடித்தல் ஆகியவற்றுக்கு திணைக்களத்திடம் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

இழுவைப்படகு பாவித்தல், தங்கூசிவலை பாவித்தல், டைனமற் பயன்படுத்துதல் போன்றன சட்ட விரோதமான மீன்பிடிமுறைகளாகும். இந்த வருடத்தில் மட்டும் படகுகளில் பதிவிலக்கம் இன்றி மீன்பிடித்தல், அனுமதிப் பத்திரம் இன்றி மீன்பிடித்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்டோர் தொடர்பில் 5 வழக்குகளும், டைனமற் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்தில் 5 வழக்குகளும் இழுவைப்படகு பாவித்து தொழிலில் ஈடுபட்ட குற்றத்தில் 12 வழக்குகளும், கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் 5 வழக்குகளும், சங்கு பிடித்த குற்றச்சாட்டில் 2 வழக்குகளும் தங்கூசிவலை பாவித்த குற்றத்தில் ஒருவழக்கும்பதிவாகியுள்ளன.

இந்தக் குற்றங்களின் வழக்குகள் நடைபெற்று குற்றப்பணத்தை நீதிமன்றம் அறவிட்டுள்ளது.

சட்டவிரோதமாக இழுவைப் படகு பாவித்த குற்றச்சாட்டில் 12 வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில் 5 வழக்குகள் இன்னமும் நிலுவையில் உள்ளன. இதில் 4 வழக்குகள் எதிர்வரும்3ஆம்திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. ஒரு வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இழுவைப்படகுகளைப் பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவது சட்ட விரோதமானதென அறிவிக்கப்பட்ட போதும், குருநகர், ஊர்காவற்றுறை, மாதகல், வேலணை ஆகிய கடற் பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

குருநகரில் மட்டும் 150 வரையான இழுவைப்படகுகள் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இது குறித்துப் பல தடவைகள் எச்சரிக்கப்பட்டும், மீண்டும் மீண்டும் தொழிலில் அவற்றை ஈடுபடுத்துகின்றனர்.-என்று தெரிவிக்கப்பட்டது. (ம-13)

# ஏழு பாடசாலைகளில் மலசலகூடங்கள் இன்று கையளிப்பு

வடமராட்சி,நவ.16

பருத்தித்துறை கல்விக் கோட்டத்தில் உள்ள ஏழு பாடசாலைகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூடங்கள் இன்று வெள்ளிக்கிழமை கையளிக்கப் படவுள்ளன.

காலை 8.50 மணிக்கு ஆரம்பமாகும் இது தொடர்பான நிகழ்வுகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இணைப்பாளர் செல்வி ரபெக்கா, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் என்.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வேலாயுதம் மகா வித்தியாலயம், சித்தி விநாயகர் வித்தியாலயம், கரவெட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை ஆகிய ஏழு பாடசாலைகளிலும் அமைக்கப்பட்ட மலசலகூடங்களே இவ்வாறு கையளிக்கப்படவுள்ளன. (ம-8)

# தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கு வீடமைக்கும் ஜெயலலிதாவுக்கு நன்றிகள்

### கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,நவ.16

போரால் பாதிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு சென்றுள்ள இலங்கை அகதிகளுக்கு 2500 வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபாகணேசன் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாகஅனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1983 ஆம் ஆண்டு கலவரம் முதல் கொண்டு போர் நடைபெற்ற காலம்வரை பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இவர்களது நலன் மீது தமிழ்நாடு அரசுகள் எவ்வித அக்கறையும் கொண்டிருக்கவில்லை.

இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா, இவர்களது நலனில் அக்கறை கொண்டு 2500 புதிய வீடுகளை பல மாவட்டங்களில் அமைத்துக் கொடுக்க முன்வந்திருப்பது அகதிகளின் வாழ்வில் நிச்சயமாக மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.

உலகத் தமிழ் மக்களின் தலைவர் என்று சொல்லிக்கொள்ளும் கருணாநிதி வெறுமனே ஊடகங்களுக்கு உணர்ச்சிவசப்பட்ட செய்திகளை வழங்குவதிலும் மேடைகளில் ஈழத் தமிழர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பதிலுமே காலத்தை கடத்தி வருகின்றார்.இப்போது புதிதாக டெசோ என்ற ஆயுதத்தை கையில் எடுத்திருக்கின்றார்.

ஈழத்தமிழர்களுக்காக இவர் நடத்திய ஆர்ப்பாட்டம் எதுவும் எமக்கு நன்மை பயக்கவில்லை. மாறாக தமிழ்நாட்டு தமிழர்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் என்ற நிலைப்பாட்டையே தோற்றுவித்துள்ளது.

அது மட்டுமன்றி இவரது காலத்தில்தான் இறுதிக்கட்ட போர் நடைபெற்றது.பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் போரில் உயிரிழந்த போது இவர் வாய்மூடி மௌனித்திருந்தார்.

ஆனால் தமிழ் மக்களுக்காக உணர்ச்சி பொங்க பேசாத ஜெயலலிதா எவ்வித ஆர்ப்பாட்டமும் விளம்பரமும் இல்லாமல் அமைதியான முறையிலே 25 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் 2500 வீடுகள் கட்டிக் கொடுக்க உள்ளார். இதுவே எம் மக்களுக்கு இன்றைய தேவையாகும்.

எந்த அரசு வந்தாலும் எமது மக்களுக்கான தீர்வை வழங்கப் போவதில்லை. ஆகவே ஜெயலலிதாவை முன்மாதிரியாகக் கொண்டு உள்நாட்டில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்றம் முதற் கொண்டு தேவையானவற்றை செய்து கொடுப்பதே மக்கள் பிரதிநிதிகளின் முதல் பணியாக இருக்க வேண்டும்-என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையாகிய வாகனங்கள் திரும்பி வந்தன சங்கத்திடமே

## 'உதயன்' செய்தியால் திருப்பம்

யாழ்ப்பாணம், நவ. 15.
இரும்புக்காக விற்பனை செய்யப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுச் சர்ச்சையைக் கிளப்பிய, வடபிராந்திய பாரவூர்திச் சங்கத்துக்குச் சொந்தமான நான்கு வாகனங்கள் சங்கத்திடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் சங்கத்தின் தலைவர்.

ஏற்கனவே பாரவூர்திச் சங்கத்துக்குச் சொந்தமான 4 வாகனங்கள் இரும்புக்காக 8 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

மேலும் 4 வாகனங்கள் விற்பனை செய்வதற்கு சங்கத்தில் அனுமதி கோரப்பட்டு விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன. இதன்போது தவறான முறையில் அவை வெளியே கொண்டுசெல்லப்பட்டன.

இந்த விடயம் சங்க உறுப்பினர்களுக்குத் தெரியவர அதன்மூலம் பிரச்சினை வெளிக்கிளம்பியது.

இதனையடுத்து ஒரு பவுசர் வாகனம், ஒரு பஸ், இரண்டு லொறிகள் என்பன சங்கத்திடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளதெனச் சங்கத் தலைவர் உறுதிப்படுத்தினார்.

கடந்த மாதம் உதயன் பத்திரிகையில் வடபிராந்திய பாரவூர்திச் சங்கத்துக்குச் சொந்தமான பெறுமதி வாய்ந்த 8 வாகனங்கள் தவறான முறையில் இரும்புக்காக விற்பனை செய்யப்பட்ட சம்பவம் வெளிக்கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

## பொன்னாவெளி பாடசாலையை புதிய இடத்தில் இயக்க முயற்சி

### மக்களின் கோரிக்கைகளை அடுத்து

அக்கராயன், நவ. 16
கிளிநொச்சி, பூநகரியின், கிராஞ்சி, வேரவில் கிராமங்களை மையப்படுத்தி பாடசாலை ஒன்றை அமைத்துத் தரும்படி இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரண்டு கிராமங்களுக்குமிடையில் 5 கிலோ மீற்றர் தூரத்தில் பாடசாலைகள் கிராஞ்சியிலும், வேரவிலிலும் தனித்தனியே அமைந்திருக்கின்றன. இதனால் இடைப்பட்ட பகுதியில் இருக்கும் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இடைப்பட்ட பகுதியில் அதாவது, பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவில் உள்ள இடமொன்றில் புதிதாக ஒரு பாடசாலையை அமைத்துத் தருமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களின் கோரிக்கை தொடர்பாக பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரட்ணத்திடம் கருத்துக் கேட்டபோது,

இந்தக் கிராம மக்கள் தொடர்ச்சியாக தமக்கு புதிய பாடசாலை ஒன்றை உருவாக்கித் தரும்படி கோரிக்கை விடுத்து வருகின்றனர். பூநகரிக் கல்விக் கோட்டத்தில் தற்போது மூடப்பட்டுள்ள பொன்னாவெளி பாடசாலையை மக்களின் கோரிக்கைக்கு இணங்க அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொன்னாவெளிக் கிராம அலுவலர் பிரிவுக்குள்ளேயே கோயில் ஒன்றுக்கு அருகில் பாடசாலையை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ-18)

## உடையவன் வரவுக்காய்...



முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் போரினால் சேதமடைந்த வீடு ஒன்று இவ்வாறு காட்சி தருகிறது.

## மாணவர்களின் வெற்றிக்கு 'கையெழுத்து' சஞ்சிகை

அக்கராயன், நவ. 15.
மாணவர்களின் ஆக்கத் திறனையும், சுயதேடலையும் ஊக்குவிக்கும் ஒரு கருவியாக கையெழுத்துச் சஞ்சிகையின் வெளியீடு அமைந்துள்ளது. இவ்வாறு தெரிவித்தார் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி.

மாங்குளத்தில் நடைபெற்ற மாணவர்களின் 'கையெழுத்து' சஞ்சிகைகளின் வெளியீட்டு நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் மாணவர்களை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. மாணவர்களின் திறன்களை இனங்கண்டு அவற்றை வெளிக்கொண்டுவருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அத்துடன் அவர்களுக்குச் சரியான வழிகாட்டலையும் வழங்க வேண்டும் - என்றார். (ஐ-18)

### முல்லைத்தீவு கடல் பகுதிகளில்

## சட்டவிரோத மீன்பிடியால் சிறுகடல் தொழிலாளர் பாதிப்பு

கிளிநொச்சி, நவ. 16.
முல்லைத்தீவு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு, புளியாமுனையாறு போன்ற இடங்களில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் சிறுகடற்றொழிலாளர்கள் தொழில் செய்யமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட நீரியல் வளத்துறையினருடனான கலந்துரையாடலில் இந்தப் பகுதிகளில் சட்டவிரோத மீன்பிடிகளுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை எனவும், அது உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தடை செய்யப்படுகிறது எனவும், விதியை மீறி தொழிலில் ஈடுபடுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும் ஒரு மாதம் கடந்ததும் சட்டவிரோத மீன்பிடி முறைகளான கூட்டு வலை, வெளியிணைப்பு இயந்திரப்படகு பயன்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்வதாக அந்தப்பகுதி சிறுகடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோத மீன்பிடி முறைகளால் தொழில் உபகரணங்களை இழந்து இருக்கக்கூடிய சிறுசிறு உபகரணங்களைப் பயன்படுத்தி சிறுகடலில் தொழிலில் ஈடுபடும் தாம் வாழ்வாதார ரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் சிறுகடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-6)

## காடுகள் அழிப்பு

அக்கராயன், நவ. 16.
துணுக்காய், தென்னியங்குளம் வான் பகுதியில் நீர் வடிமானத்துக்குத் தடையாக இருந்த காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

மழை காலங்களில் குளத்தில் வான் பாயும்போது எதிரே உள்ள காட்டுப் பகுதியில் ஏற்படும் தடைகளால் நீர் தேங்கி குடிமனைப் பக்கம் நோக்கி நகரும்நிலையில் அந்தப்பகுதி மக்களால் குறித்த காட்டை அழிப்பதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு நீர்ப்பாசனத்திணைக்களத்தின் உதவியுடன் டோசர் வாகனத்தின் மூலம் குறித்த காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. (ஐ-18)

## வடிகால் அமைப்பு சீரின்மையால் கிளிநொச்சி நகரில் சூழல் பாதிப்பு

அக்கராயன், நவ. 16
கிளிநொச்சி நகர அபிவிருத்தியின்போது வடிகால் அமைப்புக்கள் சீர்செய்யப்படவில்லை. இதனால் பொது இடங்களில் நீர் தேங்கி நின்று மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகிறது. அத்துடன் ஆபத்தான நோய்கள் பரவவும் காரணமாக அமைகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி நகரின் பஸ் நிலையம், பொதுச்சந்தைப் பகுதி, ரயில் பாதையோரங்கள் போன்ற இடங்களில் நீண்ட நாள்களாக நீர் தேங்கிக் காணப்படுகிறது.

போரின்போது நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட மண் அணைகள் சரியாகச் சீர்செய்யப்பட்டு வடிகால் அமைப்புக்கள் சீர்செய்யப்படாமையே இதற்கான காரணமாக உள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பேசப்பட்டபோதும் வடிகாலமைப்புக்கள் இதுவரை சீர்செய்யப்படவில்லை.

ஆபத்தான தொற்றுநோய்கள் பரவிவரும் நிலையில் பொது இடங்களில் இவ்வாறான நிலை தோன்றியிருப்பது மக்களுக்கு ஆபத்தானதே என சுட்டிக்காட்டப்படுகிறது. (ஐ-18)

## ஜெயபுரத்தில் கல்வி நிலை பாதிப்பு

கிளிநொச்சி, நவ. 16.
கிளிநொச்சி, ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லாத நிலையில் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். இதனால் நீண்ட தூரத்துக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக முழங்காவில் மகாவித்தியாலயத்துக்கோ கிளிநொச்சி நகரப் பாடசாலைக்கோ செல்ல வேண்டி உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றர். (ஐ-18)

## யானையின் தொல்லைகள் ஒட்டுசுட்டானில் தொடர்கிறது

யாழ்ப்பாணம், நவ. 16.
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தென்னிலங்கையில் இருந்து கொண்டுவந்து விடப்பட்ட யானைகளின் அட்டகாசம் தொடர்கிறது. இதனால் 40 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பொதுச் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டுள்ளன.

அண்மை நாள்களாக ஒட்டுசுட்டான், முத்துஐயன் கட்டு போன்ற இடங்களில் யானைகளின் அட்டகாசம் தொடர்கிறது. இதனால் மக்கள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் இருப்பதுடன் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது.

யானைத் தொல்லை தாங்க முடியவில்லை என பல தடவைகள் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் அவர்கள் அதுதொடர்பில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இதுவரைக்கும் 40 வீடுகள் வரை சேதமாக்கப்பட்டுள்ளதுடன், முத்துஐயன் கட்டு வலதுகரைப் பாடசாலைக்கு உலக உணவுத் திட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் நாசம் செய்யப்பட்டுள்ளன.

பகல், இரவு பாராது கிராமங்களுக்குள் நுழையும் இந்த யானைகள் பயன்தரு மரங்களையும் விவசாய நிலங்களையும் நாசம் செய்வதால் யானைகளைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-6)

## உட்கட்டமைப்பு வசதிகளின்றி நட்டாங்கண்டல் கிராம மக்கள்

### தம்மையும் கவனிக்க கோருகின்றனர்



நட்டாங்கண்டல்,நவ.16
மீள்குடியேற்றம் இடம்பெற்று நீண்ட நாள்கள் ஆகியும் இதுவரை எந்த அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தாம் பல்வேறு நெருக்கடிகளுடன் வாழ வேண்டி இருப்பதாக மாந்தை கிழக்கு, நட்டாங்கண்டல் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக உட்கட்டுமான வசதிகள், வீதி போக்குவரத்து, மின்சாரம் என்பன இல்லாத நிலையில் தாம் பல்வேறு இடர்களை எதிர்கொள்வதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

நட்டாங்கண்டல் கிராமத்தில் 350 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மீள்குடியேற்றம் இடம்பெற்று மூன்று வருடங்கள் கடந்து விட்டது.

மின்சாரக் கம்பங்கள் நட்டும் வருடக்கணக்காகிறது. குறிப்பாக ஊதாரி, பாட்டாளிபுரம், [illegible]காமம், நட்டாங்கண்டல் பகுதிகளில் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன.

நட்டாங்கண்டலில் ஒரு மகப்பேற்று மருத்துவமனை உள்ளது. ஆனால் இங்கு மின்சார வசதியில்லை. வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளர்கள் அம்புலன்ஸ் வண்டி மூலம் மல்லாவிக்கே அனுப்பப்படுகின்றனர். இதன்போது நட்டாங்கண்டல் மல்லாவி வீதியில் பல்வேறு நெருக்கடி இவர்களுக்கு ஏற்படுகிறது.

இதற்கமைவாக பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் தமது நாளாந்தப் பணிகளைச் செய்வதற்கும் வெளித்தேவைகளை நிறைவேற்றவும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தமது நிலையைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (ஐ-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளத்துக்கு யாழ்ப்பாணத்திலும் எதிர்ப்பு

# நாளை பஸ் நிலையத்தில் கவனவீர்ப்பு

## புதிய ஜனநாயகக் கட்சி ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.16

புதிய ஜனநாய மார்க்இச-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் கூடங்குளம் அணு உலை அபாயத்துக்கு எதிரான கவனவீர்ப்புப் போராட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நடைபெறவுள்ளது என்று கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

தமிழ்நாட்டின் தென் கரையோரத்தில் இலங்கையின் வடக்கு மேற்குப் பிரதேசங்களை அண்மித்ததாக நிறுவப்பட்டுள்ள கூடங்குளம் அணு உலை மின் நிலையம் இயக்கப்படவுள்ளது.

அதிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் அபாயகரமானதாகும். அத்துடன் அணு உலையில் இடர்கள் ஏற்படும் பட்சத்தில் சூழலில் பெரியளவில் உயிரழிவுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

அந்தக் கதிரியக்கம் உயிர் அழிவுகளை மட்டுமன்றி மண்ணிலும் கடலிலும், காற்றிலும் கலந்து கொடிய நோய்களைக் கொண்டுவரக் கூடியது. இது எதிர்காலத் தலைமுறைகளுக்கும் அபாயகரமானதாகும்.

இதன் காரணமாக கூடங்குளம் இடிந்தகரையில் கடற்றொழிலாளரும் கிராமப்புற மக்களும் இணைந்து கடந்த 15 மாதங்களாக கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

எனவே, தமிழ் நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது இலங்கைக்கும் குறிப்பாக வடக்கு பிரதேசத்தின் மக்களுக்கும் இந்த கூடங்குளம் அணு உலையால் அபாயங்கள் ஏற்படும்.

இந்த அபாயம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தி, எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் இந்தப் போராட்டத்தில் அனைத்து அரசியல் கட்சிகள், மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதி பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.- என்றுள்ளது. (ம-14)

## திருநெல்வேலி சந்தையின் புனரமைப்புப்பணி துரிதம்

யாழ்ப்பாணம்,நவ.16

திருநெல்வேலி பொதுச் சந்தையின் புனரமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தையின் திருத்தப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே சந்தையின் செயற்பாடுகள் இடம்பெற்று வந்தன. இதன்போது சந்தையின் கீழ் மாடிக் கட்டடத்தில் அண்மையில் பெய்த மழையால் வெள்ளம் உட்புகுந்தது.

இதனை அடுத்து கீழ் மாடிக் கட்டடத்தின் தளத்தை உயர்த்தி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கீழ் மாடிக்கட்டடத் தொகுதியின் புனர்நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றதும் அங்கு வாழைக்குலை விற்பனைப் பிரிவு இயங்கத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது வாழைக்குலை விற்பனைப்பிரிவு அருகில் உள்ள வளாகம் ஒன்றினுள் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## வத்திராயன் கடற்றொழிலாளருக்கு சுழற்சி முறையில் கடனுதவி

வடமராட்சி, நவ.16

மீள்குடியமர்வுக்குப் பின்னர் எந்தவித உதவிகளையும் இதுவரை பெற்றுக் கொள்ளாத மருதங்கேணி வத்திராயன் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளருக்கு சுழற்சி முறைக் கடனும் சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளன என்று வத்திராயன் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் வ.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

**வடமாரட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் 'பாசிக்' நிறுவனம் தொடர்ச்சியாகப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது.**

வடமாரட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் 'பாசிக்' நிறுவனம் தொடர்ச்சியாகப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் பாசிக் நிறுவனம் வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்ய சுழற்சி முறைக் கடன் திட்டத்துக்கென ஒரு கோடி ரூபாவை வழங்கி இருந்தது.

அப்பணம் சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, மீதி 10 லட்சம் ரூபா ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் கடனாகப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

அத்துடன் சங்கத்தால் நடத்தப்பட்ட குலுக்கல் முறையிலான உதவிகளைப் பெற்றுக் கொள்ளாத கடற்றொழிலாளருக்கு 10 சைக்கிள்கள் சங்கத்தால் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-8)

## பாம்பால் கடியுண்டோர் எண்ணிக்கை அதிகரிப்பு

வடமராட்சி, நவ.16

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பாம்புக்கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அண்மையில் பெய்த பெரு மழையை அடுத்து தமது வாழ்விடங்களிலிருந்து பெருந்தொகையான பாம்புகள் மக்கள் வாழும் குடிமனைகளை நோக்கி நகரத்தொடங்கியுள்ளன.

குடிமனைகளுக்குள் புகும் பாம்புகள் அங்கு தங்கியிருப்போரைத் தீண்டி வருகின்றன. செம்பியன்பற்று, நாகர்கோவில், குடத்தனை ஆகிய இடங்களிலேயே பலர் பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்கள்.

பாம்பால் கடியுண்ட குடியிருப்பாளர்கள் பலர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். (த-8)



தேசிய மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பாடசாலை அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் மரக்கன்று நட்டு வைக்கப்பட்டது. (ம-9)

## நல்லூர் பிரதேசத்தில் 4 கிணறுகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.16

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட நான்கு பொதுக் கிணறுகளை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதற்கு சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக திருநெல்வேலி பொதுச்சந்தையில் வாழைக்குலை விற்பனை நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பொதுக் கிணறு புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாகப் பாவனையின்றி தூர்ந்த நிலையில் காணப்பட்ட இந்தக் கிணறு மீள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

அதனைவிட அரியாலை கிழக்கில் உள்ள மூன்று பொதுக் கிணறுகள் விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தக் கிணறுகளை விரைவில் புனரமைத்து மக்களின் பாவனைக்கு விடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.(ம-17)

## கரவெட்டி அ.த.கவுக்கு கலாசார மண்டபம்

வலி.வடக்கு, நவ.16

கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி கலாசார மண்டபம் நிர்மாணிப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து இரண்டு லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுதலின் பேரில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மண்டபம் அமைக்கப்படுவதன் மூலம் இப்பாடசாலையில் நடைபெறும் மாணவர்களின் கலை நிகழ்வுகள் உட்பட பல்வேறு நிகழ்வுகளையும் இங்கு நடத்தக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## மூன்று மயானங்களின் புனரமைப்பு பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.16

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட மூன்று மயானங்களின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் கோட்டைக்காடு மயானம், அரியாலை சித்துப்பாத்தி மயானம், அரியாலை கிழக்கு மயானம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளே ஆரம்பமாகியுள்ளன.

அரியாலை சித்துப்பாத்தி மயானத்தின் இளைப்பாற்று மண்டபமும் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த மண்டபத்தின் கூரைகள் பெரும் சேதமடைந்துள்ளதால் அவற்றை உடனடியாக புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனைவிட மற்றைய இரண்டு மயானங்களின் கிணறுகள் மற்றும் மயான பகுதி என்பனவும் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு தகுதியான அதிபரை நியமியுங்கள்



வடமராட்சி,நவ.16

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்குத் தகுதியான அதிபரை நியமிக்கக் கோரி பழைய மாணவிகள், பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் காலை பாடசாலை வாயிலில் திரண்ட கல்லூரி மாணவிகளின் பெற்றோர், கைகளில் பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் காணப்பட்டனர்.

இந்தப் பாடசாலைக்கு கடந்த இரு வருடங்களாக உரிய தரத்தையுடைய அதிபர் இல்லாத நிலையில் இதுவரை கடமையாற்றிய அதிபரும் ஓய்வு பெற்றுச் சென்று விட்டார்.

இந்த வெற்றிடத்துக்குப் புதிதாக, தகுதியுடைய அதிபர் ஒருவரை நியமிக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டிய பெற்றோர் தற்போது கடமையேற்றுள்ள அதிபருக்கும் போதிய அனுபவம் இல்லை என்றும் குற்றம்சாட்டியுள்ளனர்.

எனவே எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பாடசாலையின் தரத்துக்கேற்ப, அதை மேன்மேலும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடிய ஆளுமையுடைய ஒருவரை அதிபராக நியமிக்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

''வலயமே ஏன் இந்தக் குள்ள நரி விளையாட்டு, உமது விளையாட்டுக்களைப் பாடசாலையில் காட்ட வேண்டாம்''

''பாடசாலையின் தரத்தைக் குறைக்காதே''

''அனுபவம் இல்லாத அதிபர் இந்தப் பாடசாலைக்கு வேண்டாம்'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த கல்வி அதிகாரிகளும், வல்வெட்டித்துறை பொலிஸாரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேசி, இன்னும் இருவாரங்களில் உரிய பதில் வழங்குவதாக உறுதியளித்தனர்.

அதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

(த-16-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டில்லி ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற குழந்தைகள் தினக் கொண்டாட்டத்தில் உற்சாகமாகப் பங்கேற்ற ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி.


## திரைப்படமாகிறது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் வாழ்க்கை வரலாறு

டில்லி, நவ.16

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகவுள்ளது.

பாவ்னா தல்வர் திரைப்படமாகத் தயாரிக்கவுள்ளார். ராஜீவ்காந்தியின் இளமைப் பருவ வாழ்க்கை, அரசியல் பிரவேசம், ஸ்ரீபெரும்புதூரில் குண்டு வெடிப்பில் இறந்தது போன்றவை காட்சிகளாக இடம்பெறுகின்றன.

எனவே குறித்த திரைப் படத்துக்கு காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியின் ஒப்புதலைப் பெற முயற்சிகள் இடம்பெறுகின்றன.



திரைக்கதை முழு விவரமும் அவரிடம் அளிக்கப்பட உள்ளது. இந்தத் திரைப் படத்தில் ராஜீவ்காந்தி வேடத்தில் நடிக்க அபிஷேக் பச்சனைத் தெரிவு செய்துள்ளனர். சில ஹொலிவூட் நடிகர்களும் பரிசீலிக்கப் படுகின்றனர்.

ராஜீவ் வேடத்தில் நடிக்க தெரிவானவர்களின் பெயர் பட்டியலும் சோனியாவிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவரே அதற்கான தெரிவை செய்கிறார். இதில் அபிஷேக் பச்சனுக்கு அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறப் படுகிறது. (வ)

**இலங்கை அரசு போர்க்குற்றங்களை ஏற்காவிட்டால்**

# ஐ.நாவிலிருந்து இலங்கையை நீக்க இந்தியா வாதிட வேண்டும்

### டில்லி மகான்கள் இன்னும் கூட மௌனம்

சென்னை, நவ.16

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற குற்றங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு அதற்கான தண்டனையை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு முன்வராவிட்டால் ஐ.நா. சபையில் இருந்து இலங்கையை நீக்கவேண்டும் என்று இந்திய அரசு வாதிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியின்போது மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிநாள்களில் நடந்த படுகொலைகள் இதுவரை நடைபெறாத, எவரும் மன்னிக்க முடியாத இனப் படுகொலைகளாகும். இலங்கையில் நடைபெற்ற படுகொலை பற்றி ஐக்கிய நாடுகள் சபை மறைத்து விட்டது. அதன் பிரதிநிதிகள் தங்கள் கடைமைகளில் இருந்து தவறிவிட்டனர் என்று அவர்களைக் குற்றம் சாட்டுவதற்கு முன்பு நாம் எமது நாட்டில் செய்ய வேண் டிய கடைமைகளை முறையாகச் செய்தோமா? என் பதை தற்போது எம்மை நாமே பரிசோதித்துக் கொள்ள வேண்டிய அவசி யம் எழுந்துள்ளது.



ஐ.நா. சபையின் பிரதிநிதிகள் தங்கள் கடமையில் தவறிவிட்டார்கள் என்ற செய்தி வந்தபின்னர், இன்று ஐ.நா. சபையை மட்டும் குற்றம்சாட்டி பயன் இல்லை. நாம் இந்திய அரசின் மூலமாகத்தான் பேசியாக வேண்டும். மத்திய அரசு ஐ.நா. சபையில் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றியதா? என்பதுதான் நாம் கேட்க வேண்டிய கேள்வி.

மத்திய அரசு தமிழ் மக்களின் குரலுக்கு மதிப்புக் கொடுத்ததா என்பது நாம் கேட்கவேண்டிய முக்கிய மான கேள்வி. ஐ.நா. சபையின் குழுவே தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு செய்தி வெளியிட்ட பின்னரும்கூட, தமிழக மக்களும், தமிழ்நாட்டு கட்சிகளும்தான் கண்டித்து குரல் கொடுத்து வருகின்றன.


டில்லியில் உள்ள மகான்கள் இதுவரை இதுகுறித்துப் பேசவில்லை. 2009 ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி இலங்கையில் உலகம் கண்டிராதஇனப் படுகொலை நடைபெற்ற நேரத்தில் டில்லி அமைச்சரவை யில் இருந்த தமிழர்கள் யார்? இவர்களும் இலங்கையில் நடந்த படுகொலையைத் தெரிந்து கொள்ளாமல் அவர்கள் அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற அமைச்சர்களாக இருந்ததால் அவர்கள்தான் தமிழ் மக்கள் முன்பு முதல் குற்றவாளிகளாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வேண்டும். அதற்குரிய தண்டனையையும் ஏற்கத் தயாராக வேண்டும்.

**உயிரைக் கொடுப்பதற்கும் தயாராக வேண்டும்**

இலங்கைத் தமிழர்களுக்கு முழு உரிமை பெற் றுத்தரும் வரையில் இனி எதிலும் கவனம் செலுத்த மாட்டோம் என்ற போர்க் குரலை தமிழ்நாட்டு இளை ஞர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எழுப்பினால் மத்திய அரசு பணியும். பணியத் தவறினால் மத்திய அரசின் தன்மை மாற்றப்படும். பின்னர் நியாயம் பிறக்கும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உயிரை கொடுப்பதற்கும் தயாராக இருக்க வேண்டும் - என்றார். (வ)

## ரூபா 107 கோடிக்கு ஏலம்போய் சாதனைபடைத்த இந்திய வைரம்



இந்தியாவில் கோல் கொண்டா சுரங்கத்தில் வெட்டி எடுக்கப்பட்ட வைரம், 107 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்டு உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்த வைரம் மிகவும் அபூர்வமான, நிறமற்ற மாற்றுக் குறையாத வைரமாகும். 76.02 கரட் எடை யுள்ள இந்த வைரம், பெரிய ஸ்ரோபரி பழம் அளவில் உள்ளது. ஆஸ்திரியாவைச் சேர்ந்த ஹங்கேரி வம்சாவளி இளவரசரான ஜோசப் ஒகஸ்ட் என்பவருக்கு குறித்த வைரம் சொந்தமாக இருந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை 107 கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கு இந்த அபூர்வ வைரம் ஏலத்தில் எடுக்கப் பட்டதாக, ஜெனிவாவில் உள்ள சர்வதேச ஆபரண மையத்தின் இயக்குநர் பிரான்காய்ஸ் குறில் தெரிவித்தார். (வ)

## பா.ஜ.கவில் நமீதா



தென்னிந்திய மொழிப் பட நடிகை நமீதா பாரதீய ஜனதா கட்சியில் இணைந் ததாக தகவல் வெளியாகியுள்ளது. நடிகை நமீதா காங்கிரஸில் இணையப் போவதாக தகவல்கள் வலம் வந்தாலும் தற்போது அவர் பா.ஜ.கவில் இணைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து எதிர் வரும் 2014 நாடாளுமன்ற தேர்தலில் அவர் பா.ஜ.கவுக்காக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பா.ஜ.க. பொதுச் செயலாளர் வானதி சீனிவாசன் கூறுகையில், நமீதா பா.ஜ.கவில் சேர்ந்தது உறுதியாகவில்லை. இது குறித்து நான் ஏதும் கூற விரும்பவில்லை- என்றார். (வ)

## பொலிஸாருடனான மோதலில் ஐந்து மாவோயிஸ்டுகள் சாவு

ஒரிசா மாநிலத்தில் பொலிஸாருடன் இடம்பெற்ற மோதலில் 5 மாவோயிஸ்ட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஒரிசாவின் எல்லையோர மாவட்டங்களான கஞ்சம் மற்றும் கஜபதியின் வனப் பகுதிகளில் மாவோயிஸ்ட்டுகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்துப் பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதன்போது இடம்பெற்ற மோதலில் 5 மாவோ தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று ஒரிசாவின் தெற்கு மாகாண பொலிஸ் துணைத் தலைவர் ஆர்.கே. ஷர்மா தெரிவித்தார். மாவோயிஸ்ட்டுகளுடனான மோதல் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பான சி.பி.ஐ. மாவோயிஸ்ட்டில் இருந்து நீக்கப்பட்ட இவர்கள், ஒரிஷா மாவோபாடி கட்சி என்ற பெயரில், சபை யாசாச்சி பாண்டா என்பவரின் தலைமையில் குழுவாக இயங்கி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் மாவோயிஸ்ட்டுகள் தரப்பில் சபையாசாச்சி பாண்டாவும் ஈடுபட்டதாகத் தெரிவித்த பொலிஸார், பின்பு அவர் தப்பிவிட்டதாகக் கூறினர்.

தற்போது சிறப்பு அதிரடிப் படையும், மாவட்ட தன்னார்வ படையும் இணைந்து இந்தத் தாக்குதலை நடத்தி வருகின்றனர். (வ)

## ஜனநாயக நடவடிக்கைகளுக்கு மியன்மாருக்கு இந்தியா உதவும்

**சூகியுடனான சந்திப்பில் மன்மோகன் கருத்து**

டில்லி, நவ.16

மியன்மாரில் மேற்கொள்ளப்படும் தேசிய ஜனநாயக நடவடிக்கைகளுக்கு இந்தியா என்றும் உறுதுணையாக நிற்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

மியன்மார் எதிர்க்கட்சி தலைவரான ஆங் சான் சூகியை புதுடில்லியில் நேற்று முன்தினம் சந்தித்த பிரதமர் மேற்படி வாக்குறுதியை அளித்தார். 40 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை 6 நாள் சுற்றுப்பயணமாக இந்தியாவுக்குச் சென்ற சூகி நேற்று முன்தினம் காலை டில்லி ராஜ் கோட்டில் உள்ள காந்தி நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

சூகியின் தாயார் தா கின் யீ, இந்தியாவுக்கான மியன்மார் தூதராக இருந்தபோது, சூகி பல ஆண்டுகள் இந்தியாவில் தங்கிக் கல்வி கற்றுள்ளார். அப்போது அவர் புதுடில்லியில் கல்வி பயின்ற லேடி சிறீராம் கல்லூரிக்குச் சென்று ஆசிரியர்களையும், மாணவர்களையும் சந்தித்துப் பேசினார்.

நேற்று முன்தினம் மாலை ஜகவர்லால் நேருவின் பிறந்த தினத்தை முன்னிட்டு சிறப்புரை ஒன்றையும் அவர் நிகழ்த்தினார். மேலும் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, நாடாளுமன்ற சபாநாயகர் மீராகுமார், சட்டத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.



ஆந்திராவில் மேற் கொள்ளப்பட்டு வரும் கிராம மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்களையும் அவர் நேரில் சென்று பார்வையிடவுள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், அங்குள்ள கடற்கரைப் பாதுகாவலர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# ஈராக்கில் தொடரும் குண்டு வெடிப்புகள்

## 15 பேர் சாவு; 100இற்கு மேற்பட்டோர் காயம்

ஈராக்கின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதிகள் தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். இஸ்லாமியர்களின் புத்தாண்டு பிறக்கவுள்ளது. இந்தநிலையிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

பாக்தாத் உட்பட ஆறு நகரங்களில் 11 இடங்களில் குண்டு வெடிப்புகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் என்பன நடத்தப்பட்டுள்ளன.

சமயபிரிவு தீவிரவாத குழுக்களிடையே நடந்த இந்த மோதலில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 100இக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

குர்திஸ் இனமக்கள் அதிகம் வசிக்கும் எண்ணெய் வயல்கள் நிறைந்த கிர்குக் பகுதியில் சக்திவாய்ந்த குண்டுகள்



வெடித்ததில் பொதுமக்கள் 9 பேர் இறந்தனர். இரண்டு கார் குண்டுகள் வெடித்ததிலும் பொதுமக்கள் 5 பேர் உயிரிழந்தனர்.

கடந்த சில மாதங்களாக நடைபெற்று வரும் தொடர் தாக்குதலால் ஈராக் அரசியலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் குறித்து எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

### பாதிக்கப்பட்ட சிரிய மக்களுக்காக

# அமெ. ரூ. 450 கோடி நிதி

## ஹிலாரி கிளின்டன் அறிவிப்பு

சிரியா உள்நாட்டு போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அமெரிக்கா மேலும் 450 கோடி ரூபாவை வழங்கவுள்ளது.

சிரியாவில் அதிபர் அசாத்துக்கு எதிராக கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. இராணுவத்திற்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் நடப்பதால் லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

சிரியாவிலுள்ள அகதிகள் முகாமிலும், ஏராளமானோர் துருக்கி, ஜோர்டான், லிபியா, ஈராக் நாடுகளுக்கு தப்பி ஓடியும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த மக்களுக்கு அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் நிதி உதவி அளித்து வருகின்றன.

இதற்கிடையில் ஆஸ்திரேலியா சென்றுள்ள அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் ஹிலாரி கிளின்டன், இராணுவ அமைச்சர் லியான் பெனட்டா ஆகியோர் நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலிய அமைச்சர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதில் சிரியா உள்நாட்டு போரில் பாதிக்கப்பட்டு அகதிகளாகிய மக்களுக்கு உதவ அமெரிக்கா மேலும் ரூ.450 கோடி நிதி வழங்கும் என முடிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து ஹிலாரி கிளின்டன் தெரிவிக்கையில்,

''சிரியா மட்டுமின்றி அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு உணவு மற்றும் உதவிகளுக்காக இத்தொகை செலவிடப்படும்''- என்று தெரிவித்தார்.

# நாய்க் கூண்டில் குழந்தையை அடைத்து வைத்திருந்த தந்தை

## அமெரிக்காவில் நடந்த கொடூரம்

ஒன்றரை வயது குழந்தையை நாய் அடைக்கப்படும் கூண்டில் அடைத்து வைத்த தந்தையை அமெரிக்க பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் ஒக்லஹாமா நகரில் உள்ள ஒரு வீட்டில் நான்கு வயதுச் சிறுவன் வீட்டுக்கு வெளியே நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தான். பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் அருகே வந்து பார்த்த போது வீடு உள்பக்கம் பூட்டப்பட்டு இருந்தது. வெளியே சிறுவன் அழுது கொண்டிருக்க ஒன்றரை வயதுக் குழந்தை, நாய்க் கூண்டில் அடைக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவில் தற்போது கடுங்குளிர் காணப்படுகிறது. இந்த குளிரில் குழந்தைள் வீட்டுக்கு வெளியே மேலாடை இல்லாமல் தவிப்பதைப் பார்த்த அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, வீட்டுக்குள் குழந்தைகளின் தந்தை மது அருந்திய மயக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தார். மற்றொரு குழந்தை தனி அறையில் தூங்கிக் கொண்டிருந்தது. இந்தக் குழந்தைகளின் தாய் வேலைக்கு சென்றிருந்தார். குழந்தைகளை உரிய முறையில் பராமரிக்காதது குறித்து, இக்குழந்தைகளின் பெற்றோர் மீது, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாய்க் கூண்டில் ஒன்றரை வயது குழந் தையை அடைத்து வைத்ததற்காக தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### இஸ்ரேலின் வான் தாக்குதலில்

# ஹமாஸ் இராணுவத் தளபதி சாவு



அஹ்மட் ஜபாரி பயணித்த கார்

பலஸ்தீன ஆயுதக்குழுவான ஹமாஸின் இராணுவத் தலைவர் அஹ்மட் ஜபாரி நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

காஸாவுக்கு எதிரான இஸ்ரேலிய இராணுவ தாக்குதல்கள் 4 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கொல்லப்பட்ட மிகவும் உயரிய ஹமாஸ் தலைவர் ஜபாரி ஆவார்.

அவரது சகா என்று கருதப்படும் இன்னுமொருவரும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஜபாரி கொல்லப்பட்டதை அடுத்து காஸா வீதிகளில் ஆத்திரமடைந்த பலஸ்தீனர்கள் இயந்திர துப்பாக்கிகள் மூலம் வேட்டுக்களைத் தீர்த்தவண்ணம் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் ஹமாஸுக்கும், இஸ்ரேலுக்கும் இடையேயான முறுகல் நிலையை மேலும் சிக்கலாக்கும்.

இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் குறிப்பிடுகையில்,

''ஜபாரி கொல்லப்பட்டது, ஹமாஸ் மற்றும் இஸ்லாமிக் ஜிகாத் ஆகியவை உட்பட தீவிரவாதக் குழுக்களுக்கு எதிரான ஓர் எல்லைப் புற நடவடிக்கையின் ஆரம்பத்தை குறிக்கிறது- என்று கூறியுள்ளது.

இந்த வான் தாக்குதல் மூலம் நரகத்தின் வாயிலை இஸ்ரேல் திறந்துள்ளது- என்று ஹமாஸ் கூறியுள்ளது.

## சூடானில் மஞ்சள் காமாலை; 107 பேர் சாவு

சூடானின் டார்பர் பகுதியில், பரவி வரும் மஞ்சள் காமாலை காய்ச்சலுக்கு, கடந்த ஒன்றரை மாதத்தில் மட்டும் 107 பேர் உயிரிழந்துள்ளனர் என்று உலக சுகா தார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நோய், நாடு முழுவதும் பரவ வாய்ப்புள்ளதாகவும் அந்த நிறுவனம் எச்சரித்துள்ளது.

கொசுக்களால் பரவும் இந்த நோயைக் கட்டுப்படுத்த உரிய மருந்துகள் சூடானிடம் இல்லை. எனினும் தடுப்பு நடவடிக்கைகளில் சூடான் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்தக் காய்ச்சலால், ஆபிரிக்காவில் உள்ள 32 நாடுகளில் வாழும் 50 கோடி மக்களுக்கும் அச்சுறுத்தல் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. 2005ஆம் ஆண்டு, சூடானில் உள்ள தெற்கு கொர்டோபன் பகுதியில் மஞ்சள் காமாலை காய்ச்சல் தாக்கி 160 பேர் உயிரிழந்தனர்.

# சீன ஜனாதிபதி, பிரதமர் தெரிவு மாநாட்டில் 2,305 பிரதிநிதிகள்



சீனாவின் புதிய ஜனாதிபதியாக ஜீ ஜின்பிங்கும், பிரதமராக லீ கேகியாங்கும் தேர்வு செய்யப்பட்டனர்.

சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் 18 ஆவது மத்திய குழு மாநாடு கடந்த ஒரு வாரகாலமாக நடைபெற்றது. 2,305 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் ஓய்வுபெற உள்ள ஜனாதிபதி ஹூ ஜிண்டாவ் கலந்து கொண்டு உரையாற்றினார். அங்கு அவர் உரையாற்றுகையில்,

''புதிய மத்திய குழு உறுப்பினர்களைத் தேர்வு செய்திருக்கின்றோம். வயதானவர்களுக்குப் பதிலாக இளைஞர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளும் திட்டங்களும் நாட்டின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவதில் முக்கிய பங்காற்றும்'' என்றார்.

## ஐரோப்பிய வேலை நிறுத்தம்

### ஸ்பெயினில் மோதல்கள்

சிக்கன நடவடிக்கை குறித்த கொள்கைக்கு எதிரான ஐரோப்பா தழுவிய நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஸ்பெயினிலும், போர்த்துக்கல்லிலும் பொது வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

இரு நாடுகளிலும் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்பெயினின் பல நகரங்களில் மோதல்கள் நடந்தன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தாலி, கிரேக்கம், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் போலந்து உட்பட 23 நாடுகளில் தொழிற்சங்க போராட்டங்களை நடத்துமாறு தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன. ஆனால் இந்தப் பிரச்சினையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட யூரோ வலயத்தில் உள்ள மத்தியதரைக் கடல் நாடுகள் மீதே கவனம் குவிந்திருந்தது.

## ஜூடோ பயிற்சியில் ஈடுபட்டவேளை புடின் காயம்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு ஜூடோ பயிற்சியின் போது காயம் ஏற்பட்டது என்று ரஷ்ய பிரதமர் மெத்வ தேவ் தெரிவித்தார். புடின் தனது உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டு வருபவர். அவர் ஜூடோ பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது சிறிய காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. புடின் தற்போது வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்த்து வந்தார். இதனால் அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் சந்தேகம் வெளியிட்டன. இந்த நிலையிலேயே அவரது உடல் நிலை குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

# குழந்தைக்கு ஆயுள் 100

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஒரு நிறுவனம் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் 1000 பெற்றோரிடம் ஓர் ஆய்வை மேற்கொண்டது. அந்த ஆய்வின்படி-

இப்போது பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் ஒருவரின் ஆயுள் 100 வயது என கணக்கிட்டுள்ளனர்.

தற்போதைய வாழ்க்கை சூழ்நிலை, மருத்துவ வசதி போன்றவைகளால் அவர்களின் ஆயுள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இவர்களால் 70 வயது வரை பணிபுரிய முடியும். 52 வயது வரை ஒரு மாணவனுக்குரிய கடமையும், பொறுப்புணர்ச்சியும் இவர்களிடம் இருக்கும்.

தங்களது பெற்றோர்




மற்றும் தாத்தா, பாட்டிகளை போல் அல்லாமல் 8 வருடங்கள் தாமதமாக திருமணம் செய்து 31 வயதில் குழந்தை பெற்றுக் கொள்வார்கள்.

இதுபோன்ற குழந்தைகளை பெறும் பெற்றோர் 1983ஆம் ஆண்டு பிறந்தவர்களாகவும், இவர்களின் பெற்றோர் 1955இல் பிறந்தவர்களாகவும் இருப்பார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## கார் விபத்தில் காயமடைந்தோரை ஏற்றிச் சென்ற ஹெலியும் விபத்து

### உயிழந்தனர் 10 பேர்



ஈரானின் வடகிழக்கு பகுதியில் நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். கார் விபத்தில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற இந்த ஹெலிகொப்டரே மின்சார வயர்களில் இடித்து பின் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெட்ரய்ஸ் மீதான விசாரணை நடைபெறுகிறது

அமெரிக்க உளவுப் பிரிவின் தலைவர் ஜெனரல் பெட்ரய்ஸ் மீதான விசாரணைகள் நடைபெறுகின்றன என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார். ''பெட்ரய்ஸ் இந்த நாட்டுக்கு சேவை புரிந்துள்ளார். அவருடைய சொந்த மதிப்பீட்டின் படியே அவர் பதவி விலகியுள்ளார். நடைபெறும் விசாரணை குறித்து நான் கருத்துக் கூற விரும்பவில்லை. விசாரணை நடத்துபவர்கள் உண்மைகளை வெளியிடுவார்கள்'' என்று தெரிவித்துள்ளார் ஒபாமா.



பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் லண்டனில் உள்ள 'றோயல் கொமன்வெல் சொசைட்டி'க்கு வந்திருந்தார். பின்னர் அங்கு காத்திருந்த மக்களைச் சந்தித்தார்.

# காஸா மீது தாக்குதலை தீவிரப்படுத்துவதற்குத் தயார்

## இஸ்ரேல் பிரதமர் எச்சரிக்கை

பலஸ்தீனத்தின் காஸா மீது தாக்குதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கு எந்நேரமும் தயார் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெயன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பலஸ்தீனத்தின் ஹமாஸ் இராணுவ குழுவினரின் மூத்த தலைவர் அல் ஜபரி கொல்லப்பட்டார்.

இதனையடுத்து இஸ்ரேல் பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில்-

''ஹமாஸுக்கும் ஏனைய தீவிரவாத இஸ்லாமிய குழுவினருக்கும் நாங்கள் தெளிவான செய்தி ஒன்றை சொல்லியிருக்கிறோம். தேவை ஏற்படின் காஸா மீதான இராணுவ நடவடிக்கையை தீவிரப் படுத்த எந்நேரமும் தயார் நிலையில் உள்ளோம். எமது மக்களைப் பாதுகாக்க எதையும் செய்வோம்'' என்று தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலிய வான் தாக்குதலால் புகைமண்டலமாகக் காட்சியளிக்கும் காஸா.

நேற்று முன்தினம் இஸ்ரேலின் தாக்குதலில் கலில் அல் ஜபரி, ஹமாஸ் இயக்கத்தின் சில உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 9 பேர் கொல்லப்பட்டனர். அதனை தொடர்ந்து இஸ்ரேல்- பாலஸ்தீனத்திற்கு இடையே பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது. 1996 ஆம் ஆண்டிலிருந்து காஸாவின் ஹமாஸ் முக்கிய தலைவர்கள் பலர் இஸ்ரேலியப் படையினரால் இலக்கு வைத்து கொல்லப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவுடன் ஒத்துழையுங்கள் ஜனாதிபதி பராக் ஒபாமா அழைப்பு

அமெரிக்காவுடன் சிறந்த ஒத்துழைப்பை மேற்கொள்ளுமாறு பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து ஒபாமா தெரிவிக்கையில்;

''அமெரிக்காவுடன் சர்வதேச நாடுகள் வைத்திருந்த சிறந்த ஒத்துழைப்புக்கு நன்றி. இதேபோன்று நல்லுறவுகளை தொடர விரும்புகிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.



மேலும் ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், இத்தாலி பிரதமர் மரியோ மண்டி, ஜோர்டான் மன்னர் அப்துல்லா, கத்தாரின் அமிர் ஹமத்பின் கலிபா அல்-தானி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜாய் ஆகியோரிடம் ஒபாமா தொலைபேசியில் பேசியதாக வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலர் ஜே கார்னே தெரிவித்தார்.

இந்நிலையில் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்;

''அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன், ஈராக் பிரதமர் நௌரி அல்-மாலிகியுடன் கலந்துரையாடியுள்ளார். அப்போது இரு நாடுகளுக்கிடையேயான இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பை மேம்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்''- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புஷ்ஷின் வீட்டைத் தாக்க முயற்சித்தவருக்கு சிறை

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ்ஷின் வீட்டின் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்ட சவூதி அரேபிய மாணவர் ஒருவருக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர் கடந்த வருடம் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள புஷ்ஷின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்த இந்த மாணவர் திட்டமிட்டிருந்தார். இது குறித்து அமெரிக்க புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல்களை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டார். இவருக்கு அல் குவைதா உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுடன் தொடர்புள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

### மக்கள் நிதியை வீணடித்த அதிகாரிக்கு சிறை

பிரேஸிலின் முன்னாள் ஜனாதிபதி லூலா டா சில்வாவின் உயர் அதிகாரியொருவருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது. மக்களின் நிதியை சட்ட விரோதமாக உபயோகித்தமை தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்டதை அடுத்து, அவருக்கு இந்த சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


மறக்குமா நெஞ்சம்



ரூபி நாகேஸ்வரி நாகராசா
(முன்னாள் தாதி கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை – மானிப்பாய்)

அன்னையும் தந்தையுமாக இருந்து
எனக்காகவே வாழ்ந்த அன்புத்தாயே!
நோயுற்றிருக்கவில்லையே!
நான் நொந்து மனம் வாட
பாயிற் படுக்கவில்லையே!
நான்பணிவிடைகள் செய்திட
கண் இமைக்கும் நேரத்தில் என்மடியில்
கண்மூடி கடந்துதுவோ ஆண்டுகள் 25
காலமெல்லாம் மறக்குமோ நெஞ்சம்.

திரு. திருமதி தியாகலிங்கம்,
(கலா- மகள்),
பேரப்பிள்ளைகள்
தி. வினோபன்
(மாணவன்- மருத்துவபீடம் - யாழ். பல்கலைக் கழகம்),
தி.இந்துஜன்
(மாணவன் - A/L, 2013)

10, சிறாம்பியடி லேன்,
யாழ்ப்பாணம்.

(25350)(45.6. 7)



வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28)

வாழ்வுக்கு விடுதலை

- வியாதியிலிருந்து
- சாபத்திலிருந்து
- பாவத்திலிருந்து
- பில்லி சூனியத்திலிருந்து

விடுதலை பெற மிகவும் அன்போடு அழைக்கின்றோம்.

இன்றே இயேசு தருகிறார்

தேவ செய்தி கொடுத்து ஜெபிப்பவர்:
- சிஸ்ரர் கிலடிஸ் தானியல்ஸ்
- பிரதர் ரோமேஸ் தானியல்ஸ்

(இயேசு ரட்சகர் சுவிசேச சபை, கொழும்பு)

முற்றிலும் இலவசம்

இடம்: றிமோ மண்டபம்
(மணிக்கூட்டுக் கோபுரம்/ யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அருகில்)
காலம்: கார்த்திகை 17ஆம், 18ஆம் திகதிகள்
நேரம்: பிற்பகல் 3.00 – 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:

சபை: ஜெயஜீவிய திருட்சபை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
பாஸ்ரர் மதிபாலன் தொ.பே. 021 222 0176

(25150)(45.6.7)



HUDEC

CARITAS SRILANKA - SEDEC
HUDEC CARITAS - Vanni
vacancy

CARITAS

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிக்கரம் நீட்டும் கரித்தாஸ் வன்னி நிறுவனத்தினால் கிளிநொச்சியில் இயங்கி வரும் தனது பணிமனைக்கு கீழ் வரும் பதவிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ACCOUNTANT

கடமைகள்

1. திட்டங்களுக்கான பாதீடுகள் தயாரித்தல்.
2. TALLY soft ware ledger books பதித்தலும் தயாரித்தலும்
3. மாதாந்த கணக்கறிக்கை தயாரித்தல்.
4. வங்கியுடனான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. செலவுச் சிட்டைகள் தயாரித்தல்.
6. மாதாந்த சம்பளப் பட்டியல் தயாரித்தல்.
7. நிதி வழங்கும் நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி தனி நிகழ்ச்சித்திட்ட கணக்கறிக்கை தயாரித்தல்.
8. கிரமமான முறையில் உள்ளக வெளியக கணக்காய்வாளர்களுக்கான கணக்கறிக்கை தயாரித்தல்.

தகைமைகள்

1. HNDA/AAT கற்கை நெறி பூர்த்தி செய்திருத்தல் or ICASL/ACCA பகுதியாக பூர்த்தி செய்திருத்தல்.
2. பொருத்தமான கணக்கீட்டு முறையில் பரிச்சயம்
3. நிதியியல் நடவடிக்கைகளில் ஆகக் குறைந்த 03 வருட தொழில் தகைமை
4. ஆங்கில மொழியில் சிறந்த எழுத்து, பேச்சுத்திறன்.
5. கணினித் துறையில் (MS.office Tally Accounting package) சிறந்த ஆற்றல்

குறிப்பு: - வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களைச் சேர்ந்த இடமாக கொண்டோர் விரும்பத்தக்கது.

நீங்கள் மேற்படி தகைமையுடையவர்களாயின் உடனடியாக உங்களது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தை உறவினர் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களோடு 2012.11.25ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

Director
Caritas Vanni - HUDEC
Thirunagar
Kilinochchi.
E- mail: caritasvanni09@gmail.com

(24243) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(32)

அவன் அவர் யோசனைப்படியே, கீழே பார்க்காமல் மலை ஏறத்தொடங்கினான். அவனால் அச்சத்தை வெல்லமுடிந்தது. கொஞ்ச நாள்களில் கீழே பார்த்தாலும் அவனுக்கு முதலில் ஏற்பட்ட பயம் ஏற்படவில்லை.

துணிவு நமக்கு நமது மனதிலிருந்து வரவேண்டும். தன்னம்பிக்கையினால்தான் இந்தத் துணிச்சல் ஏற்படும். அனுபவத்தினால் இந்தத் துணிச்சல் ஏற்படும்.

தண்ணீரில் குளிக்க இறங்கும் போது, குளிருமோ என்ற பயம் ஏற்படும். துணிந்து தண்ணீரில் குதித்துவிட்டால் குளிராது. இதமாக இருக்கும். அதைப் போலத்தான் பயத்தைப் போக்குவதும். நாம் நேர்வழியில் போகிறோம் என்று எண்ணும் போது நமக்குத் துணிவு தன்னால் ஏற்படும். நாம் எடுத்துக்கொண்ட செயல் நன்மையைப் பயக்கும் என்று எண்ணும்போது துணிவு ஏற்படும். இந்தமாதிரி சூழ்நிலையில் தான் நாம் அச்சத்தை வெல்ல வாய்ப்பு ஏற்படும்.

ஒரு தாய் தன் குழந்தையை உயிருக்கு உயிராக நினைக்கிறாள். அவளின் இந்த அளவு கடந்த அன்புதான் பிள்ளையைக் காப்பாற்ற எப்படிப்பட்ட தியாகத்தையும் செய்யத் தூண்டுகிறது. தன் குழந்தையை ஒரு காளை முட்டவந்தால், தாய் தன் உயிரையும் மதிக்காமல் பாய்ந்து சென்று பிள்ளையைக் காப்பாற்றுகிறாள். இது வீரம். துணிவு.

அச்சத்தை வெல்லும் தன்மை அந்த நேரத்தில் அவளுக்கு வந்து விடுகிறது. உண்மையை மட்டும் பேசுகிறவர்களுக்கு எப்போதும் அசாத்தியத் துணிச்சல் ஏற்படும். பொய் பேசுகிறவர்களை இயற்கையாகவே அச்சம் ஆட்கொள்ளும். மனதில் தெளிவு ஏற்படாது. எது சரி என்று தோன்றுகிறதோ அதை நாம் செய்யவேண்டும். அதுதான் துணிச்சல்.

இந்த மாதிரி துணிச்சல் உள்ளவர்கள் என்றும், எப்போதும் மற்றவர்களை எளிதில் கவர்ந்து விடுவார்கள். இவர்கள் செல்வாக்கு மற்றவர்கள் மத்தியில் மிக மிக வளர்ந்துவிடும்.

**வெற்றிக்கு ஒரு சிறந்த வழி**

நமக்கென்று ஒரு வேலைவேண்டும். அந்த வேலையைப் புனிதமாக நாம் நினைக்க வேண்டும். நாம் எந்த வேலையில் இருந்தாலும் சரி, அதை மட்டமாக எந்தக் காலத்திலும் நினைக்கக் கூடாது. நாம் செய்யும் வேலையில் நாம் நிபுணராக சிறந்தவராக விளங்கவேண்டும் என்ற எண்ணம் மனதில் பதிந்திருக்க வேண்டும்.

சுரேந்தர் ஒரு பட்டதாரி. வேலைக்கு மனுக்கள் போட்டான். பலனில்லை. ஒரு பெரிய கம்பனியில் மனேஜரை நேரில் சந்தித்து ''ஏதாவது ஒரு வேலை கொடுங்கள்.'' என்று கேட்டான்.

''உனக்கு என்ன வேலை தெரியும்?'' என்று கேட்டார் மனேஜர்.



''ஒன்றும் தெரியாது'' என்றான்.

''வேலை இல்லை. போய் வா'' என்றார் மனேஜர்.

சுரேந்தருக்கு மாபெரும் ஏமாற்றம், கவலை. மிகவும் சோர்வுடன் திரும்பினான்.

வழியில் அவன் நண்பன் ஆனந்தனைக் கண்டான். ''என்ன ஆயிற்று? முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வருகிறாய்?'' என்றான் அவன்.

சுரேந்தர் நடந்ததைச் சொன்னான். பிறகு ''அனுபவம் இல்லாதவர்களை வேலையில் எடுத்துக் கொள்வதில்லையா?'' என்றான்.

''நீ ஒரு முட்டாள்'' என்றான் ஆனந்தன்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''ஓர் இடத்தில் வேலை செய்தால்தானே அனுபவம் வரும். முதல் முதலில் வேலை தேடும்போது அனுபவத்தைப் பற்றிக் கவலைப்படுவானேன்?''

''உனக்கு என்ன வேலை தெரியும்?'' என்றார் மனேஜர். ''உனக்கு வேலை தெரிய வேண்டும் என்பதில்லை. நீ போன கம்பனியின் பெயர் என்ன?''

''கோபிநாத் அண்ட் கம்பனி.''

''அவர்கள் என்ன உற்பத்தி செய்கிறார்கள் தெரியுமா?''

''ரீசேட்டுக்களை உற்பத்தி செய்கிறார்கள்''

''நீ வேலை தேடிப் போகும் முன் ரீசேட்டைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். இப்போது பஷன் என்ன? விளையாட்டு வீரர்கள் என்ன மாதிரி ரீசேட்டுக்களை விரும்பி அணிகிறார்கள்? எந்த மாதிரிக் கலர் ரீசேட்டுக்களுக்கு மவுசு என்பதையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டு போயிருக்க வேண்டும்.'' ''மனேஜர் கேட்ட கேள்விக்கு பதில் என்னு?''

''வெகு சுலபம். இப்போதெல்லாம் சேட்டுக்களுக்கு மவுசு குறைந்துவிட்டது. ரீசேட்டுகளுக்குத்தான் மவுசு. கிரிக்கெட் ஆடுபவர்கள், டென்னிஸ் ஆடுபவர்கள், கால்பந்தாட்ட வீரர்கள் அனைவரும் விதவிதமாக ரீசேட்டுக்களை அணிகிறார்கள். அலுவலகங்களுக்குப் போகிறவர்கள் கூடப் புது மாதிரி ரிசேட்டுக்களை விரும்பி அணிகிறார்கள்.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# சிறந்த சேவையின் மூலமே தேசிய விருது பெற்றது கோண்டாவில் பொதுநூலகம்

## நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பெருமிதம்

யாழ்ப்பாணம், நவ.16

நல்லூர் பிரதேச சபை மிகச் சிறப்பான நூலக சேவையை வழங்கியதால், கோண்டாவில் பொது நூலகம் தேசிய விருது பெறும் நிலைக்கு உயர்வடைந்துள்ளது. இதுபோன்ற நூலக சேவைகளை ஏனைய நூலகங்களும் வழங்க முன்வர வேண்டும் என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கோண்டாவில் பொது நூலகம் நடத்திய தனி ஆளுமை விருத்தி தொடர்பான செயலமர்வு கடந்த 10 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்தும் போதே வசந்தகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பிரதேச சபைகளின் அபிவிருத்திப் பணிகள் குறித்த பிரதேசம் சார்ந்த நூலகங்கள், சனசமூக நிலையங்கள், பிரதேசம் சார்ந்த ஏனைய மக்களுடன் தொடர்புடைய நிறுவனங்களின் சேவையில் தங்கியுள்ளது. நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தியில் 3 நூலகங்கள் சேவையாற்றுகின்ற போதும், கோண்டாவில் பொது நூலகம் மக்கள் மத்தியில் நூலக ஆர்வத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது விழிப்புணர்வு நிகழ்வுகளையும் நடத்திவருகிறது.

குறிப்பாக மாணவர்கள் மத்தியில் அருகிவரும் வாசிப்புப் ப்ழக்கத்தை ஊக்குவிக்க பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இதற்கு நூலகருடன் இணைந்து பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கடமையுணர்வான சேவையை வழங்கி வருகிறார்கள்.

நூலகத்தின் சேவை மக்கள் மத்தியில் பயனுள்ளதாக அமைந்ததன் காரணமாகவே, தேசிய ரீதியில் விருதைப் பெற்றுள்ளது. இது போன்று ஏனைய நூலகங்களும் சேவையை வழங்க முன்வந்தால் நூலகப் பயன்பாடு மேம்படுத்தப்படுவதுடன் நூலகங்களும் தரமுயர்த்தப்படும்.

மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்ட வேண்டிய பொறுப்பு நூலகங்களில் தங்கியுள்ளது. வாசிப்புப் பழக்கம் மேம்படுத்தப்படும் போது சமூகத்தில் ஏற்படும் வேண்டாத விளைவுகள் சீர்படுத்தப்படும். தனி மனித ஆளுமைத் திறன் உருவாகும். தேடல் உணர்வு ஏற்படும், மக்கள் நல்வழிப்படுத்தப்படுவார்கள்.

எனவே பிரதேசத்துக்கு மட்டுமல்லாது சமூகத்துக்கும் நன்மைகளைப் பெற்றுத் தரும் நூலகங்கள் கடமையுணர்வுடன் சேவையாற்ற முன்வரவேண்டும் - என்றார்.

(எ-14)



கொடிகாமம் மத்தி கிராம அலுவலராக 18 வருடங்கள் கடமையாற்றி தனங்களப்பு பிரிவுக்கு இடமாற்றலாகிச் சென்ற க.சுபாஸ்சந்திர போஸின் பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது. தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், கொடிகாமம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.திருநாவுக்கரசு ஆகியோர் கிராம அலுவலருக்கு பாராட்டுப் பத்திரம் வழங்குகின்றனர். (எ-9)

## மதுவரி நிலைய பொறுப்பதிகாரி இடமாற்றம்

தென்மராட்சி, நவ.16

சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய வீ.ஏ. ஜயந்த டி சில்வா கொழும்பு மதுவரித்திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மதுவரித் திணைக்கள ஆணையாளரினால். இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்ற பின்னர் தென்மராட்சி பிரதேசத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செயற்பாடுகளை முடக்கினார். வர்த்தக நிலையங்களில் 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு புகையிலை உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்வது குறைந்துள்ளது.

மேலும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட 111 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (எ-9)

# வடமராட்சி கல்வி வலய மாணவர்களின் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி முடிவுகள்

வடமராட்சி, நவ.16

சர்வதேச நல்லொழுக்க தினத்தை ஒட்டி வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்தியுள்ளது.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், பாடசாலைகள் விவரம் வருமாறு:-

**கவிதை, கீழ்ப்பிரிவு**

வ.கஜேந்திரன் - பருத்தித்துறை ஹாட்லி, த.அபிஷா - கரவெட்டி விக்கினேஸ்வரா, இ.ஷாத்விகா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இ.கிருத்திகா- புற்றளை ம.வி, ப.துவாரகா - கரவெட்டி திருஇருதயக் கல்லூரி, கே.சாளினிதேவி - நாகர்கோவில் ம.வி.

**மத்திய பிரிவு**

சு.துஷாந்தி - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ச.ஜெயந்தினி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சு.கிருத்திகா - தும்பளை சிவப்பிரகாச ம.வி, த.கிருஷிகா- வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மிக்கேல்டெனொநாக் - வெற்றிலைக்கேணி [illegible] வித்தியாலயம்.

**மேற்பிரிவு**

ஸ்ரீ.சுதாகரன் - புற்றளை ம.வி, கி.கிருஷ்ணமிதுஷா - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, கோ.சோபனா - அம்பன் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, சி.ஜெயரமணன் - பருத்தித்துறை ஹாட்லி, தே.சங்கீதா- கரவெட்டி விக்கினேஸ்வரா .

**கட்டுரை, கீழ்ப்பிரிவு**

சி.வேனுஜா - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, கு.டிலக்சனா - கரவெட்டி திருஇருதயக் கல்லூரி, ர.ஜதுர்ஷா - புற்றளை ம.வி, த.தசானா - தும்பளை சிவப்பிரகாச ம.வி, மோ.நிதுஷா - இமையாணன் அ.த.க.பாடசாலை.

**மத்திய பிரிவு**

பா. ஆஷா - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, ம.கிருத்திகா - வல்வெட்டித்துறை மகளிர் ம.வி, நா.துவாரகா- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கா.கிருஷாலினி- தும்பளை சிவப்பிரகாச ம.வி, ச.துவாரகன் - பருத்தித்துறை ஹாட்லி.

**மேற்பிரிவு**

நா.சபேசன் - தும்பளை சிவப்பிரகாச ம.வி, க.நிஷானி - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, ப.மாதங்கி - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, ம.நிர்த்திகா - வல்வெட்டித்துறை மகளிர் ம.வி, வே.பிரசாலினி - கரவெட்டி விக்கினேஸ்வரா.

**பேச்சு, கீழ்ப்பிரிவு**

தி.மதுஷிகா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஜெ.அபிரா - கரவெட்டி திருஇருதயக்கல்லூரி, ஈ.தனுசாளினி- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பா.கிருபாலினி - கரவெட்டி விக்கினேஸ்வரா , வி.கஸ்தூரி - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**மத்திய பிரிவு**

த.அனோஜன் - நெல்லியடி மத்திய ம.வி, எ.எட்மன்ராஜ்- தும்பளை சிவப்பிரகாச ம.வி, கு.தனுஷியா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வே.ரனிஸ்ரலா- நாகர்கோவில் ம.வி, க.ஜெனித்தா - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

தி.கலைவாணி - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, அ.உ. அனந்பானுசா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இ.சத்தியா - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, த.சிந்துஜா - கரவெட்டி விக்கினேஸ்வரா , த.கௌரி - வல்வெட்டித்துறை மகளிர் ம.வி.

(எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
**விளம்பரம்:**021-5671111
**விநியோகம்:** 021-5677222
**தொலைநகல்**
**செய்தி:** 021-5678844,
**விளம்பரம்:** 021-2229731

**மின் அஞ்சல்**
**செய்தி :** news@uthayan.com
**கருத்து:** comments@uthayan.com
**விளம்பரம்:** advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

**விளம்பர முகவர்கள்:** 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – **கண்டி வீதி,** மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, **மன்னார்** : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – **சிவன் கோயிலடி,** ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, **மன்னார்** : 023 222 3311

## மாற்றங்களே தேவை

ஒரு காலத்தில் வடபகுதிக்கான சகல பொருள் விநியோகங்களும் கூட்டுறவுச் சங்கங்களை நம்பியே இருந்தன. தட்டுப்பாடான பொருள்களை பங்கீட்டு முறையில் வழங்குதல், அரசின் நிவாரண விநியோகம் என்பனவெல்லாம் போர்க் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவே நிகழ்ந்தன. அத்தோடு தனியார் கடைகளை விட சங்கக் கடைகளிலேயே பொருள்களை மலிவாகப் பெறமுடிந்தது.

இதனால் எப்போது பார்த்தாலும் சங்கக்கடைகளுக்கு முன்னால் 'கியூவில்' சனக்கூட்டம் நின்றுகொண்டே இருக்கும். அந்த இக்கட்டான காலகட்டத்தில் சங்கக் கடை 'மனேச்சர்கள் தான்' மக்களுக்கு கடவுளாகத் தென்பட்டனர்.

அந்தக் காலம் இப்போது மலையேறி விட்டது. எப்போது வாடிக்கையாளர்கள் வருவார்கள் என்று பார்த்த விழி பூத்துப் போக, அனேக சங்கக் கடைகளில் முகாமையாளர்கள் ஈயோட்டிக்கொண்டு இருக்கிறார்கள். பொருள்களுக்கு தட்டுப்பாடான காலத்தில் 'நடப்புக் காட்டிய' சங்கக் காரர்கள், இப்போது காலில் விழாக் குறையாக வாடிக்கையாளர்களை தமது கிளைகளுக்கு வரும்படி வருந்தி அழைக்கின்றனர். ஆனாலும் அப்படி வருவோர் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. இதனால் முன்னைய காலங்களை விடவும் கூட்டுறவு அமைப்புகள் சரிவை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றன.

இதற்கு நிறையக் காரணங்கள் உண்டு. வர்த்தகப் போட்டி உச்சத்தில் இருக்கும் காலத்தில், குறிக்கப்பட்ட விலையை விடவும் குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்யும் தனியார் கடைகள், வாடிக்கையாளர்களை தமது பக்கம் ஈர்த்துக்கொள்கின்றன. ஆனால் 'அச்சிடப்பட்ட' விலையை விட ஒரு சதம் கூட குறைத்துவிற்க சங்கங்கள் முன்வருவதில்லை.

இதைவிட சங்கக்கடை கிளைகள் பலவும் எப்போது திறக்கும், எப்போது பூட்டப்படும் என்பது அந்தக் கிளையின் முகாமையாளருக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். இதைவிட எப்போதும் பாழடைந்த கட்டடம் போல ஒரு இருண்மைத் தன்மையோடே சங்கக் கிளைகள் காட்சி அளிக்கின்றன. வாடிக்கையாளர்களைக் கவரும் திறன் சங்கக் கிளைகளில் வெளித் தோற்றத்தில் இருப்பதில்லை. அத்தோடு தனியார் கடைகளில் உள்ளதைப் போன்ற உபசரிப்பும் வாடிக்கையாளருக்கு சங்கக் கடையில் கிடைப்பதில்லை. அதனால் எப்போதும் திறந்திருக்கும் தனியார் கடைகளை தமது நிரந்தர நுகர்விடமாக மக்கள் மாற்றிக்கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

'ஆற்றில போற தண்ணிதானே. அண்ணனும் குடி.. தம்பியும் குடி' என்ற கதையாக சில பெருச்சாளிகள் சங்கத்தின் சொத்துகளை தமது தேவைக்காக பயன்படுத்திக்கொண்டு விட்டனர். இதனால் பல சங்கங்கள் வங்கிகளில் கடன் வாங்கியே தமது செயற்பாட்டை 'கொண்டிழுக்கவேண்டிய' நிலை. இந்தக் கடனுக்கான வட்டியை கட்டவே சில சங்கங்கள் விழிபிதுங்குகின்றன. இதைவிட தொட்டதற்கும் கூட்டுறவு திணைக்களத்தின் அனுமதியை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய நிலை. உரிய காலத்தில் அனுமதிகள் கிடைக்காததாலும், திணைக்களத்தின் தொலைநோக்கற்ற முடிவுகளாலும் சங்கங்களுக்கு ஏற்படவேண்டிய சில அனுகூலங்கள் இல்லாமலே போய் விடுகின்றன.

தனியார் துறையை விட கூட்டுறவுச் சங்கங்களின் வேதனமும் மிகக்குறைவு. இன்றைய விலைவாசி உயர்வில் இந்தச் சம்பளத்தில் வாழ்க்கையை கொண்டு நடத்துவது இயலாத காரியம் என்பதனால், பணியாளர்கள் பலரும் விலகி தனியார் துறையில் வேலைதேடி புறப்பட்டு விட்டனர். இதனால் பெரும்பாலான சங்கங்கள் மிகக்குறைந்த ஆளணியுடனேயே இயங்குகின்றன.

இவற்றையெல்லாம்விட மிகமுக்கியமான விடயம், புதிய மாற்றங்களை உள்வாங்காமல் இன்னமும் 60 களின் காலத்தில் நிலவிய கட்டுப்பெட்டித் தனத்தோடு கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குவதுதான். இளையோரை கூட்டுறவுச் சங்கங்களில் இணைக்க எந்தவொரு அக்கறையும் எடுக்கப்படுவதில்லை. இளையோரும் கூட்டுறவு அமைப்புகள் மீது தமது கவனத்தை செலவிடுவதில்லை.

இத்தகைய தன்மை காரணமாக பல சங்கங்கள் தம்முடைய கிளைகளுக்கு மூடுவிழா நடத்தி வருகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும் போது கூட்டுறவுத் துறையின் முடிவுக் காலம் நெருங்கி விட்டதோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் நான்கு சங்கங்களைத் தவிர ஏனைய ப.நோ.கூ. சங்கங்கள் யாவும் இலாபத்தில் இயங்குவதாக கூட்டுறவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. பணியாளர்களை குறைப்பு, கிளைகளை மூடுதல், சொத்துகளை விற்றல், வங்கிக் கணக்குகளை வழித்துத்துடைத்து சங்கக் கடன்களை அடைத்தல் என்பன போன்ற செயற்பாடுகள் மூலமே பல சங்கங்கள் இலாபத்தில் இயங்குவதான நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இலாபம் ஒரு மாதத்துக்கு மட்டும் என்றில்லாமல், தொடர்ந்தும் கிடைத்தால் மாத்திரமே குறித்த சங்கங்கள் வெற்றிகரமாக இயங்குகின்றன என்பதை உறுதிப்படுத்த முடியும். மாற்றங்கள் ஏற்பட்டால் மாத்திரமே கூட்டுறவு அமைப்புகளின் இருப்பு நிரந்தரத்துவத்தை எய்தும். தக்கனவே எப்போதும் பிழைக்கும்.

# ஒபாமா எதிர் மஹிந்த

■ குத்தூசி

அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதியாக நியமனம் பெற்ற ஜனாதிபதி பராக் ஒபாமா மீண்டும் தேர்தலில் வென்று 45 ஆவது ஜனாதிபதியாகவும் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

பராக் ஒபாமாவின் இந்த மீள் வெற்றியானது, சர்வதேச சமூகத்தை அமெரிக்காவை நோக்கித் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. குடியரசுக் கட்சியின் வேட்பாளர் ரோம்னிக்கும், ஒபாமாவுக்குமிடையில் தேர்தல் போட்டி கடுமையாக இருந்தாலும் ஒபாமா தனது வசீகர முகத்தாலும், பேச்சாற்றலாலும் அமெரிக்க மக்களின் மனங்களைக் கவர்ந்துவிட்டார்.

ஒபாமாவின் ஆட்சிக்காலம் நடைபெற்றபோதுதான் 'தீவிரவாதத்துக்கு எதிரான போர்', 'அரபுலக வசந்தப் புரட்சி' என்பன தீவிரமடைந்தன. பராக் ஹுசைன் ஒபாமா என்றவுடன் அவர் ஜனாதிபதியானாலும் அரபு நாடுகளுடன் நேசம் கொள்வார். இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளைப் பெரிதாகக் கண்டுகொள்ளமாட்டார் என்றெல்லாம் கருதப்பட்டது.

ஆனால், இரட்டைக் கோபுரத் தாக்குதலினால் கொள்ளைபோயிருந்த அமெரிக்காவின் மானத்தை ஒசாமா பின்லேடனைக் கண்டுபிடித்து அழித்ததன் மூலம் ஓரளவு காப்பாற்றிக் கொடுத்த ஒபாமா அரபு நாடுகளிலும் இஸ்லாமிய வசந்தப் புரட்சியை முடுக்கிவிட்டார்.

இப்போது ஒபாமா தனது இரண்டாவது பதவிக்காலத்தைத் தொட்டிருக்கிறார். நிச்சயம் அவரது முதலாவது பதவிக்காலத்தை விட இரண்டாவது பதவிக்காலம் சற்றுக் கடுமையானதாக - கடினமானதாக இருக்கும். ஏனெனில், பொருளாதாரப் பிரச்சினைகள், வேலைவாய்ப்பு என்றவாறான உள்நாட்டு நெருக்கடிகளில் சிக்கித்தவித்த ஒபாமா, ஒருமாதிரியாக மீண்டும் ஜனாதிபதி ஆகிவிட்டார். எனவே அந்தப் பிரச்சினைகளைக் கையிலெடுத்துக்கொண்டு அதிரடியான திட்டங்களில் இறங்கக் கூடும். "வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் ஒன்றாக இருப்போம்" என்ற ஒபாமாவின் வாசகங்கள் இனி அடுத்த நான்கு வருடங்களுக்கு செய்திகளைச் சொல்லப்போகிறது.

சரி, இனி விடயத்துக்கு வருவோம். ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலம் இலங்கையில் எந்த வகையில் தாக்கங்களைச் செலுத்தப் போகின்றது என்பதைப் பற்றி இப்போது ஆராய்வோம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான மூன்று தசாப்த காலப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக 2009 ஆம் ஆண்டு இலங்கை அரசு அதிதீவிர நடவடிக்கைகளை எடுத்திருந்தது. சர்வதேச சமூகம் இலங்கை விடயத்தில் அப்போது தலையிட்டபோது, போரை முடிக்கும்வரை அமைதியாக இருக்குமாறும், போர் முடிந்த கையோடு தமிழருக்கு அரசியல் தீர்வு உடனடியாக கொண்டுவரப்படுமென்றும் அப்போது இலங்கை அரசு சர்வதேச சமூகத்திடம் உறுதியளித்திருந்தது.

இலங்கையின் அந்த உறுதி மொழியை நம்பி ஏமாந்த சர்வதேச சமூகம்தான் இப்போது அந்த உறுதி மொழிகள் என்னாயிற்று என்று கேள்விகளை எழுப்பத்தொடங்கியிருக்கின்றது.

சிலசமயம் அமெரிக்க ஜனாதிபதியாக ரோம்னி தெரிவுசெய்யப்பட் [illegible] [illegible] மென்று இலங்கை நினைத்தால் அதுவும் தவறுதான். ஏனெனில், குடியரசுக் கட்சி சீனாவுடன் கடுப்பைக் கொண்டிருக்கும் ஒரு கட்சி. இலங்கை அரசு சீனாவுடன் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் நெருங்கிய நட்பு ரோம்னி அமெரிக்க ஜனாதிபதியாகியிருந்தால் ஆபத்தில் முடிந்திருக்கும் என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

சரி, விடயத்துக்கு வருவோம். இப்போது ஒபாமாவின் இரண்டாவது பதவிக்காலத்தில் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துக் கவனம்செலுத்தவேண்டும்.

சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் விடயத்தில் ஒபாமா நிர்வாகம் கடும்போக்கைத்தான் கடைப்பிடித்து வருகிறது. இதனால்தான் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமர்வில் இலங்கைக்கு எதிராகத் தனது நேச சக்திகளை இணைத்துக்கொண்டு தீர்மானமொன்றை நிறைவேற்றியது அமெரிக்கா.

இறுதிப் போர் நடந்து முடிந்தது முதல் இன்றுவரை சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அளித்த வாக்குறுதிகள் ஒன்றுமே நிறைவேற்றப்படவில்லை. இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து நீதியான விசாரணை, தமிழர்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு, கிழக்கிலிருந்து படைக்குறைப்பு, ஆயுதப்படைகளின் ஆயுதக்களைவு என்று உத்தரவாதமளித்த எதனையும் இலங்கை அரசு முறையாக நிறைவேற்றாத காரணத்தினால்தான் ஒபாமாவின் இரண்டாவது நிர்வாகம் அதாவது, இந்த இரண்டாவது ஆட்சிக்காலம் இலங்கைக்குச் சங்கடம் மிகுந்ததாக அமையப்போகிறது.

### பிளேக்கின் காய்நகர்த்தல்களை எதிர்பார்க்கலாம்

இலங்கை தொடர்பில் மிகுந்த ஞானம் உள்ள அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் றொபர்ட் ஓ பிளேக், ஒபாமாவின் இந்த இரண்டாவது ஆட்சிக்காலத்தில் உயர்ந்த பதவி ஒன்றுக்கு மாற்றப்படும் சாத்தியம் உள்ளது. இலங்கையின் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை எப்போதுமே வலியுறுத்தி வரும் பிளேக், இலங்கையின் இறுதிப் போரின்போது - அதன் இறுதிக் காலங்களின்போது; தொடர்பில் இருந்தவர். எனவே, இலங்கை தொடர்பான அவரின் காய்நகர்த்தல்கள் அமோகமாக இருக்கப்போகின்றன.

அடுத்ததாக, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் மிச்செல் சிசன் அம்மையாரையும் நாம் சாதாரணமாகக் கருதிவிட முடியாது. அரபுலக வசந்தம் தொடர்பில் அவர் மேற்கொண்ட அணுகுமுறைகளும், மதிநுட்பங்களும் ராஜாங்கத் திணைக்களத்தில் அவருக்குப் பெரு மதிப்பைக் கொடுத்திருக்கிறது. இலங்கை விடயம் அரபுலக வசந்தம் போன்றளவு பாரதூரமானதாக இருக்கப் போவதில்லை.

எவ்வாறாயினும் இதற்கெல்லாம் அப்பால் இலங்கைக்கு ஓர் அதிர்ச்சி காத்திருக்கிறது. அது என்னவெனில், அமெரிக்க புதிய வெளிவிவகார அமைச்சராக சுசான் ரைஸ் வரப்போவதுதான்.

இப்போதைய அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் ஓய்வுபெறவுள்ள சூழ்நிலையில் இப்போது ஐக்கிய நாடுகள் [illegible] அமெரிக்காவின் தூதுவ[illegible] இருக்கும் சுசான் ரைஸ் புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படலாமெனக் கூறப்படுகிறது.

எப்படியோ அமெரிக்காவின் முக்கிய இராஜதந்திரிகளான செனட்டர் ஜோன் கெரி மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரொம் டொனிலன் ஆகியோரும் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படத் தகுதியானவர்கள்தான். ஆனால் சுசான் ரைஸ் இவற்றுக்கு ஒருபடி மேலே ஜனாதிபதி ஒபாமாவின் நம்பிக்கையைப் பெற்றவராகக் காணப்படுகிறார். இதனால்தான் தூதுவர் ஒருவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அதிகாரத்தை ஒபாமா வழங்கி சுசான் ரைஸை உயர் நிலையில் வைத்திருக்கிறார்.

சுசான் ரைஸ் ஆபிரிக்க - அமெரிக்கப் பெண்மணி. வெளிவிவகார அமைச்சு இவருக்குக் கிடைத்தால் அமெரிக்காவின் இந்தப் பதவியை வகிக்கும் இரண்டாவது ஆபிரிக்க - அமெரிக்க பெண்மணியாக இருப்பார். ஏனெனில் ஜோர்ஜ் (ஜூனியர்) புஷ் ஆட்சியில் கொண்டலிஸா ரைஸ் வெளிவிவகார அமைச்சராகப் பதவிவகித்திருந்தார். அவர் ஆபிரிக்க அமெரிக்கராவார்.

சுசான் ரைஸ் மீது லிபியா தொடர்பிலும், இஸ்லாத்துக்கெதிரான வீடியோ தொடர்பிலும் விமர்சனங்கள் எழுந்தன. இருந்தாலும் தீவிரவாதத்துக்கெதிரான போர் என்ற கொள்கையின் கீழ் ஒபாமாவின் ஆதரவை ரைஸ் இழக்கவில்லை.

எனவே, சுசான் ரைஸ் வெளிவிவகார அமைச்சராக நியமனம் பெற்றால் இலங்கையின் தலையில் இடிவிழுந்த கதையாகத்தான் இருக்கும். ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச ரீதியில் பல்வேறு விடயங்களில் தலையீடுகளை மேற்கொள்ள சுசான்ரைஸ் பெரும் பங்குவகித்திருக்கிறார். குறிப்பாக இலங்கை விடயத்தில் அவர் மிகவும் கறாரானவர். இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் கடந்த காலங்களில் அவர் பிடித்து வந்த கடும்போக்கு கொள்கைகள் அவர் வெளிநாட்டமைச்சராக வந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்க்கத் தேவையில்லை. எனவேதான் ஒபாமாவின் இந்த இரண்டாவது பதவிக்காலம் இலங்கைக்குப் பல்வேறு வழிகளில் நெருக்கடி தரும் ஒரு காலமாக இருக்கப்போகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு நடைபெறவுள்ளது. அதற்கு முன்பாக இலங்கை அரசு பெரிதாக எதனையும் செய்துவிட வாய்ப்பில்லை. நாட்டின் நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்குமிடையிலான போர் உக்கிரமாகி அதனால் ஏற்படும் விளைவுகளின் தாக்கம் இந்த ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு இருக்கும்.

இதற்கு அப்பால் நல்லிணக்க ஆணைக்குழு சிபாரிசுகளின் அமுலாக்கம் என்ற பெயரில் வித்தை காட்டி கடந்த தடவை ஜெனிவாவில் தப்பித்துக்கொண்ட இலங்கை, மார்ச் மாதம் என்ன பதிலைத் தரப்போகின்றது என்பதை அமெரிக்கா கழுகுக் கண்களால் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது. எப்படியோ உலக பொலிஸ்காரனான அமெரிக்காவிடம் தெரிந்தோ தெரியாமலோ சிக்கித் தவிக்கிறது இலங்கை. இதனால்தான் ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாகிவிடக்கூடாது என்று இலங்கையும் மனதுக்குள் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தது.

பராக் ஒபாமாவின் இந்த இரண்டாவது ஆட்சிக் காலத்திலாவது இலங்கையில் தமிழர்களுக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க அமெரிக்காவின் அழுத்தம் முறையாகக் கிடைக்குமா? இதற்கு காலம்தான் பதில் கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் முனைவர்களின் ஆர்வமும் முயற்சியாண்மையும்

■ கலாநிதி க.குகதாசன்




ஒரு நாட்டின் அதி சிறந்த வளம், அந்த நாட்டின் நீர்வளமும் நிலவளமும், கனிம வளங்களுமல்ல. ஒரு நாட்டினது அரும்பெரும் செல்வம் அந்த நாட்டில் வாழும் தொழில் முனைவர்களின் முயற்சியும், முன்னோக்குக் கண்நோக்குச் சிந்தனைகளுமே. "சீரான சிந்தனைகளே சிறப்பான செல்வம்" என்று தற்கால முகாமைத்துவச் சிந்தனையாளர்கள் கருதுகின்றனர். அவர்களே பாலைவனத்தைக்கூடப் பசுஞ்சோலைகளாக மாற்றவல்லவர்கள்.

ஒருநாட்டுக்கு நீர் வளம், நில வளம் அவசியமானதே. ஆனால் மக்கள் மனவளத்தாலேயே உயர்ந்த சாதனைகளை நிலைநாட்ட முடியும். மனவளமுடையோர் சிறுதொழிலையும் பெருந்தொழிலையும் உருவாக்குகிறார்கள். ஒரு நாட்டை மகத்தான நாடாக, வலிமைமிக்க நாடாக மாற்றுகிறார்கள். மனவளமும் உழைப்பும் ஊக்கமும் உறுதியும்தான் அமெரிக்காவாக, ஜப்பானாக, தென்கொரியாவாக, சிங்கப்பூராக மலர்ந்திருக்கின்றன.

தொழில் அதிபர்களே, செல்வமும் செல்வாக்கும் உடையவர்களாக, வலிமை படைத்தவர்களாக படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குபவர்களாக, கலைஞர்களுக்கு ஆதரவு கொடுப்பவர்களாக நாடும், ஏடும் போற்றும் உயர் உத்தமர்களாக வாழ்வாங்கு வாழ்கின்றனர்.

ஒரு சமுதாயம் முன்னேறுவது பொருளாதார மேம்பாடு அடைவது அங்கு வாழும் தொழில் அதிபர்களின் ஆர்வத்தினாலும் முயற்சியினாலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மூலமாகவுமே. தொழில் அதிபர்கள் முன்னேறும் போதே சமுதாயம் முன்னேற முடியும். சமுதாயம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் சுதந்திரமாகச் செயற்படவேற்ற புதிய சூழ்நிலை அமைக்கவேண்டும். வங்கிகள் அவர்களுக்கு உதவ முன்வரவேண்டும்.

**தொழில் ஆர்வம்**

தொழில் தொடங்கும் ஆர்வமும், முனைப்புமே உங்களது முதற்படி. நீங்கள் அந்த ஆர்வத்துடன் செயற்பட முனையும்போது திடீரென அந்தத் துறையில் ஓர் ஈடுபாட்டைக் காணமுடியும். அதிலேயே ஊறிப் போவதன் மூலம் நீங்கள் எடுக்கும் செயல்கள் உங்களுக்கே சாதாரண செயல்களாகத் தோன்றும். நீங்கள் வெற்றி காண்பீர்கள். தொழில் ஆர்வம் உரிய, உயர்ந்த சந்தர்ப்பங்களை உருவாக்குகிறது. தொழில் தொடங்கும் ஆர்வமுடையவர்கள், தத்தமது முயற்சிகளை சிறிது சிறிதாக ஆரம்பிப்பதே சிறந்தது. இன்று வானளாவி உயர்ந்து நிற்கும் தொழிற்சாலைகள் பலவும் குடிசைகளிலேயே ஆரம்பித்தன. சென்.அன்ரனீஸ் நிறுவனம், மலிபன் நிறுவனம், மஸ்கன்ஸ் நிறுவனம், கொலோனியல் நிறுவனம் யாவும் குடிசைகளிலிருந்து ஆரம்பித்தே, குபேர நிறுவனங்களாக மாறியுள்ளன.

தானே மருந்து தயாரித்து, தானே அதைப் போத்தலில் போட்டு, தானே லேபல் ஒட்டி, தானே வீடு வீடாக, கடை கடையாகச் சென்று விற்பனை செய்தவரே 'சித்தாலேப' முதலாளி கெற்றிகொடா.

வீடு வீடாக, கடை கடையாக நடந்து பாண் விற்று ஆரம்பித்த தொழிலே இன்று மலிபன் நிறுவனமாக நிமிர்ந்து நிற்கின்றது. இன்று உயர்ந்து நிற்கும் பல இரும்புக் கடை நிறுவனங்களைக் கவனியுங்கள். அவர்களது ஆரம்பம் குடிசைகளிலிருந்தே தொடங்கியது.

**தன்னகவள முயற்சியாண்மை**

தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு என்னென்ன அவசியம்? பணமா? மனநிலையா? பணபலம் அவசியமே. ஆனால் அதற்கு முன்பாக நல்ல மனநிலை அவசியம். செல்வத்துள் செல்வம், உங்கள் மூளை, மனோதிடம், ஆரோக்கியமான உடல்நிலை, வழிப்படுத்தி நெறிப்படுத்தும் ஆத்ம பலம், இவை நான்குமே. இத்தகைய வளங்களைப் பெருக்காதவர்களுக்கு இவ்வுலகம் இல்லை. இதனை ஆங்கிலத்தில் Multi Intelligence Investment Approach என்று கூறுகின்றனர். தற்கால முகாமைச் சிந்தனையாளர்கள் 'முதலில் உங்கள் உடம்பில் மறைந்திருக்கும் உறைந்திருக்கும் வளங்களை முதலீடு செய்யுங்கள்' என்று கூறுகின்றனர்.

தங்கள் உடம்பில் மறைந்திருக்கும் சக்தியை, வளத்தை, வல்லமையைத் திறமையாக முதலீடு செய்யத் தெரியாதவர்களால், ஒரு விதமான முதலீடுகளையும் செய்ய முடியாது என்று கூறுகின்றனர். உங்களது அதிஉன்னதகருவிமூளை. எண்ணியவற்றை எண்ணியவாறு அமைத்திடும் அதிவிசேட கருவி மனம், உங்கள் நல்வாழ்வுக்கு வித்திடும் ஆரோக்கியமான உடல், உங்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தும் ஆத்மபலம் ஆகியவற்றை முதலீடு செய்வதே எல்லாவிதமான முதலீடுகளுக்கும் முதற்படி.

எவ்விதமான தொழிலை நான் ஆரம்பிக்க வேண்டும்? என்று எண்ணமுன் முதலில் அதனை நன்றாக செயற்படுத்துவதற்கு நல்லதோர் மனநிலையைத் தயார் செய்து கொள்ள வேண்டும். நன்றாகப் பண்படுத்தப்பட்ட நிலத்தில் தான் விவசாயி விதைக்கிறான். நிலம் பண்பட்டிருக்கும்போது தான் விதை இலேசாக வெடித்து வேர்விட ஏதுவாகிறது. செடி நன்றாக வளர்கிறது. கட்டாந்தரையில் யாரும் விதைப்பதில்லை. இது போலவே உற்சாகமான ஒரு மனநிலையை நாம் முதலில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். 'இது முடியும்' என்ற மனநிலை, 'சந்தோஷமாக வாழ்வேன்' என்ற மனப்போக்கு, 'பெருந்தகையாளனாக நடப்பேன்' என்ற உயர் உள்ளம், இவைகளே சாதனை புரியும் மனத்தின் தூண்டுதல் அடித்தளம்.

இப்போது உளவியல் முயற்சியாண்மை என்றதுறை மிக வேகமாக முன்னேறி வருகின்றது. இந்தக் கால வழிகாட்டிகள், பொருள் முதலீட்டுக்கு முன்னர் உளவியல் முதலீடுகளை மேற்கொள்வது சாலச் சிறந்தது.

# சிறுவர் இலக்கியம்

■ சி.டினோஜா
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, 2ஆம் வருடம், ஆரம்பக்கல்வி.



பல வகையான இலக்கியங்களுள் சிறுவர் இலக்கியமும் பழமையான ஓர் இலக்கியமாக காணப்படுகிறது. ஒரு மரம் செடியாக இருக்கும் போது, தினமும் நீர் ஊற்றி, மண்ணைக் கிளறிவிட்டு உரம் இட்டு ஆடு, மாடுகள் கடித்து விடாது பாதுகாக்கும் போது அது எமக்கு நல்ல பலனைத் தரும். குழந்தைகளும் அப்படிப்பட்டவர்களே. அவர்களுக்கு ஆரோக்கியமான உணவளித்து, ஒழுக்கங்களைக் கற்பித்து நல்லறிவு புகட்ட வேண்டும். இவற்றை எல்லாம் அக்கறையுடன் செய்யாவிட்டால் சிறுவர்கள் மனிதர்களாகலாம். ஆனால் நல்ல குடிமகனாகவும், சான்றோர்களாகவும் திகழ முடியாது. கற்றல் என்பது வெறும் எழுத்தறிவை மட்டுமல்ல. நற்பண்பை அறிதலையும் குறிக்கின்றது. இவ்விரண்டையும் பெற்றால் தான் வாழ்க்கை பயனுள்ளதாக அமையும் "இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் வருங்கால சமுதாயத்தை உருவாக்கித் தாங்கி நிற்கும் தூண்" போன்ற அவர்களை நற்பண்புடையவர்களாகத் திகழ வழிவகுப்பது சிறுவர் இலக்கியமே. பெரிய இலக்கியங்களையும் படிக்கப் பழக வேண்டும். ஆனால் சிறுவர் இலக்கியங்களைப் புறந்தள்ளக் கூடாது. உலகில் சிறுவர் இலக்கியம் எங்கெல்லாம் செழுமையுடன் உள்ளதோ, அங்கெல்லாம் சிறந்த சமூக உருவாக்கம் நிகழ்கின்றது என்பது கண்கூடு.

சிறுவர் இலக்கியமானது சிறுவர் கல்வியில் மட்டும் அல்லாது, வாழ்விலும் முக்கியமானஓர் இடத்தினைப் பெற்றுக் கொள்கின்றது. பாடத்திட்டத்தினையும் தாண்டி மௌனமாகக் கற்றுக் கொள்ள இது உதவுகின்றது. ஆரம்ப காலத்தில் கூட்டுக் குடும்பமாக இருந்த காரணத்தினால் சிறு பிள்ளைகளுக்கு வீட்டிலே இருந்த பாட்டி, தாத்தா, பெரியவர்கள் கதைகளைச் சிறுகச் சிறுக கூறுவார்கள். இதனால் பிள்ளைகள் நேர்மையாக, உண்மையாக, நல்ல ஒழுக்க, விழுமியப் பண்பு கொண்டவர்களாக, சிறந்த மனிதநேயம் உடையவர்களாக திகழ்ந்தார்கள். இன்று அந்த முறையானது மாறிவிட்டது. இன்று கருக்குடும்பமாக, நடுக்கர குட்டிக் குடும்பத்தில் வளரும் பிள்ளைகளுக்கு தோன்றும் கேள்விகள் வாழ்க்கைப் பாடங்கள், தற்கொலை, பொறாமை, கொடுமைகள் அன்றாடம் உள்ள இறுக்கமான மன அழுத்தம் போன்றவற்றைச் சமாளிப்பது எப்படி என்றெல்லாம் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ள இன்று யாரும் இல்லை. அவர்களின் மனதுக்குள்ளே இவை புதைந்து போகின்றன. பள்ளிச் சிறுவர்களை அவர்களின் அடுத்தவயதிற்குதயார் செய்யும் பொறுப்பை இலக்கியம் வாயிலாக சொல்லிக்கொடுக்க வேண்டும். இன்று உலகமயமாக்கலின் காரணமாக பல தொழில்நுட்ப ஊடகங்களின் வருகையும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இதன் காரணமாக தமது பொழுதுபோக்காக நூல்களை வாசிப்பதை விடுத்து தொலைகாட்சி நிகழ்ச்சிகளும், கணினிவிளையாட்டுக்களும் அதிகரித்து அவர்களது நேரம் வீணடிக்கப்படுகின்றது. இவ்வாறு தொலைகாட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் மூலம் அவர்களிடம் மறைந்து கிடக்கின்ற ஆற்றல்கள், உள்ளார்ந்த கற்பனைத் திறன்கள் என்பனவற்றை வெளிக்கொணர முடியாமல் மறைந்து போகின்றன. சிறுவர்கள் நூல்களை வாசித்துப் பார்ப்பதன் மூலம், சித்திரங்கள் வரைதல், சிறுசிறு கட்டுரைகள் கவிதைகள் எழுதுவதற்கான ஆற்றல்களை இந்த இலக்கியங்கள் பெற்றுக் கொடுக்கின்றன. ஆனால் இதனை அறியாது பிள்ளைகள் தமது ஆளுமைகளை வளர்த்துக் கொள்ள முடியாமலும், கற்பனைத் திறன் [illegible] இலக்கியத்தின் மகிமையை பொருத்தமான வழிகாட்டுதல் இன்மையுமே காரணங்களாக உள்ளன.

எழுதப்படாத வாய்மொழி மரபில் பிள்ளைகளுக்காக நம் முன்னோர்கள் உருவாக்கியது ஏராளம். தாலாட்டில் தொடங்கி குழந்தைகளுக்கு ஊட்டும் கதைகளும், பாட்டுக்களும் உலகின் வேறெந்த நாட்டை விடவும் நம் பண்பாட்டில் அதிகம் உள்ளன. எழுதப்படிக்க ஆரம்பிக்கும் போதே தமிழில் கற்பிக்கப்படும் முதல்நூல் "ஆத்திசூடி" தான் தாய்ப்பாலூட்டலுடன் தமிழ்ப்பாலும் கலந்து ஊட்டப்படுவது ஆத்திசூடியின் மூலமே. பெரிய நூல்கள் பல இருந்தும் நீதிகளையும், நீதிக் கருத்துக்களையும் "ஆத்திசூடி", கொன்றை வேந்தன்" ஆகிய நூல்கள் எளிய சொற்களால் அமைந்த சிறிய வாக்கியங்களால் கற்றுக் கொடுக்கின்றன. இவற்றில் ஆத்திசூடி மிகச்சிறிய வாக்கியங்களாலும், கொன்றை வேந்தன் சற்றுப் பெரியவாக்கியங்களாலும் ஆனவை. "இன்னதைச் செய்" அல்லது இன்னதைச் செய்யாதே", "இப்படிச் செய்தால் நன்று", "இப்படிச் செய்தால் தீமை' என்ற பாங்கில் அவை அமைந்திருக்கின்றன.

இளஞ்சிறார்கள் மிக எளிதாய்ப்படித்துப்புரிந்து கொள்ளும் படி அமைந்தவை இவை. அத்தனை இலக்கியங்களையும் படித்து மனனம் செய்து விட்டால் அவை பசுமரத்தாணிபோல் மனதில் ஆழமாகப் பதிந்து விடும். இதனால் அந்த மனிதரில் சிந்தனை , செயல், யாவற்றிலும் அவற்றின் பிரதிபலிப்பைக் காண முடியும். பஞ்சதந்திரக்கதைகள், மாயாஜாலக் கதைகள், தென்னாலிராமன் கதைகள், பரமார்த்த குரு கதைகள், சிபிச்சக்கரவர்த்தி என நாம் கேட்டறிந்த கதைகள், என எத்தனை சிறந்த இலக்கியங்களைப் படித்தாலும் அவை மனதில் ஒரு மூலையில் என்றும் குழந்தைப் பருவத்தை நினைவு படுத்திக் கொண்டிருக்கும். குழந்தைகளுக்கான நாவல்கள், குழந்தை நாடகங்கள், குழந்தைக் கவிதைகள், புதிர்கள், சிறுவர் படக்கதைகள், சுற்றுலாக் கட்டுரைகள், மகான்களின் வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, விஞ்ஞானம் சம்பந்தமான தொகுப்புக்கள் என்பனவும் குழந்தை அதாவது சிறுவர் இலக்கியத்துள் அடங்குகின்றன.

இவ்வாறு சிறுவர்களுக்கான நூல்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சிறந்த மொழியாற்றல், பேச்சுத்திறன், கற்பனைத் திறன், வாசிப்புத்திறன், இரசனை உணர்வு, நீதி நெறிகள், ஒழுக்க விழுமியப் பண்புகள், சிறந்த ஆக்கங்களை எழுதும் ஆற்றல் என்பவற்றுடன், பெரியவர்களுடனான சிறந்த தொடர்பாடல், சமூகத்துடன் சிறந்த உறவு, நன்மதிப்பு இவற்றுடன் சிறந்த மனப்பாங்குள்ள நல்ல குடிமகனாகவும் உருவாவதற்கு இத்தகைய சிறந்த நூல்கள் உதவுகின்றன. எனவே சிறந்த நூல்களைக் கற்று பூரணமனிதன் ஆவோம்.

"வாசிப்பின் மூலம் மனிதன் பூரணத்துவம் உடையவனாகிறான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது வெற்றி ?

இன்றைய காலகட்டத்தில் பெரும் செல்வம் சேர்த்து வீடு, வாகனம்,வேலையாள்கள் என ஆடம்பரமாக இருப்பவரைத்தான் வாழ்வில் வெற்றி பெற்றவராகக் கருதுகிறோம்.

உண்மையில் அவன் அடைந்தது வெற்றியா?

மனிதன் பெருமளவில் பணம் சேமிப்பது உண்மையான வெற்றியாகாது.

பணம் சேமிப்பதே வாழ்வின் முன்னேற்றம் என்று நினைப்பது மடமை.

ஒவ்வொரு மனிதனும் ஆன்ம முன்னேற்றம் அடைவதே உண்மையான வெற்றி.

கோடி கோடியாய்ப் பணம் சேர்த்தாலும் அதனை முழுமையாக அனுபவிக்க முடிகிறதா?

மனம் அமைதியாகவும், நிம்மதியாகவும் இருக்கிறதா?

நீ நிம்மதியாக வாழ்ந்தால் அதுவல்லவா வெற்றி?

பணம் சேமிப்பதற்காகப் படாதபாடு படுகிறாய்.

அதனால் என்ன பயன் என்று சிந்தித்துப்பார்.

பணத்தால் உனக்கு மகிழ்ச்சி கிடைக்கிறதா?

மிகப்பெரிய செல்வந்தனாய் வாழ்ந்து, அந்தச் செல்வத்தால் பயனில்லை என்று உணர்ந்து துறவியானவர் பட்டினத்தார்.

நீ வாழ்வதற்காகப் பணம் சேமி.

ஆனால், பணம் சேமிப்பதற்காகவே வாழாதே!

பணவெறி உன்னைப் பாவங்களைச் செய்யத் தூண்டுகிறது.

அதனால் பணத்தின் மீது பற்று வைக்காதே.

பணம் சேமித்து அதன் மூலம் அடைவதே வெற்றி என்று எண்ணாதே.

நதியின் வெற்றி கடலை அடைவது.

மனிதனின் வெற்றி கடவுளை அடைவது.

பெரும் செல்வம் உன்னிடம் இருந்தால், அதை ஏழைகளுக்குக் கொடு.

'செல்வத்துப் பயனே ஈதல்' என்கிறது சங்கத் தமிழ்.

நல்வழியில் ஈட்டிய பொருளை நீ பிறருக்கு மகிழ்வுடன் கொடுக்கும் போது இறைவனும் மகிழ்கிறான்.

பிறருக்கு நீ பொருளைத் தந்தால், இறைவன் உனக்கு அருளைத் தருகிறான்.

அதைவிடுத்து, பெருமளவில் பணம் ஈட்டி உன் சுயநலத்துக்கே நீ பயன்படுத்தினால், அதனால் நீ வெற்றி அடைய இயலாது.

சுயநலவாதி வெற்றி பெற்றவனாக மாட்டான்.

பொதுவாக, பணம் சேமிப்பது வெற்றியல்ல என்பதை நன்கு உணர்ந்துகொள்.

மனிதன் தன் ஆன்ம முன்னேற்றத்திற்காக முயற்சிகள் செய்ய வேண்டும்.

ஆன்மா, இறைவனோடு கலப்பதே ஆன்ம வெற்றி.

இந்த வெற்றியை அடைய முயற்சிசெய்.

நீ வாழ்வில் எத்தனை வெற்றிகள் அடைந்தாலும் அவை அனைத்தும் பெரிதல்ல.

ஆன்மாவின் முன்னேற்றத்தில் தான் உண்மையான வெற்றி இருக்கிறது.

மனிதன் தன் நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்ந்தால் அதுதான் வெற்றி.

அந்த வெற்றியே நிரந்தரமானது.

ஆதலால் வெற்றி வெற்றி என்று உலக விடயங்களை நாடி, இன்பங்களை அனுபவிப்பதை நாடாதே.

என்றும் நிலையான, உண்மையான, மேலான பரம்பொருளின் திருவடியை அடைவதே உண்மையான வெற்றி.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# அற்புதங்களால் அடியார்களை வசப்படுத்தும் சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் ஆலயம்



ஞானி

**வை**ரவமூர்த்தமானது சிவாம்சமூர்த்தமாகும். சம்ஹாரருத்திரர் எனக்கூறப்படும் வைரவக்கடவுள் சத்துவ தாமசத்தவர் உடற்பற்றை துறத்தல் என்ற வகையில் நிர்வாணக் கோலத்துடன் உள்ளார். ஈழத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் உள்ளிட்ட அன்னியராட்சிக்காலத்தில் சைவ ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டு ஆட்சியாளர்களால் இந்துமத வாழிபாட்டுமுறைகள் புறந்தள்ளப்பட்டன. அந்தக் காலப்பகுதியில் மக்கள் வைரவர் கையில் ஏந்தும் சூலத்தை மறைவிடங்களிலும், கொல்லைப்புறங்களிலும் வைத்து வழிபட்டு வந்தனர்.

ஈழத்தில் வைரவர் வழிபாடு இயற்கையோடு இணைந்த ஒரு வழிபாடாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. கிராம பாலகர், ஊர்காவலர், காவற் தெய்வம் என்ற வகையில் வழிபடப்படும் வைரவருக்கு ஆலயங்களிலும், இல்லங்களிலும் கிராமங்கள் தோறும் இலகுவான முறையில் கோயில் அமைத்து வழிபட்டுவருகின்றனர். ஆலயங்களில் விசேட கிரியைகள் ஆரம்பமாகும்போது வைரவருக்கு சிறப்புக் கிரியைகள் செய்யப்பட்டு வைரவரை சாந்தப்படுத்தி வைரவருக்கு உரிய முறையிலான வழிபாடுக்கள் செய்யப்பட்டு அவரது அனுக்கிரகத்தைப் பெற்ற பின்பே, ஏனைய கிரியைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிவாலயங்களில் மட்டுமன்றி விநாயகர், முருகன், சக்தி ஆலயங்கள் உட்பட்ட ஆலயங்களில் உட்பிரகாரத்தில் கோபுரத்துக்கு வடக்குப் புறமாக மேற்கு நோக்கியவாறு வைரவரை பிரதிஷ்டை செய்து வழிபட வேண்டும் என சைவ ஆகமங்கள், ஆலய வாஸ்துசாத்திரம் என்பன குறிப்பிடும். வைரவரை சேத்திர பாலகர் என அழைப்பர். சேஷத்திரமாகிய கோயிலைப் பாதுகாப்பவர் என கொள்ளப்படும். ஆலயங்களில் அர்த்தஜாம பூசையின் பின்னர் ஆலயக்கதவுகளைப் பூட்டி திறப்புகளை வைரவர் முன்வைத்து ஆலயத்தையும் ஊரையும் பாதுகாத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்வர்.

**சிறுப்பிட்டி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் வரலாறும், வளர்ச்சி தொடர்பாகக் கூறப்படும் கதைகளும் அற்புதங்கள் நிறைந்தவை. அடியவர்களை ஆலயத்தின் அருள் வியாபகத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்வன.**

யாழ். குடாநாட்டில் வைரவரைக் காவல் தெய்வமாக, குல தெய்வமாகப் போற்றி கிராமங்கள் வீடுகள் தோறும் சிறு ஆலயங்கள் அமைத்து நாளாந்தம் வழிபட்டு வருவது நடைமுறையாகவுள்ளது. எனினும், வைரவரை மூலமூர்த்தமாகக் கொண்டு ஆலயம் அமைத்து தேர்த்திருவிழா நடத்துவதும் மிகக் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீமன்காமம், சுதுமலை, காரைநகர், விழிசிட்டி, நுணாவில், கவுணாவத்தை, நல்லூர் கொண்டலடி, கரம்பொன், கொக்குவில் தலையாழி, சங்காளை, சிறுப்பிட்டிமேற்கு பகுதியில் அமைந்துள்ள வைரவர் ஆலயங்கள் குறிப்பிடத்தக்கன.

சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. வலி.கிழக்கில் அமைந்துள்ள வைரவர் ஆலயங்களில் பெரியது. தேர்த் திருப்பணியோடு கூடியது. வருடாந்தம் பெரும் திருவிழா நடைபெறும் சிறப்பு மிக்க ஆலயமாகும்.

புத்தூர் நிலாவரைச்சந்தியில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் இராச வீதியில் கிழக்குப் புறமாகச் செல்லும் சிறுப்பிட்டி மேற்கு ஒழுங்கையில் 1500 மீற்றர் தூரத்தில் சிறுப்பிட்டி ஞானவைரவர் ஆலயம் பனங்கூடல், தென்னை, மாஞ்சோலை, வாழைத்தோட்டம் சூழவுள்ள சுற்றாடலைக் கொண்ட விசாலமான நிலப்பரப்பில், அழகுற மூடிய உட் பிரகாரத்துடன் அமைந்துள்ளது. ஆலய அமைவிடம் பக்திபூர்வமான அமைதியான சூழலில் ஊரின் நடுவிடத்தில் அமைந்துள்ளது.

சிறுப்பிட்டி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வரலாறும், வளர்ச்சி தொடர்பாகக் கூறப்படும் கதைகளும் அற்புதங்கள் நிறைந்தவை. அடியவர்களை ஆலயத்தின் அருள் வியாபகத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்வன.

சிறுப்பிட்டி மேற்கில் வாழ்ந்த மக்கள் பூர்வீகமாக தாங்கள் வாழ்ந்து வரும் சூழலில் பனந்தோப்பின் மத்தியில் உள்ள வேப்பமரத்தின் அடியில் வைரவர் சூலத்தை வைத்து தமது இஷ்ட தெய்வமாக வழிபட்டு வந்தனர். தமது நேர்த்திகளை நிறைவு செய்து பொங்கல், மடை செய்து வழிபட்டதோடு வைரவப்பெருமானில் வைராக்கியமான நம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

சூலத்தை வைத்து வழிபட்டு வரும் காலப் பகுதியில் ஆலயஸ்தாபகர்களின் வழித்தோன்றலான இளையதம்பி வேலுப்பிள்ளை என்பவர் அயலவர்களின் ஆலோசனை ஒத்துழைப்புடன் சுண்ணாம்புக் கலவை கொண்டு கல்லினால் சிறுகோயில் கட்டி அதில் ஞானவைரவர் விக்கிரகத்தை வைத்து பூசை வழிபாடு செய்து வந்தார். இவ்வாறு நடைபெற்று வரும் காலப்பகுதியில் குறிப்பிட்ட காலம் பூஜை வழிபாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன. இந்தக் காலப் பகுதியில் ஆலயச்சூழல் புதர் மற்றும் புற்றுகள் கொண்டனவாக மாறியது.

ஆலயம் அநாதரவான நிலையில் இருப்பதை அடியவர்களுக்கு எடுத்து உணர்த்தி அவர்களின் ஆணவத்தை அடக்கும் பொருட்டு திருவுளம் கொண்டார் வைரவப்பெருமான். தினமும் நண்பகல் 12 மணிக்கு ஆலயத்தின் மணி ஒலிக்க பூசை நடப்பது போன்றும், உணர்த்தத்தலைப்பட்டதோடு தினசரி மாலை ஆறு மணிக்கு பின்னர் கறுத்த நிறம் கொண்ட கம்பீரமான நாயுடன், ஒருவர் ஆலயச் சூழலில் வலம் வருவதைக் கண்ணால் நேரடியாகக் கண்டு உணரப்படுவதும் ஊர் முழுவதும் வியந்து பேசப்பட்டது. இரவில் அச்ச உணர்வும் உருவாகத் தொடங்கியது.


இதனால் ஊர் முழுவதும் இறைபக்தியோடு கூடிய அச்சம் நிலவியது. இரவு வேளையில் ஆலயத்திற்கு அண்மையில் செல்வதற்கு மக்கள் பயந்தனர். ஊரில் எதிர்பாராத அமைதி நிலவியது. மக்கள் இரவு வேளையில் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தனர். இந்தச் சூழ்நிலையில் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து பூசைவழிபாடு, பொங்கல் செய்யவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் மேலோங்கத் தொடங்கியது.

இதேகாலப்பகுதியில் மலேசியா நாட்டில் வனத்திணைக்களத்தில் பணிபுரிந்த சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு செல்லப்புவுக்கு விபத்தினால் இடதுபக்க இடுப்புப் பகுதியில் ஊனம் ஏற்பட்டது. தனது சொந்த இடமாகிய சிறுப்பிட்டிக்கு திரும்பி வந்து தனது சகோதரி குஞ்சுப்பிள்ளையுடன் வசித்துவந்தார். அவர் சிறுப்பிட்டியில் தங்கியிருந்த வேளையில் வைரவர் ஆலயச் சூழலில் நிகழ்ந்து வரும் நிதர்சனமான அற்புதங்களை நேரில் கண்டறிந்து ஆலயத்தைப் புனரமைக்கவேண்டும் என்பதில் தீராத ஆர்வம் கொண்டார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த காணிகள் வேண்டும் எமக்கு

## கிழக்கு விவசாயிகள்



மட்டக்களப்பு,நவ.16

கடந்த கால போரின் போது, தமது வயல் காணிகளை இழந்த வாழைச்சேனை பிரதேச விவசாயிகள் தமது வயல்நிலங்களை மீளவும் பெற்றுத்தருமாறு கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி, சிறு கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காணி உரிமையாளர்கள் ஏறாவூரிலுள்ள அமைச்சரின் இல்லத்தில் அமைச்சரைச் சந்தித்தபோதே இந்த வேண்டுகோளை முன்வைத்தனர்.

காணி உரிமையாளர்களின் இந்தப் பிரச்சினை தொடர்பிலான ஆவணங்களைப் பார்வையிட்ட அமைச்சர், இது தொடர்பில் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி, குறித்த நபர்கள் இழந்த காணிகளை மீளவும் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதியளித்தார்.

போர் நிலவிய காலப் பகுதியில் காணி உரிமையாளர்கள் தமது வயல் நிலங்களுக்குச் சென்று நெற் செய்கையில் ஈடுபட முடியாமல் இருந்தமையைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்ட சிலர், குறித்த காணிகளை அபகரித்துக் கொண்டுள்ளனர் என்று வாழைச்சேனை பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர்.

இவ்வாறான காணிகளையே மீட்டுத் தருமாறு காணி உரிமையாளர்கள் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## ஓட்டமாவடியில் எட்டாவது நடமாடும் சேவை

சமாதானத்துக்கான அமைப்புக்களின் பேரவை ஓட்ட மாவடி பிர தேச செயலகத்துடன் இணைந்து இந்த நடமாடும் சேவையை நடத்தியது.

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் தோறும் நடமாடும் சேவை நடத்தப்படுகின்ற நிலையில், எட்டாவது நடமாடும் சேவை ஓட்டமாவடியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

சமாதானத்துக்கும் அமைதிக்குமான அமைப்புக்களின் பேரவை ஓட்டமாவடி பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்தநடமாடும் சேவையை நடத்தியது.

இந்த நடமாடும் சேவையில் காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு, திருமணப் பதிவு சான்றிதழ்களுக்கான விண்ணப்பம், புதிய மற்றும் காணாமற் போன தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பம், சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் ஆகியவற்றுடன் விவசாயப் பிரச்சினை, காணிப் பிரச்சினைகளுக்கான முறைப்பாடுகள், பொலிஸ் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள எட்டு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த நடமாடும் சேவையின் மூலம் நன்மையடைந்துள்ளனர்.

3 வருடங்களுக்கு முன் திருட்டுப்போன

## பெறுமதிமிக்க கோயில் விளக்குகள் மீட்பு



நாவிதன்வெளி,நவ.16

நாவிதன்வெளி முத்துமாரி அம்மன் கோயிலில் கடந்த 2009 ஆம் ஆண்டு காணாமற் போனதாக தெரிவிக்கப்படும் பொருள்களை சவளக்கடை பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மீட்டுள்ளனர்.

சவளக்கடை பிரதேச சிவில் பாதுகாப்பு உறுப்பினர்களுக்குக் கிடைத்த இரகசிய தகவல், சவளக் கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எஸ்.பத்திரனவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாகவே காணாமற்போன பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

15ஆம் கொலனி, விளாவடி உள் வீதி வயல் வெளியில் புதைக்கப்பட்டிருந்த நிலையிலேயே வெண் கலத்திலான குத்து விளக்குகள், விளக்குகள் போன்ற பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர். (ச)

## கஹவத்தையின் பாதுகாப்பு ராணுவத்திடம் ஒப்படைப்பு

### கடமைக்கு 700 படையினர்

பெண்கள் தொடர்ந்தும் கொலை செய்யப்பட்டு வரும் இரத்தினபுரி, கஹவத்தை பிரதேசத்தின் கெட்டகெத்தன வலயத்தின் பாதுகாப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் இராணுவம் மற்றும் அதிரடிப்படையினர் உள்ளிட்ட 700 படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொட்டகெத்தன, திம்புல்வெல, நீலதுர ஆகிய கிராமங்களில் நேற்றுமுன்தினம் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன.

கொட்டகெத்தன சமூக மண்டபத்தில் ஓர் இராணுவ முகாமும், நீலதுர மற்றும் திம்புல்வல பிரதேசங்களில் இரண்டு அதிரடிப்படை முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர கெட்டகெத்தன பிரதேசத்தில் பொலிஸாரின் காவலரண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. புலனாய்வுப் பிரிவினர், குற்றத்தடுப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்து பிரதேசத்தில் விசாரணை களில் ஈடுபட்டு வருகின்றனர்.(ச)



மூதூர் பிரதேசத்திலுள்ள மல்லிகைத்தீவு பகுதியின் பிரதான வீதி கடந்த பல வருடங்களாக கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது. (40)

## நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிப்பு

அட்டாளைச்சேனை,நவ.16

சமுர்த்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டில்அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டைப் பயனாளிக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயனாளியிடம் வீட்டின் சாவியைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் வி. ரூபன், சமுர்த்தி முகாமையாளர்களான எம். தஸ்லிம், ஏ.எம். ஹமீட், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

தொடரும் கஹவத்தை மர்மக்கொலைகள்:

## தனிநபர் ஒருவரே பின்னணியில்; மறுக்கிறார் பொலிஸ் பேச்சாளர்

இரத்தினபுரி,நவ.16

கஹவத்தையில் தனிநபர் ஒருவரது பின்னணியிலேயே தொடர்ச்சியாக பல பெண்கள் கொலை செய்யப்பட்டு வருகின்றனர் என்று பலரிடமும் காணப்படும் சந்தேகத்தை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிசாந்த ஜயக்கொடி திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கஹவத்தையில் இடம்பெற்று வரும் மர்மக் கொலைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமது தனிப்பட்ட தகராறுகளுக்கும் ஒரே பாணியைக் கையாளும் கொலையாளிகள், தனிநபர் ஒருவரே அனைத்து கொலைகளையும் முன்னெடுப்பது போன்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கஹவத்தையில் இறுதியாக இளம் தம்பதியரை வாளால் வெட்டி காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து தடயங்களும் கைவசம் உள்ளன. எனவே சந்தேகநபர்கள் பற்றிய இரகசியங்கள் இன்னும் ஓரிரு வாரங்களில் அம்பலத்துக்குக் கொண்டு வரப்படும் என்று அவர் கூறினார்.

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 14 சம்பவங்களில் 16 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 13 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## புதிதாக மதுபானசாலையா? எதிர்த்து கூட்டமைப்பு மனு

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பிலான எதிர்ப்பைத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட் டக்களப்பு மாவட்ட கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான பிரசன்னா இந்திரகுமார், கோவிந்தன் கருணாகரம் மற்றும் ஞா.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் இணைந்து மாவட்ட செயலாளருக்கு மனு அனுப்பியுள்ளனர்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் புதிதாக மதுபான விற்பனை நிலையமொன்றை திறப்பதற்கு தனியார் வர்த்தகரொருவர் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இது தொடர்பாக குறித்த பிரதேச மக்களாலும், பொது அமைப்புகளாலும் எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே ஐந்து மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஆறாவது மதுபான விற்பனை நிலையமொன்று திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த வருடம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும், இந்த ஆண்டு நடைபெற்ற மண்முனைப்பற்று அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிதாக மதுபான விற்பனை நிலையங்கள் திறப்பதற்கு அனுமதியளிப்பதில்லை என்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்தப் பிரதேசத்தில் கடந்த கால போர், சூறாவளி, மற்றும் சுனாமி போன்ற இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது.

இன்றைய சூழ்நிலையில் தொடர்ந்தும் மதுபான விற்பனை நிலையங்கள் திறப்பதற்கு அனுமதியளிப்பது மது பழக்கத்துக்கு அடிமையாகும் மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதோடு பொருளாதார ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறப்பதற்கு அனுமதியளிக்க வேண்டாம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** புதிய முயற்சிகள் தடைப்படும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உங்கள் வாயை சிலர் கிளறி வேடிக்கை பார்ப்பார்கள். அதிகம்பேச வேண்டாம். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.



**இடபம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தினருடன் கலந்துரையாடி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் குறையும். நட்பு வட்டாரம் விரிவடையும்.



**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும். எதிர்காலத்திற்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.



**கடகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். குடும்ப வருமானத்தை அதிகரிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.



**சிங்கம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும் என எண்ணுவீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். தாயாரின் உடல் நிலை சீராக இருக்கும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.



**கன்னி:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். பிள்ளைகளின் பேச்சை ரசிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பண உதவி கிடைக்கும். தந்தைவழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**நாளை**

கார்த்திகை -02 சனிக்கிழமை 17.11.2012
திதி: சதுர்த்தி மு.இ.07.23 வரை
நட்சத்திரம்: மூலம் மு.ப. 09.19 வரை
சுபநேரம்: 03.08 - 04.38 வரை
ராகுகாலம்: 09.08 - 10.38 வரை



**துலாம்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.



**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். வாக்குறுதியை நிறைவேற்றப்போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.



**தனுசு:** வேலைகளை உடனே முடிக்க வேண்டும் என்று நினைப்பீர்கள். உறவினர் நண்பர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். உத்தியோகத்தில் மறைமுக பிரச்சினைகள் வந்துச் செல்லும்.



**மகரம்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். பிள்ளைகளின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு.



**கும்பம்:** குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். விருந்தினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.



**மீனம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. பிள்ளைகளின் கோபமும் அலட்சியப்போக்கு மாறும். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 7 | | | 2 | |
| | 6 | | | 4 | 9 | 7 | | 8 |
| | 2 | 7 | | 1 | | 5 | 4 | |
| | | 9 | | | | | 6 | 1 |
| 2 | | | 6 | 3 | 4 | | | 7 |
| 6 | 7 | | | | | 2 | | |
| | 9 | 3 | | 5 | | 6 | 1 | |
| 7 | | 2 | 1 | 6 | | | 9 | |
| | 4 | | | 8 | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 3 | 8 | 5 | 1 | 7 | 4 | 2 |
| 4 | 2 | 5 | 9 | 6 | 7 | 8 | 3 | 1 |
| 8 | 7 | 1 | 4 | 2 | 3 | 5 | 6 | 9 |
| 7 | 4 | 9 | 3 | 8 | 2 | 6 | 1 | 5 |
| 1 | 3 | 2 | 6 | 7 | 5 | 4 | 9 | 8 |
| 6 | 5 | 8 | 1 | 4 | 9 | 2 | 7 | 3 |
| 5 | 1 | 6 | 7 | 3 | 8 | 9 | 2 | 4 |
| 2 | 9 | 7 | 5 | 1 | 4 | 3 | 8 | 6 |
| 3 | 8 | 4 | 2 | 9 | 6 | 1 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# சித்தராஜர் வழி வந்த சித்த வைத்தியர் குணரத்தினம் -முத்துப்பிள்ளை தம்பதியர் பெற்றெடுத்த முத்துக்கள் அத்தனையும் சித்த வைத்தியர்களே.....



டாக்டர் திருமதி தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம்
12ஆம் ஆண்டு நினைவில்



டாக்டர் திருமதி சிவக்கொழுந்து சுந்தசாமி



அமர் டாக்டர் குணரத்தினம் செல்லத்துரை
(ஓய்வுபெற்ற அரசினர் வைத்தியர்)
தோற்றம்: 05.01.1927
மறைவு: 16.11.2000



டாக்டர் பொன்னம்மா செல்லத்துரை



டாக்டர் குணரத்தினம் சங்கரப்பிள்ளை



டாக்டர் குணரத்தினம் திருச்செல்வம்



அமர் செ.இராசரத்தினம்
(பாரம்பரிய வைத்தியர்)

ஒரு தாய் வயிற்றுதித்த,
இரத்தினங்கள் நாமாக
சித்த மருத்துவத்தை
சீர் பெறல் செய்தோம்
ஒன்று பட்ட கரங்களினால்....
ஓங்கும் பரிகார வைத்தியத்தால்
வம்ச விளக்குகளாய்.....
வையகத்தை வாழ வைப்போம்.......!

அமரர் செல்லத்துரை ஞாபகார்த்த வைத்தியசாலை
உடையார்வளவு, தில்லைகலட்டி ஒழுங்கை,
சுன்னாகம்.

பிள்ளைகள் சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**வைத்தியர் செ.கிருபாரெத்தினம் சித்த மருத்துவத்தில் சிறந்த முறையில் பெரும் சேவையாற்றியதன் காரணத்திற்காக 13.10.2012 அன்று மட்டக்களப்பில் உள்ள மகாயனன் கல்லூரி அருகில் உள்ள தேவநாயகம் மண்டபத்தில் இடம் பெற்ற மகாநாட்டில் "வைத்திய பூபதி" எனும் விருது வழங்கப்பட்டது.**

(ச/1829)(5-6-7)

• உயர்குருதி அமுக்கம்

இருதயத்தின் துடிப்பினால் ஏற்படும் உதைப்பு விசையினால் குருதி அனைத்து இழையங்களுக்கும் வழங் கப்படுகின்றது. அதேபோல் குருதிச் சிறுகுழாய்கள் மூலம் இருதயத்தை நோக்கியும் ஓர் அமுக்கம் ஏற்படுகின்றது. இவ்விரண்டு அமுக்கங்களையும் கொண்டு ஒருவரின் கை நாடி மூலம் குருதி அறிகிறோம்.

இருதயத்தால் கொடுக்கப்படும் அமுக்கம் 120mmHG குருதிச் சிறுகுழாய்களால் ஏற்படுத்தப்படும் அமுக்கம் 80mmHG 120/80mmHG, இந்த அளவுகளை உடையவர்கள் சுகதேகிகளாகக் கருதப்படுகிறார்கள். இதைவிட சிறிய அளவில் மாற்றம் காணப்பட்டால் அது சாதாரணமாகவே கணிக்கப்படுகிறது. 140/90mmHG வரையறையான அளவாகக் கணிக்கப்படுகின்றது. இவையாவிற்கும் உணவே காரணியாக அமைகின்றது.

உணவின் முக்கியத்துவம் பற்றி திருக்குறளில் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. யாதெனில்

"மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து
ஊறுபாடு இல்லை உயிர்க்கு"

ஒருவர் தமது பசிக்கு அளவாகவும்,உடல் நிலைக்கு, வயதிற்கு ஏற்றதாகவும் உணவு உண்பாராயின் எந்த நோயும் அவரை அணுகாது. இதே கருத்தை நவீன மருத்துவ முறையும் எடுத்துரைக்கின்றது.புதிய போசாக்கு ஆய்வுகளின் படி பாக்கரின் அனுமானம்(Barker's Hypothesis) குழந்தை கருவிலேயே போசாக்கிற்கு அமைவாகவே உருவாக்கப்படு கின்றது.(Intrauterine Foetal Programming)

அதன் பலனாகவே 38,40 வயதுகளின் பின்னர் ஒருவர் நீரிழிவு (மதுமேகம்),உயர்குருதி அமுக்கம் போன்ற நோய்க்குள்ளாகின்றார்கள் என நிருபணமாக்கப்பட்டுள்ளது.

உணவின் மாறுபாட்டால் ஏற்படும் உயர்குருதி அமுக்கம் உணவினாலேயே பேணப்பட வேண்டும். எமது சித்த வைத்தியர்களால் "அதிரக்ஷார" எனக் குறிப்பிடப்பட்டு பித்த சம்பந்தத்தினாலேயே ஏற்படுகின்றது என விவரிக்கப்படுகின்றது. எமது உடலில் முத்தோஷங்களாகிய வாத பித்த கபம் 1:1/2:1/4என்ற நாடி அளவில் நின்று உடலை இயல்பான நிலையில் வைத்திருக்கின்றது.

எமது உடலில் பித்தம்,இரத்தம் இரண்டுமே நீர்,தீ ஆகிய பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது. எனவே பித்த அதிகரிப்பைக் குறைப்பதற்கு நீர்,தீ அதிகமான இனிப்பு,புளிப்பு உப்பு என்பன உணவில் தவிர்த்தல் அல்லது மிகக் குறைத்தல் சிறந்தது.

ஐம் பூதங்களுக்கும் அறு சுவைகளுக்கும், நெருங்கிய தொடர்பு உண்டு. ஐம்பூதங்களின் சேர்க்கையினால் அறுசுவைகள் உண்டாகின்றன. இச்சுவைகள் மிகுந்தாலும் குறைந்தாலும் வாத,பித்த,கபம் மாறுபடுகின்றன. இம்மாதிரியான மாறுபாட்டால் நோய்கள் உண்டாகின்றன. இந்த வகையில் இரத்த அழுத்தம் குறைவதற்குக் குடிநீர் வகைகள்,கறிகள்,வறுவல்கள் போன்றவற்றை உண்ண வேண்டும்.

எமது நவீன வாழ்க்கை முறையில்
தயாரித்த உணவுகளைப் பெற்றுக்கொள்ளல் (fast food Culture)
நகரமயமாக்கல்(Urbanization)
உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறை(Sedentary Life)
உடல் பருமன்(Obesity)
போன்றவை மூல காரணமாகின்றன.

ஒருவருக்கு குருதி அமுக்கம் அதிகரிக்கும் போது தலையின் பின்புறத்தில் நோ,தலையிடி,இருதய படபடப்பு, மார்பில்வலி, திடீர் மயக்கம் முதலியவை அடிக்கடி ஏற்படும். இவ்வாறு ஏற்பட்டால் மருத்துவர் உதவியை நாடுவதுடன்,இரத்த அமுக்கத்தைப் பார்த்து அவற்றிற்கு ஏற்ப உணவுகளை மாற்றுதல் வேண்டும்.

தொடர்ச்சியாகக் குருதி அமுக்கம் அதிகரித்துக் காணப்படுபவர்கள் மாரடைப்பு, பாரிசவாதம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. அதுமட்டுமன்றி மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவடைந்து வருகின்றது. இவற்றை சரியான போசாக்கு உணவுகள் உட்கொள்வதனால் தவிர்த்துக் கொள்ளலாம்.

நாள்தோறும் நாம் உண்ணும் உணவில் இனிப்பு,கைப்பு,கார்ப்பு,துவர்ப்பு, புளிப்பு, உவர்ப்பு என அறுசுவைகளும் தனித்தனியே மாப்பொருள்,புரதம்,கொழுப்பு முதலியன கவந்த உணவுகளுடன் கலந்தபடி முறையே 60%,30%, 15% வீதம் என உட்கொள்ள வேண்டும் இவற்றுடன் விற்றமின்கள், கனிப்பொருள்கள் நீர் முதலியவற்றையும் உட்கொள்ள வேண்டும்.

• விரும்பவேண்டிய உணவுகள்:

★ தானியவகைகள்: அவித்துக் குற்றிய சிவப்பு, வெள்ளை அரிசி, பயறு, அவல், கடலை, நிலக்கடலை (Pea nut), ஓட் தானியம்(Oatmeal), பார்லி அரிசி முதலியன.

★ பச்சைக் காய்கறிகள்: நீற்றுப் பூசணி,பீர்க்கு, போஞ்சி,வத்தகைப்பழம், பிப்பிஞ்சா முள்ளங்கி, கருணைக்கிழங்கு முதலியன.

★ பச்சை இலைவகைகள்: கறிமுருங்கை இலை,மல்லித்தழை இலை, கோவாஇலை, பசன் Fruit இலை,சாறணை இலை,சிறுகுறிஞ்சா இலை போன்றன.

★ பழவகைகள்: ... பழம், விலம்பழம், வெள்ளரிப்பழம், முந்திரிகைப்பழம், மாதுளம் பழம் என்பன போன்ற பழவகைகளில் ... உணவுடன் ஒரு பழம் சேர்த்துக் கொள்ளுதல் சிறந்த பலன் தரும்.

★ பால்: பாலில் இருந்து தயாரிக்கப்படும் உணவுகள் ஆடை நீக்கிய பால் (Skimmed milk), கொழுப்பு குறைந்த பாலில் தயாரித்த தயிர்க்கட்டி (low fat yoghurt), fat free icecream முதலியன.

★ மீன் முட்டை வகைகள்: சிறிய மீன், கொழுப்பு குறைந்த மீன், நெத்தலி, சுறா(Shark), கொட்(codfish),முட்டை வெள்ளைக்கரு முதலியன

★ இறைச்சி வகைகள்: கொழுப்பற்ற இறைச்சிக்கோழி, இறைச்சி, ஈரல் (any lean meat organ meat) முதலியன கொழுப்பு உணவுகளை முற்றாக நிறுத்துதல் கூடாது விற்றமின் அகத்துறிஞ்சல் கொழுப்பில் கரைந்தே நடைபெறுகின்றது.

எனவே உறையாத கொழுப்பு எண்ணெய்கள்( Poly Unsaturated Fats) பயன்படுத்தலாம்.

* வேப்பம் பூ வடகம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
* ஒரு நாள் 2 முதல் 3 மேசைக்கரண்டி வீதம் எண்ணெய் சேர்க்கலாம். (எள்ளெண்ணெய்,சூரிய காந்தி எண்ணெய் சேர்த்துக்கொள்ளலாம்).
* தேங்காயின் பால் இன்றி அல்லது இரண்டாம் தடவை எடுத்த பாலில் கறி சமைக்கவும்.
* உப்பு இன்றி அல்லது சிறிதளவு உப்பு சேர்த்துக் கொள்ளலாம்.

தவிர்க்க வேண்டிய உணவுகள்

* தயிர், பாற்கட்டி(Cheese), வெண்ணெய்(Butter)
* Ice Cream, Pudding, Chocolates, Muffins, Mayonnaise,Icessings cake
* முழு ஆடைப்பால், பால்மா ( Full Cream Milk powder)
* ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி( Beef),பன்றி இறைச்சி( Pork)
* தேங்காய் எண்ணெய், பாம் எண்ணெய்(Palm Oil) பொரித்த உணவுகள்
* பொரித்த மீன், பொரித்த முட்டை, பொரித்த இறைச்சி ( Deep Fry/Roasted Chicken&Fish )
* பொரித்த உருளைக்கிழங்கு,பொரித்த நிலக்கடலை(Frozen Peas)
* அஜினோமொடோ (Aginomoto),பேக்கிங் பௌடர்(Baking powder), ஊறுகாய், கருவாடு, பப்படம்

ஆலோசனைகள்

* உடல் பருமனை அளவாகப் பேணுதல், ஒருவரின் உயரம், வயதிற்கு ஏற்ற நிறை முதலியவற்றை ஒழுங்காகப் பேணுதல்.
* நாள்தோறும் உடற்பயிற்சி செய்தல்
* காலையில் பத்து முதல் இருபது நிமிடங்கள் சற்று வேகமாக நடத்தல்
* காலையில் பிராணாயாமம் செய்தல், இது சுவாசத்தைச் சீராக்கி குருதி அமுக்கத்தையும் பேண உதவும்.
* யோகாசனம் செய்தல் மன அழுத்தத்தைக் குறைக்கும் ( Satrees)
* அதிக யோசனைகளைத் தவிர்த்தல்
* தியானம் செய்தல்
* இனிப்பு,உப்பு,எண்ணெய் முதலியவற்றைக் குறைத்து உண்ணுதல்.
* மது அருந்துதல், புகைத்தல் முதலியவற்றை தவிர்த்தல்.

நோயாளி ஒருவர் வீட்டில் பயன்படுத்தப்படக் கூடிய கை மருந்துகள் சில

* வெள்ளை வெங்காயத்தை அவித்து நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது இரு தடவை பருகிவரல்
* வெள்ளைப் பூண்டைத் தேனில் ஊறவைத்து நாளுக்கு ஒரு தரம் உண்ணுதல்
* நீர் முள்ளிக் கஷாயம் வாரம் மூன்று முறை குடித்துவரல்
* பசன் இலையை வறுவல் அல்லது சம்பல் செய்து உண்டவுடன் உண்ணுதல்
* கோரைக்கிழங்கு, கோட்டம் சீந்தில், ஆமணக்கு, சுக்கு, சிறுகாஞ்சோன்றி, சிறுதேக்கு நீர்ப்பிரமி, சிற்றாமட்டி என்பன சம எடை (50கிராம்) எடுத்து கசாயம் செய்து காலை மாலை அரைக்கோப்பை குடித்துவர வேண்டும்.
* சாத்தாவாரி,வெந்தயம் சேர்த்து கஞ்சி செய்து காலை உணவு நேரத்தில் குடிக்கவும்.
* வெள்ளரிப்பழம்,வத்தகைப்பழம் அடிக்கடி உணவுடன் சேர்க்க வேண்டும்.
* நீற்றுப் பூசனிக்கறி சமைத்துச் சாப்பிட வேண்டும்.

| | |
|---|---|
| மீன் கறி | 02 துண்டு |
| கரட்கறி, போஞ்சிக்கறி | ½ கப் |
| சலாது தக்காளி பிப்பிஞ்சா(பச்சையாக) | ½ கப் |
| பழச்சாறு -தோடம்பழம் | 1 கப் |
| வாழைப்பழம் | 1 கப் |
| மாலை நேரம் | |
| கொழுப்புக் குறைந்த பால் தேநீர் | 1 கப் |
| இரவு உணவு | |
| சிவப்பு அரிசிமா இடியப்பம் | 03 |
| உருளைக்கிழங்கு கறி சிறிய அளவு | 03 துண்டு |
| மீன் கறி சிறிய அளவு | 02 துண்டு |
| சமைத்த கரட் | ½ கப் |
| அப்பிள்,வாழைப்பழம், திராட்சை | 01 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனங்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு,நவ.16

2013ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டதால், சகல வகையான வாகனங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத்சந்திர தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வாகனங்களின் விலை 2 லட்சம் ரூபாவிலிருந்து 5 லட்சம் ரூபாவுக்கு இடையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

சிறியரக காரான மாருதியின் விலை 2 லட்சம் ரூபாவினாலும் டொயோட்டா விட்ஸ்ன் விலை 2 லட்சம் ரூபாவிலிருந்து இரண்டரை லட்சம் ரூபா வரை அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வான் மற்றும் லொறி ஆகியவற்றின் விலைகள் 4 லட்சம் ரூபாவினாலும், 5 தொன் எடையுடைய வாகனங்களின் விலை 4 லட்சம் ரூபா முதல் 5 லட்சம் ரூபாவினாலும் அதிகரித்துள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)



கொழும்பு,மாளிகாவத்தை கால்டன் சர்வதேச பாலர் பாடசாலைக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சென்ற உகண்டா முதற்பெண்மணி ஜெனட் கே முசேவெனி மாணவச்சிறார்களுடன் 'கேக்' வெட்டி மகிழ்கிறார். இலங்கையின் முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவும் அருகில் காணப்படுகிறார்.

## தென்பகுதி அபிவிருத்தி; அமெரிக்காவின் கவனம்

கொழும்பு,நவ.16

இலங்கையின் தென்பகுதி அபிவிருத்தி தொடர்பில் அமெரிக்கா அவதானம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

இதன் அடிப்படையில் அமெரிக்காவின் இலங்கைக்கான தூதர் மிச்சேல் ஜே சிசன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தென்மாகாணத்தின் பல பகுதிகளுக்கான பயணத்தை மேற்கொண்டார்.

காலி டச்சு கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு அவர் சென்றிருந்தார்.

இதன்போது தென்மாகாணத்தின் கல்வி, கலாசார மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பில் அவர் ஆராய்ந்திருப்பதாக அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மாகாணத்தின் கல்வி அபிவிருத்திக்காக, அமெரிக்கத் தூதரகம் 10 மில்லியன் டொலர்களை நிதியாக வழங்க உறுதியளித்துள்ளது. பல்வேறு புலமைப்பரிசில் திட்டங்களையும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

## மத்திய தர வருமானத்தை ஈட்டும் நாடாக இலங்கை

### உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் சொல்கிறார்

மத்திய தர வருமானம் ஈட்டும் நாடாக இலங்கை முன்னேறியுள்ளது என்று உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் முல்யானி இன்ட் ராவதி தெரிவித்தார்.

இலங்கை குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகளின் வரிசையிலிருந்து மத்திய தர வருமானம் ஈட்டும் நாடாக முன்னேறியுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## மகளுக்கு மதுவைப் பருக்கிய பெற்றோருக்கு விளக்கமறியல்

கொழும்பு,நவ.16

மதுவை அருந்திவிட்டு போதை தலைக்கேறியதன் பின்னர் மகளுக்கும் மதுவை பருக்கிய பெற்றோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சம்பவமொன்று களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் பணியாற்றுபவரான குறித்த சிறுமியின் தந்தை தனது மனைவியுடன் இணைந்து மது அருந்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மத்துகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, பெற்றோரைக் கைது செய்த பொலிஸார் இவர்களை மத்துகம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தினர்.

இதனையடுத்து பெற்றோரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் தமிந்த ராமநாயக்க, அவர்களுடைய மகளை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ச)

# உடன் நிறுத்துங்கள் குற்றப் பிரேரணையை

### பிரதம நீதியரசருக்கு எதிரான நடவடிக்கை ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் அதிருப்தி

கொழும்பு,நவ.16

இலங்கை அரசு பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டுவந்துள்ள குற்றப் பிரேரணையை இடைநிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட நிபுணர் கெப்ரியேல் க்னாவுல் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசு நீதித்துறையை பாதுகாக்க முன்வரவேண்டும். இதற்காக உடனடியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

உடல் மற்றும் உள ரீதியாக நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் மீது அரசு மேற்கொள்கின்ற தாக்குதல்கள் உடனடியாக தவிர்க்கப்பட வேண்டும்.



**இலங்கை அரசு நீதித்துறையை பாதுகாக்க முன் வரவேண்டும். இதற்காக உடனடியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.**

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டுவந்துள்ள குற்றப் பிரேரணை தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

நீதித்துறையில் இருந்து உயர் நீதியரசர் நீக்கப்படுவதே, நீதித்துறை மீது அரசு மேற்கொள்கின்ற அதிக பட்ச வன்முறையாக அமையும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நாளாந்தம் மீட்கப்படுகின்றன 5 சடலங்கள்

கொழும்பு,நவ.16

நாட்டில் தினமும் 4 முதல் 5 வரையிலான இனம் தெரியாத சடலங்கள் மீட்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குளங்கள், வாவிகள், கடல் போன்ற பிரதேசங்களில் அதிகளவில் இவ்வாறான சடலங்கள் மீட்கப்படுகின்றன என்று அவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு ஆண்களின் சடலங்களே அதிகளவில் மீட்கப்படுகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

காலங்கள் கடந்ததன் பின்னர் உறவினர்களினால் சில சடலங்கள் அடையாளம் காணப்படுகின்றன. எனினும் பல சடலங்கள் அடையாளம் காணப்படுவதில்லை.

இதனால் அடையாளம் காணப்படாத சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்படுகின்றன என்று அவர்கள் கூறினர்.

2011 ஆம் ஆண்டில் 134 அடையாளம் காணப்படாத சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 112 சடலங்கள் ஆண்களுடையது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## இரு மொழிகளில் கடமையாற்ற பதிவாளர்களுக்குச் சந்தர்ப்பம்

### அரச மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் சொல்கிறார்

கொழும்பு,நவ.16

விவாக மற்றும் இறப்பு அத்தாட்சிப் பத்திர பதிவாளர்கள் இரண்டு மொழிகளில் கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரச மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க தெரிவித்தார்.

தற்போது பதிவாளர்கள் தமது நியமனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் மாத்திரமே கடமைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

பதிவாளர்கள் பலர் இரு மொழிகளிலும் கடமையாற்றுவதற்கான திறமையைக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் நியமனமொழி மூலம் மாத்திரமே கடமையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தநிலையில், பொது நிர்வாக அமைச்சின் செயலாளருடன் நடத்திய பேச்சின் பின்னர் பதிவாளர்கள் இரண்டு மொழிகளிலும் கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## 'ஆபாசம்' காட்டிவரும் இணையங்களுக்குத் தடை

கொழும்பு,நவ.16

இலங்கைப் பெண்கள் மற்றும் சிறுவர்களின் ஆபாசப் புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் அடங்கிய இணையத் தளங்களைத் தடைசெய்வதற்கு சட்ட மா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆபாச இணையத்தளங்கள் தொடர்பில் பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றத்துக்கு அறிவித்ததை அடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், 51 ஆபாச இணையத்தளங்கள் தொடர்பிலான தகவல்களை பத்தரமுல்ல சிறுவர் நீதிமன்றத்தில் முன்வைத்துள்ளதாக அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் கூறினார். (ச)

## விபத்தில் சிறுவன் சாவு

கொழும்பு,நவ.16

ஹம்பாந்தோட்டை, பதகிரிய கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

பதகிரிய கிராமத்தைச் சேர்ந்த முஹம்மது ரிஸ்வி (வயது-3) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இந்த விபத்தில் காயமடைந்த சிறுவன் ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளான்.

பொருள்களை விற்பனை செய்வதற்காக வந்திருந்த வான் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## பயிலுநர் பட்டதாரிகளுக்கு பெப்ரவரியில் நிரந்தர நியமனம்

### பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு என்கிறார் ரஞ்சித் சியாம்பலபிட்டிய

கொழும்பு,நவ.16

பயிலுநர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிகள் அனைவரும் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அளவில் நிரந்தர சேவையில் நியமிக்கப்படவுள்ளனர் என்று இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் தலைவரும் தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சருமான ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்தார்.

மாவத்தகம தேர்தல் தொகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பட்டதாரிகளின் நிரந்தர நியமனத்துக்கு நிதி ஒதுகீடுகள் இந்தமுறை வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனையில் 51,400 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளன. இது சாதாரண விடயமல்ல.

பட்டதாரிகள் நியமனத்தின்போது கட்சி வேறுபாடுகளும் பார்க்கவில்லை. சுதந்திரப் பட்டதாரிகள் சங்கத்தில் இணைத்துக் கொள்கின்ற போது ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்பட்டவரா அல்லது இல்லையா எனப் பார்க்காமல் அனைவருக்குமே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகள் சாதாரண மானவர்கள் அல்லர். பல்கலைக்கழகம் சென்று நன்கு கற்று வந்தவர்கள். பல்கலைக்



கழக வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் உங்களுடைய சேவைகள் கிடைக்கப் பெறவுள்ளன. ஆசியாவில் ஆச்சரியம்மிக்க நாடாக இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கு பட்டதாரிகளின் பங்களிப்பு மிக அவசியம்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதாம் அகவை நிறைவில் பிறந்த நாள் வாழ்த்து

## சென்.சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்களின்

# சேவைநலன் பாராட்டு



### சேவை விவரம்

**மார்க் ஞானப்பிரகாசம்**

★ மட்டக்களப்பில் ஆசிரியர் சேவை- 26.10.1973 தொடக்கம் 31.12.1981 வரை
★அனுராதபுர ஆசிரியர் சேவை - 01.01.1982 தொடக்கம் 19.09.1982 வரை
★ யாழ்ப்பாண ஆசிரியர் சேவை - புனித சாள்ஸ் மா.வி -20.09.1982 தொடக்கம் 26.05.1994 வரை
★ யாழ்ப்பாண உப அதிபர் சேவை- புனித சாள்ஸ் மா.வி - 27.05.1994 தொடக்கம் 28.06.1994 வரை
★ கொழும்புத்துறை- சென். ஜோசப் வித்தி. 29.06.1994 தொடக்கம் 31.05.1999 வரை
★யாழ்ப்பாணம் அதிபர் சேவை
கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தி. 01.06.1999 தொடக்கம் 14.05.2004 வரை
சென். சாள்ஸ் மா.வி. 15.05.2004 தொடக்கம் இன்றுவரை.

### யாழ்- ஆயரின் ஆசிச் செய்தி



காலத்தால் அழிவுறா கல்விச் செல்வத்தை தான் பெற்றதுமன்றி, அதை மற்றவர்களுக்கும் கற்றுத் கொடுக்கும் உயர்ந்த ஆசிரியராக பின் அதிபராக பணியாற்றி இன்று ஓய்வு பெறும் யா/சாள்ஸ் மகா வித்தியாலய அதிபர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்களை நானும் வாழ்த்தி இறை ஆசீர் கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

39 வருட காலங்களாகத் தனது ஆசிரியப் பணியில் இவர் தன்னை அர்ப்பணித்து ஆற்றிய சேவைகளை நாம் அறிவோம். ஆயர் இல்லத்துக்கு அருகில் உள்ள தூய சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் பொறுப்பை ஏற்று குறிப்பாக வசதியற்ற மாணவ, மாணவிகளின் கல்வி விருத்திக்காக இவர் எடுத்த பல பிரயாசைகளையும் நன்கு அறிவேன். குறிப்பாக 18 வருடங்களாக அதிபர் பதவியை ஏற்று, பல பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் உயர்வுக்கும் இவர் ஆற்றிய பணிகள் பாராட்டத்தக்கவை. இன்று தன் பணியில் இருந்து இவர் ஓய்வு பெற்றுக் கொண்டாலும் தொடர்ந்தும் நல் ஆசானாக சமுதாயத்தில் திகழ்ந்து மாணவர்களின் உயர்வுக்கு தன்னாலான பணிகளைத் தொடர்ந்தாற்ற இறைவன் இவருக்கு நல் உடல்,உள, ஆன்மிக சுகங்களை வழங்கி இவரை ஆசீர்வதிக்க நானும் இறைவனை வேண்டி இறை ஆசீர் கூறி நிற்கின்றேன்.

பேரருட் திரு இ.தோமஸ் சௌந்தரநாயகம்
யாழ்.ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

### அதிபருள் மாணிக்கம்



மணிவிழாக்காணும்பெருமதிப்புக்குரிய அதிபர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்களுக்கு இத்தருணத்தில் யாழ்.கோட்ட அதிபர்கள் சார்பில் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் பிறந்து, புகழ் பூத்த புனித. மைக்கேல் கல்லூரியில் சீரான கல் வியும் நல்லொழுக்கமும் கற்று, கணித ஆசானாக 33 வருடங் களுக்கு முன் கல்விப் புலமதில் காலடி பதித்து 18 வருடங்கள் அதிபராய் நற்பணியாற்றி, இன்று பணிவோய்வு பெறும் அதிபர் திரு.மா.ஞானப்பிரகாசம் அவர்கள் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு நல்லிலக்கணமாகத் திகழ்கிறார். அவரின் கம்பீரமான தோற்றமும், செந்தளிப்பான முகமும் புன்முறுவலும், சாந்தமான பேச்சும், தெளிவான சிந்தனையும் அனைவரையும் அவர் பால் ஈர்த்திட வைக்கின்றன. அவரின் நுட்பமான திட்டமிடல், ஆளுமை மிக்க அமுலாக்கம், பயனுறுதி மிக்க செயற்பாடுகள் மிகச் சிறந்த கல்வி நிர்வாகியாக அவரை முதன்மைப்படுத்துகின்றன. நேர்மை, இறை பக்தி , கடமையில் கண்ணியம், மானிட நேயம் என்பன ஒருங்கே இணைந்த கனவானாக வாழ்விலும், பணியிலும் மிளிர்ந்த அதிபர் பெருந்தகை மார்க் ஞானப்பிரகாசம் அவர்களை நலம் சிறக்க யாழ்.கோட்ட அதிபர்கள் சார்பில் வாழ்த்துகின்றேன்.

எப்.எக்ஸ்.அன்ரன், தலைவர்,யாழ்.கோட்ட அதிபர்கள் சங்கம்.

### அமைதியே உருவான அதிபர்



யாழ்ப்பாணம் சென்.சாள்ஸ் மகாவித்தியாலத்தின் அதிபராக கடந்த 8½ வருடங்கள் பணிபுரிந்து தனது கல்விச் சேவையின் இறுதி இருப்பினை 15.11.2012 உடன் நிறைவு செய்யவுள்ள எனது அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய அதிபர் திருவா ளர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்களை வாழ்த்தி நிற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியுறுகின்றேன்.

இவர் கல்விச் சேவையில் 21 வருடங்கள் சிறந்த கணித ஆசனாகவும் 18 வருடங்கள் பாடசாலை அதிபராகி சிறந்ததொரு நிர்வாகியுமாக பணியாற்றியுள்ளார். திருவாளர் ஞானப்பிரகாசம் அவர்களின் சாந்தமும், அமைதியும் உருவான தோற்றம், எவரையும் மனம் நோக வைக்காத பண்பு, மாணவர்களை அன்புடன் அரவணைத்து செல்லுகின்றபாணி, தன்னுடன் இணைந்து பணியாற்றும் ஆசிரியர்களிடம் காட்டிய பரிவு, மேலதிகாரிகளிடம் தோன்றிய பணிவு, ஆன்மிக உணர்வு இவரை ஒரு சிறந்த மனிதராக்கியது.

எனது சேவைக் காலத்தில் என் பணி சிறக்க எனக்கு மிகவும் தோள்கொடுத்த அதிபர்களுள் இவரும் ஒருவர் என்பதை மிகவும் நன்றியுடன் இந்நேரத்தில் நினைவு கூருகின்றேன். இவரின் ஓய்வுக் காலம் சிறக்கவும், தொடர்ந்தும் அவரது கல்விப்பணி நிலைபெறவும், ஆன்மிகப்பணி தொடரவும், நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழவும், அவரது குடும்பம் எல்லா வளமும் பெற்று சிறக்கவும் வாழ்த்தி நிற்கின்றேன்- இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

திருமதி V. சிவபாலன்,
ஓய்வு நிலை, கோட்டக் கல்விப் பணிப்பாளர்,யாழ்ப்பாணம்.

### தங்களின் சேவைக்கு தலை வணங்குகின்றோம்



அன்பான அதிபர் மா.ஞானப்பிரகாசம் அவர்களின் 39 வருட கல்விச் சேவையில் எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய காலம் பொற்காலமாகும். இதனை இரண்டு தடவைகள் இலங்கைக்கு வந்தபோது நேரில் பார்த்து அனுபவித்து வியந்தேன். இன்று இவர் ஓய்வுபெறும் செய்தியினை அறிந்து கவலையடைகின்றேன். காரணம் பெருந்தகையின் அர்ப்பணிப்புடன் கூடிய வழிநடத்தலை எமது மாணவர் சமூகம் இழந்ததனையிட்டு ஆகும். இருப்பினும் தங்களின் ஆலோசனைகளும் செயற்பாடுகளும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் தொடர வேண்டுமென அன்பாக வேண்டுவதுடன், இதுவரை காலமும் தன்னலமற்ற தங்களின் சேவைக்கு எமது சிரம்தாழ்ந்த வணக்கத்தையும், நன்றிகளையும் இந்நாளில் தெரிவித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

டேடகிறிஸ்ரி அன்ரன், தலைவர்
பழைய மாணவர் சங்கம், பிரான்ஸ் கிளை.

### இறை பக்தி மிக்க அதிபர்



அதிபர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்களின் மணிவிழா வில் ஆசிச் செய்தி வழங்குவதில் பேராலயப் பங்குத் தந்தை என்றவகையில் பெரும் மகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன்.

கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் அதிபராக அரும் பணியாற்றியுள்ளார். இவர் பாடசாலையை தன் முதல் வீடாகக் கருதி அயராது அர்ப்பணத்தோடு சேவை ஆற்றியவர் சிறந்த நிர்வாகத்திறனும் ஆளுமையும் கொண்டவர். பாடசாலை எல்லாத்துறைகளிலும் வளர்ச்சியடைய அயராது உழைத்தவர். தன்னுடைய உடல் நல்தையும் கவனிக்காது பாடசாலைக்காக என்றுமே ஓய்வின்றி பணியாற்றியவர்.

தம்மிலே ஆழமான விசுவாசத்தைக் கொண்டவராக மாணவர்களின் வாழ்வில் அக்கறைகொண்டு பணிபுரிந்தவர். தனது வாழ்வின் இறை பக்திக்கு முக்கிய இடத்தைக் கொடுத்து வாழ்ந்தவர். எக்காரியத்துக்கும் இறைவனை முன்வைத்தே தொடங்குவார். இவரின் ஆன்மிக வாழ்வுக்கு அடையாளமாக பாடசாலை வளவில் புனிதர் சாள்ஸ் சுருபத்தை நிறுவியது ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவருடைய மணிவிழாவில் இவரின் பணி வாழ்வை பாராட்டுவதுடன் நிறைந்த இறை ஆசீர்பெற்று நீடிய உடல் உள ஆன்மிக பலத்துடன் வாழ வாழ்த்துகின்றேன். இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

அருட்பணி R.H. சகாயநாயகம்
யாழ். மறைக் கோட்ட முதல்வர்,
மரியன்னை பேராலய பங்குத் தந்தை.

### பழகுவதற்கு இனியவர்



யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் மார்க் ஞானப் பிரகாசம் அவர்களின் சேவை நலன் பாராட்டும் மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிபர் மார்க்ஞானப்பிரகாசம் (Maths Trd.,B.A., Dip.in Edu.,SLPS Gr.I) அவர்கள் 26.10.1973 ஆம் ஆண்டு ஆசிரியப் பணியை ஏற்று கணித ஆசானாக 21 ஆண்டுகளும் அதிபராக 18 ஆண்டுகளுமாக மொத்தம் 39 ஆண்டுகள் கல்விப் புலத்தில் சேவையாற்றி, தனது சேவையைப் பொன் எழுத்திலே பொறித்துள்ளார். இவர் கணித ஆசானாகப் பணியாற்றிய 21 ஆண்டு காலத்தில் இவரிடம் கணிதம் பயின்ற மாணவர்களில் அநேகர் இன்று கணிதத் துறையில் உயர் பதவிகளில் இருப்பது அறிந்து பெருமைப்படுகின்றேன்.

பழகுவதற்கு இனியவராகவும் பண்பிலே சிறந்தவருமாகிய அதிபர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்கள் நீண்ட ஆயுளும் நிகரற்ற செல்வமும் பெற்று நீடு வாழ வாழ்த்துகிறேன்.

திருமதி.யோ. பற்குணராசா, முதல்வர்,
மாநகரசபை,யாழ்ப்பாணம்.

### கல்விப் புலத்தின் ஞான ஒளி அதிபர் ஞானப்பிரகாசம்



அதிபர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்கள் கல்வியிலும், நிர்வாகத் திறனிலும் கொண்டிருக்கும் ஞானம் மற்ற எவரும் பெற்று விட முடியாத அரிய சொத்து என்றே கூறலாம். மற்ற எவர் காலத்திலும் இல்லாத வகையில் இவர் காலத்தில் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் அமைதியாகவும் பிரச்சினைகள் எதுவும் இன்றி நடைபெற்றமைக்கு இவரது நிர்வாகத் திறனே காரணம் எனலாம்.

எவர் மனதையும் புண்படாத வகையில் அமைந்த உரையாடல் திறனே அவரது எல்லா வெற்றிகளுக்கும் காரணம் என்பேன் கல்விப்பணியில் 39 வருடங்கள் சேவையாற்றி மணிவிழாக்காணும் அதிபர் அவர்களுக்கு ''ஞானம்'' என்னும் மலர் வெளியீடு முற்றிலும் பொருத்தமானது. கல்விப் புலத்தினர் ஆகிய நாம் என்றும் சேவைக்கு தலைவணங்குவதுடன், ஓய்வுக் காலத்தில் இறைபணியும் சமூகப் பணியும் மேலோங்க வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றேன்.

சி. மாணிக்கராசா
கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்.

### நீங்கள் சிறந்த வழிகாட்டி



2004ஆம் ஆண்டில் எமது பாடசாலைக்கு அதிபர் பொறுப் பேற்று வந்தபோது பாடசாலையின் வளங்களைத் தெரிந்தவரும் மாணவர் மனங்களைப் புரிந்தவரும் சமூக சூழலை உணர்ந்து செயற்படக்கூடியவருமான சிறந்த முதல்வர் பாடசாலைக்குக் கிடைத்துவிட்டார் என மகிழ்ந்தோம்.

அயல் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய காலங்களிலும் எமது சங்கத்தின் ஆரம்பகால செயற்பாடுகளின் ஆலோசனை வழங்கி, வழிகாட்டி எமக்குப் பக்க பலமாக இருந்தவர்.

பாடசாலையின் அதிபராகி சங்கத்தின் தலைவராகியபோது இணைந்து பாடசாலையின் வளர்ச்சியில் பணியாற்றியதையிட்டுப் பெருமை கொள்கின்றோம். இறை பக்தியிலும் சமூக கருணையிலும் மிகுந்த அக்கறை கொண்டு ஆசிரியராக, அதிபராக எமது பாடசாலையில் கடமையாற்றிய காலங்களில் இவரால் வழிநடத்தப்பட்ட மாணவர்கள் இன்று சமூகத்திலும் வெளிநாடுகளிலும் ஒழுக்க சீலர்களாகச் சிறந்து விளங்கி இவர் தம் சேவையின் சாட்சிகளாக விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மதிப்புக்குரிய சங்கத் தலைவரே தங்களின் சிறப்பான பணிக்குத் தலைவணங்கும் பழைய மாணவர்களாகிய நாம் தங்களின் ஓய்வுக் காலத்தில் சகல வளங்களையும் பெற்று சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible] நியூட்டன்,
[illegible] பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

### வாழ்த்துச் செய்தி



யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் அதிபராக அரும்பணியாற்றி ஓய்வுபெறும் அதிபர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்களது சேவை நலன் பாராட்டு மற்றும் மணிவிழாவினையொட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

அதிபர் மார்க் ஞானப்பிரகாசம் அவர்கள் 39 வருடங்கள் கல்விப்புலத்தில் சிறப்பானதொரு சேவையினை ஆற்றி ஓய்வு பெறுகின்றார். இவர் 21 வருடங்கள் கணித பாட ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளதோடு 18 வருடங்கள் அதிபராகவும் தனது பணியினைச் செய்து ஓய்வுபெறுகின்றார்.

யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய போது மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கென பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தார். அத்துடன் பாடசாலையினது பௌதிக வள வளர்ச்சிக்காகவும் முன்னின்று உழைத்தார். இவரது அயராத சேவைக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் ஓய்வுக் காலம் சிறப்புற அமையவும் வாழ்த்துகின்றேன்.

எஸ்.உதயகுமார், வலயக்கல்விப் பணிப்பாளர்,யாழ்.வலயம்.

### மனிதாபமிக்க பணியாளன்



கல்விப் புலத்தில் 39 ஆண்டு பணியாற்றி, இன்று மணி விழாக் காணும் மார்க் ஞானப்பிரகாசம் அவர்கள் யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் கணித ஆசானாக 10 வருடங்களும், பிரதி அதிபராக 2வருடங்களும், அதிபராகக் கடந்த எட்டு ஆண்டுகளாக அளப்பரிய சேவை புரிந்து தனது அறுபதாவது அகவையில் பணி ஓய்வினைப் பெறும் இந் நாளில் அவரின் சேவைகளை நினைவு கூர்வது சாலச் சிறந்தது. இவரின் காலத்தில் ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா திட்ட நிகழ்வுகளில் எமது பாடசாலை சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமைக்கு இவரின் ஆலோசனையும் வழிகாட்டலும் பிற்பலமாக அமைந்தன. மாணவரின் கல்வியிலும், நலன்களிலும், வாண்மை விருத்தியிலும் மிக அக்கறையுடன் செயற்பட்ட ஓர் அதிபராவார். இவரின் அர்ப்பணிப்பு கலந்த சேவையில் பாடசாலையானது பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டதினை யாவரும் அறிவர். ஞானம் என செல்லமாக அழைக்கப்படும் எம் அதிபர், பெயருக்கேற்ப ஞானமும் , இறைபக்தியும், அன்பும், அமைதியும் , எதனையும் மனி தாபத்துடன் நோக்கி செயற்படும் மனிதாபம்மிக்க பணியாளன். மணிவிழாக்காணும் அவர், தன் ஓய்வுக்காலத்தில் குடும்பத்தாரோடு மகிழ்வுடன் வாழவும் அவரின் எதிர்காலம் சிறந்தோங்கவும் இறைவன் உடல், உள நலன்களை நல்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

கி.கிறிஸ்தோப்பர், பிரதி அதிபர்,
யா/புனித சாள்ஸ் ம.வி

### கோட்டக்கல்விப் பணிப்பாளரின் செய்தி



புகழ் பூத்த கல்வி உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பதித்த சென். சாள்ஸ் ம.வி.யின் தனிப்பெரும் இடத்தைப் பிடித்த உயர்திரு. மா.ஞானப்பிரகாசம் அவர்கள் ஓய்வு பெறும் இந்நாளில் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அக மகிழ்கின்றேன்.

மா. ஞானப்பிரகாசம் அவர்கள் மனதில் ஞானி என்றால் மிகையாகாது. தன்னடக்கம், மதிப்பு, ஆழ் சிந்தனை, ஒருவரை மனத்தாலும் நோகாத மாண்பினன். அவருக்கு நிகர் அவரே. அவரின் வழிகாட்டலில் உயர்ந்தோர் பலர். அவரின் அறிவுரையில் அகமகிழ்ந் தோர் ஆயிரம். இவரின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல இறைபாதம் வேண்டி மகிழ்கின்றேன்.

S.சண்முககுமார்,
(M.Edu.,SLPS.I ) கோட்டக்கல்விப் பணிப்பாளர்.

### எதிர்காலம் மலர வாழ்த்துகின்றேன்



இறைமகன் எம் அதிபரின் இருப்பிடம் இடம் மாறுகின்றது. பேருக்கும் புகழுக்கும் வாழாத எம் அதிபர் நற்பெயரோடும் புகழோடும் பிரிந்து செல்கின்றார். உண்மைக்கு உரமூட்டி நேர்மைக்குக் குரல் கொடுத்து வான்மைக்கு வழிசமைத்து வைத்த எம் தலைவன் வாழ்வியல் பயணத்தில் ஓய்வு பெறுகின்றார். என்றென்றும் சிறப்புடன் எதிர்காலம் மலர வாழத்துகின்றேன்.

திரு.வின்சன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்

### மீன்பாடும் தேனாடு ஈன்றெடுத்த பெருந்தகையே



அன்பு மழையாய் வள்ளுவன்
குறளை அணி செய்தவனே
எம் கோபப் பேச்சுக்கு புன்முறுவல் - உன் ஆயுதம்
பொறுமைக்கு வரைவிலக்கணம் - உன் அடக்கம்
அறிவுக்கு வரைவிலக்கணம் - உன்
அர்த்தமுள்ள பேச்சு
எளிமைக்கு வரைவிலக்கணம் - உன் உயர்த்த உள்ளம்
பக்திக்கு வரைவிலக்கணம் - உன் ஆன்மிக வாழ்க்கை
கடமை வீரனே, இரவல்லவோ - உன் டிபார்ச்சர் நேரம்
பட்டம் பெற்றபோதும் - உனை பார்க்கவில்லை பத்திரிகையில்
ஓய்வு பெறும்போதும் ஓயவில்லை - உன் கல்வி வாழ்க்கை
கிறிஸ்தவனுக்கு கிறிஸ்து கூறிய வரைவிலக்கணம் நீ
நீடூழி நிலம் வாழ வாழ்த்தும்.....

செ. இன்பக்குமார் குருஸ், ஆசிரியர் நலன்புரிசங்க செயலாளர், யா/புனித சாள்ஸ் ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகள் சிந்திக்கமாட்டாவே; கொட்டுபவர் சிந்திப்பார்களா?

கழிவுப்பொருள்களை ஓர் இடத்தில் குவிக்காமல் அதனை இல்லாமல் செய்வதே எமது சூழலுக்கும் சுகாதாரத்துக்கும் உகந்தது. இதனை உணர்வார்களாயின் எமது பிரதேசத்தில் கழிவுப்பொருள்கள் தேங்கக் கூடிய சூழல் ஏற்படாது. கழிவுப்பொருள்களைச் சேகரிக்கும் முறைகள் நாடுகளுக்கிடையே மற்றும் பிரதேசங்களுக்கிடையே வேறுபடுகின்றன.

ஆஸ்திரேலியாவில் கழிவுப்பொருள்களை சாலையோரத்தில் சேகரிக்கும் நடைமுறை இருக்கிறது. யாழ்ப்பாணத்திலயும் அப்படித்தான் ஒவ்வொரு வீட்டுக்கு முன்னால் கழிவுப் பொருள்களை உரப்பையில் சேகரித்து வைப்பார்கள். அதனை மாநகர சபை எடுத்து அப்புறப்படுத்தி வருகிறது. ஆஸ்திரேலியாவில் ஒவ்வொரு வீட்டுக்கும் மூன்று தொட்டிகள் வழங்கப்படுகிறது. ஒன்று மீட்கப்படும் பொருள்களுக்காக. இரண்டாவது பொதுவான கழிவுப் பொருள்களுக்காக. மூன்றாவது வீட்டுப் பூங்காவில் உற்பத்தியாகும் கழிவுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

தொழிலில் ஈடுபடும்போதும், கட்டப் பணிகள் மற்றும் உடைத்தல் காரணமாக சேரும் கழிவுப் பொருள்கள் குப்பை நிரப்பு நிலப்பகுதியில் கொட்டப்படுகிறது. அவற்றில் சில மீட்கப்படுகிறது. வீட்டுக்கழிவுப் பொருள்கள் பிரிக்கப்படுகிறது. மீட்கப்படுகின்ற கழிவுப் பொருள்களில் இருந்து புதிய பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் கழிவுப் பொருள்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

வீடுகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் உற்பத்தியாகும் கழிவுப்பொருள்களுக்குக் கட்டணம் அறவிடப்படுவதில்லை. ஐரோப்பா மற்றும் இதர உலக நாடுகளில் என்வக் எனப்படும் தனியுடைமையுடைய சேகரிப்பு முறையினை கையாளுகின்றனர். அது நிலத்துக்கு அடியில் குழாய்கள் மூலமாக உறிஞ்சி வெளியேற்றி விடுகின்றது.

கனடாவில் சேகரிப்பு பொதுவான கழிவுப்பொருள்களை அகற்றும் முறையாகும். அதன்படி கழிவுப் பொருள்கள் மற்றும் மறுபயனீடு செய்யும் பொருள்கள், கரிய பொருள்களை பட்டியல் இட்டபடி சேகரிக்கிறார்கள். கிராமப் புறங்களில் மக்கள் அடிக்கடி கழிவுப்பொருள்களை ஒரு வண்டியில் ஒரு மாற்று நிலையத்துக்கு கொண்டு சேர்த்துவிடுவார்கள். இவ்வாறு சேகரித்த கழிவுப் பொருள்கள் ஒரு மாவட்ட குப்பை நிரப்பு நிலத்துக்கே ஏற்றிச் செல்லப்படும்.

திபெத்தின் தலைநகரான தைபெய்யில் உள்ள நகராட்சி, கழிவுப்பொருளின் கனவளவைப் பொறுத்து அரசுக்குக் கட்டணம் செலுத்தவேண்டும். இந்தக் கொள்கையில் நகரத்தில் உருவாகும் கழிவுப் பொருள்களின் அளவை வெற்றிகரமாக கணிசமாகக் குறைத்துள்ளனர்.

சில நாடுகளில் குப்பைகள் தமக்குப் போதாமல் இருக்கின்றன எனக் கூறி குப்பைகள் உள்ள நாடுகளிலிருந்து குப்பைகளை இறக்குமதி செய்கின்றனர். ஐரோப்பாவில் வடக்கே இருக்கும் நாடான சுவீடனில் வெற்றிகரமாக குப்பைகளிலிருந்து மின்சார உற்பத்தி செய்து வருகின்றனர். இதற்கு அவர்களுக்கு போதிய அளவு குப்பைகள் கிடைக்காததால் குப்பைகள் உள்ள நாடுகளிடம் குப்பைகளை வாங்குகின்றனர். இந்த நாட்டில் 4 சதவீத குப்பைகளே நிலக்கிடங்குகளில் கொட்டப்படுகின்றன. மீதமுள்ள குப்பைகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். இதற்காக அந்த நாடு 8 லட்சம் டன் குப்பைகளை அண்டை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துவருகின்றது.

கழிவுப்பொருள் மற்றும் கழிவுப்பொருள் நிர்வாகத்தைப் பொறுத்தவரை கல்வி மற்றும் விழிப்புணர்வு பெறுதல் அவசியம். இல்லாது போயின் சுற்றுச்சூழல் மாசடைவதைத் தவிர்க்க முடியாது. காற்றில் அடித்துவரப்படும் குப்பைகள் போன்ற ஆதாரங்கள்தான் மாசுபடுவதற்கான ஆதாரங்களாய் பல சமயங்களில் இருக்கின்றன. பல நச்சு இரசாயனங்கள் சிறு துகள்களுடன் ஒட்டிக் கொள்கின்றன. இவை அழுக்கு வடிகட்டும் உயிரினங்களாக சேவை செய்யும் மிதவை உயிரினங்கள் மற்றும் கடலடி உயிரினங்களால் ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில் நச்சுகள் உணவுச் சங்கிலிகளில் வளர்ச்சியுறுகின்றன. ஒட்சிசன் மிகவும் பற்றாக்குறையாக அமைந்திருக்கும் வகையில் பல துகள்கள் இரசாயனமுறையில் சேர்க்கை கண்டு முகத்துவாரங்கள் பிராணவாயு பற்றாக்குறையான நிலைக்கு செல்லக் காரணமாக அமைகின்றன. இது பெரிய பாதிப்பினை சூழலில் உண்டு பண்ணும்.

பெரும்பாலான நாடுகளில் தினசரிப் பிரச்சினை ஒவ்வொருநாளும் கொட்டப்படும் டன் கணக்கான குப்பைகளை என்ன செய்வது என்பதுதான். சில நாடுகளில் சுற்றுச்சூழலுக்கு கேடில்லாமல் குப்பைகளை மறுசுழற்சி செய்தும் அகற்றியும் வருகின்றனர். தமிழ் நாட்டில் குப்பைகள் அகற்றும் பணியை ஜேர்மனியிடம் கொடுத்துள்ளனர். இப்படியாக இலங்கையும் குப்பைகளை அகற்றுவதற்கு முயற்சி செய்தால் சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் இயற்கையைப் பாதுகாக்க முடியும்.

நேற்று வியாழக்கிழமை மாலை 6 மணியிருக்கும். அராலியிலுள்ள எனது நண்பன் வீட்டுக்குச் சென்றேன், கல்லுண்டாய் வெளியில் குப்பைகள் கொட்டப்பட்டுக் காணப்படுகின்றது. அந்தப் பிரதேசம் பாதிப்பினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் குப்பைகளைக் கொட்டுபவர்கள் சிந்திப்பார்களா? என்று எனக்குள்ளே நினைத்துக் கொண்டு நண்பன் வீட்டினுள் நுழைந்தேன். என்னைப் பார்த்ததும் "என்ன எங்களை மறந்துபோனியோ? இண்டைக்குத்தான் நினைவு வந்ததா?" என்று கேட்டான். நானோ "இல்லையடா, எங்க நேரம். உன்னட்ட வருவம் என்றால் வேலைப்பளு கூடுதே ஒழிய குறையுது இல்லை." என்றேன். அவனோ "வேலைப்பளு கூடுதே ஒழிய ஒழுங்கா வேலை நடக்குது இல்லை" என்றான். நானோ "ஏண்டா அப்படிச் சொல்கிறாய்.." என்றேன். அவனோ "பின்ன உள்ள கழிவுகளையெல்லாம் கல்லுண்டாய் வெளியில் கொட்டினம். அதனால் ஏற்படப் போகிற விளைவைப் பற்றி எவரும் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. இந்த இடத்தில் முன்னைய காலங்களில் உப்பு உற்பத்தி செய்தார்கள்." என்றான். நானோ "பிறகு எந்த இடத்தில் குப்பைகளைக் கொட்டச் சொல்கிறாய்?" என்றேன். அவனோ "குப்பைகளை எந்த இடத்திலையும் கொட்டலாம். ஆனால் அந்தக் குப்பைகளை இல்லாமல் செய்யவேண்டும். அப்பொழுது தான் குப்பைகள் நிரம்பாமல் பார்த்துக் கொள்ளமுடியும். இதைவிட்டுவிட்டு குப்பைகளை மேலும் மேலும் கொட்டிக் கொண்டிருப்பதால் கூடுமே ஒழிய குறையாது." என்றான். நானோ "இந்தக் குப்பைகளை இல்லாமல் செய்வதற்கு குப்பைகளைக் கொட்டுபவர்கள் முயற்சி செய்தால் மட்டுமே முடியும். அவர்கள் குப்பைகளை ஓர் இடத்தில் கொட்டிவிட்டோம். அதோட எங்கட வேலை முடிந்துவிட்டது என்று நினைத்தால் ஒருபோதுமே இந்தக் குப்பைகளை இல்லாமல் செய்யமுடியாது. இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் விளங்கிக் கொள்வார்களா? அல்லது தாம் இருக்கும் காலத்தில் அடிக்கிறதை அடித்துக் கொண்டு போய் சேர்ந்துவிடுவம், எமது பிரதேசம் எப்படிப் போனாலும் கவலையில்லை என்று இருந்து விடுவார்களா? குப்பைகள் சிந்திக்கமாட்டாவே, குப்பைகள் கொட்டுபவர்கள் சிந்திப்பார்களா?

**கோப்பாய் சண்முகம்**

கதையோடு செய்தி


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தற்போதைய அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளரும்
முன்னாள் கிளிநொச்சி மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின்
பொறுப்திகாரியும் யாழ் மாவட்ட செயலக மத்திய சுற்றாடல்
அதிகாரசபையின் அதிகாரியுமான
எங்கள் நண்பன் திரு. நடராஜா சூரியராஜா
B.Sc(Agne)Hons,M.Sc(Biotech),M.A(Reg.planning),M.A(Sociology)
அவர்கள் 26.10.2012ம் திகதி மல்லாகம் நீதிமன்றில்
அகில இலங்கை சமாதான நீதிவானாக(J.P) சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டார். இவர் மேலும் பல பட்டங்களும் பெற்று சீரும்
சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
யாழ்மாவட்டச் செயலக நண்பர்கள்.
யாழ்ப்பாணம்.



## Business Qualifications from KU Education

First in Jaffna

- Certificate in Office Management (3 Months)
- Certificate in Business Management (6 Months)
- Certificate in Entrepreneurship (6 Months)

First Short Business Qualifications in Jaffna

வெறும் பாடசாலைக் கல்வித் தகைமையால் தரமான தொழில் ஒன்றை பெறவே முடியாது... போட்டி நிறைந்த இன்றைய உலகில் வணிக மற்றும் முகாமைத்துவம் சார் கற்கை நெறிகளே உங்களை தொழில் சந்தையில் முன்னிலைப்படுத்தும். தொழில் சார் வல்லுனர்களிடமிருந்து தொழில் பயிற்சிகளை வழங்கும் கே.யு. இந்த



Cert>>Diploma>>HND>>Degree(UK)

Only for first 15 enrollments:

introductory offer 70% off

ஆரம்பம்: 01/Dec/12

### Knowledge Universe

(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :0777302882
www.kugroup.info

## விற்பனைக்கு

LB-xxxx
தொடர் இலக்கம் கொண்ட
China கன்டர் விற்பனைக்
உண்டு.
தொடர்பு-0774669799
(25367) (45-6-7)

## தவறி விட்டது

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த தம்பிராசா வசந்தகுமார் என்பவருடைய தே.அ.அ (84 330 5253V) சாரதி அனுமதிப் பத்திரம், ATM card என்பன மண்டைதீவு சந்தியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். 0779471931
(25377) (45-6-7)

## T V கள் மலிவு விற்பனை

எங்குமில்லாத மலிவு விலையில்
Sony Wega Flat T Vகள் 29"-16000/=,
21"-13000/=, பைனியர் அம்பிளி பயர், Box
வகைகள், DVD (L.S) ரேடியோ கசெற் என்பன
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 044 0570 (அப்பளம்)
சோனி றேட்ற்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, சுன்னாகம்.
(25387) (45-6-7)

## வேலையற்று காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு!

சர்வதேச ரீதியாக தனது சேவைகளைப் பரப்பி வேலையற்றோருக்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்ற எமது நிறுவனமாகிய One world Innovage க்கு பயிற்றப்பட்ட வேலையாள்கள் தேவை.
(6 மாத பயிற்சிகள் வழங்கப்படும்)
பயிற்சியின் போது 8000-12000 வரை பெறலாம்.
பயிற்சியின் நிறைவில் 35000 - 45000 வரை பெற முடியும்
தகைமைகள் O/L, A/L இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
தங்குமிட வசதி இலவசம்
வயது எல்லை 18-35
தொ.பே. 077 6219 536, 075 2792 175
66/2, பருத்தித்துறை வீதி,
யாழ்.
(25366) (45.6.7)

## கட்டடத் தொகுதி வாடகைக்கு

மன்னார், புகையிரத வீதியில்
(ரெலிகொம் முன்) அமைந்துள்ள
மகாதேவன் கட்டடத் தொகுதியின்
முதலாம் மாடி கட்டடத்தொகுதி
வாடகைக்கு விடப்படும். 2400 சதுர அடி
கொண்டது. வங்கி மற்றும்
நிறுவனங்களுக்கு உகந்தது.
உடன் தொடர்புகளுக்கு:
மகாதேவன்- 071 6118768,
023 222 2569.

## வீடும் காணியும் விற்பனைக்கு

நல்லூர் முருகன் ஆலயத்துக்கு அண்மை யில்
பண்டாரக்குள ஒழுங்கையில் 3 ½ பரப் புக்
காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0776016357
(2-7-6)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## நீங்காத நினைவில் ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு
01.07.1933



உதிர்வு
08.12.2010

### சின்னையா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)
திதி: திருதியை
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ இம் மாநிலத்தே
எங்களை வாழ வைத்த எமது அன்புத் தந்தையே
நீங்கள் எமை விட்டு பிரிந்து
ஈராண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது அய்யா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இலந்தகட்டி வயிரவப் பெருமானை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

திருமதி குமுதினி நடேசலிங்கம் குடும்பம்(நீர்கொழும்பு)
திருமதி சிவாஜினி சந்திரசேகரம் குடும்பம்(ஏழாலை)
திருமதி நந்தினி குகநாதன் குடும்பம் (U.K)
திரு. மணிவண்ணன் சுமதி குடும்பம் (ஏழாலை)
திரு. மணிமாறன்(பாபு) மாலினி குடும்பம் (U.K)
திரு. சுதர்சன் (சுதன்) லோகேஸ்வரி குடும்பம் (U.K)

இலந்தகட்டி,
ஏழாலைகிழக்கு,
ஏழாலை. (25345) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்தது அன்ரெய்ட் புதிய பதிப்பு




கணினி மற்றும் கைப்பேசி இயங்குதளங்களில் முன்னணி வகிப்பது கூகுளாகும்.

இந்நிறுவனத்தின் Android இயங்குதளத்தின் புதிய பதிப்பான Android 4.2 Jelly Bean ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

குறித்த இயங்குதளமானது கூகுளால் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள Nexus 4, Nexus 7 மற்றும் Nexus 10 ஆகிய கருவிகளிலும் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

மேலும் இந்தப்பதிப்பில் சில முக்கியமான அம்சங்கள் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் முன்னைய பதிப்புக்களில் எதிர்நோக்கப்பட்ட சிரமமான செயற்பாடுகளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கடவுச் சொல்லை மாற்றுங்கள்


பிரபலமான சமூக இணையத்தளங்களில் வரிசையில் காணப்படும் டுவிட்டருக்கு உலகெங்கிலும் 140 மில்லியனுக்கும் அதிகமான பயனாளிகள் காணப்படுகின்றனர்.

தற்போது இத்தளமானது பாதுகாப்புத் தேவைகள் கருதி தனது தளத்தில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு கடவுச்சொற்களை மாற்றியமைக்குமாறு பிரத்தியேக் மின்னஞ்சல் அனுப்பும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

எனினும் இதற்கான உண்மையான காரணத்தை வெளியிடாத டுவிட்டர் தளமானது தனது மின்னஞ்சல் செய்தியில் ஏனையவர்களின் பாவனையிலிருந்து தங்களின் கணக்கைப் பாதுகாப்பதற்காகவே கடவுச் சொல்லை மாற்றுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றது என தெரிவித்துள்ளது.

இதேவேளை டுவிட்டர் மீதான ஸ்பார்மர்களின் செயற்பாடுகளை அவதானித்த பின்னரே அந்தத்தளமானது கடவுச்சொற்களை மாற்றக் கோருகின்றது என்ற ஊகம் TechCrunch என்ற இணையத்தளத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

## குறைந்த செலவில் புதிய டெப்லெட்



முதன்முறையாக குறைந்த விலையில் அனைவராலும் கொள்வனவு செய்யக்கூடிய Tablet ஒன்று இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

Android 4.0 Icecream Sandwich இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட Aakash 2 Tablet - இன் பெறுமதி இந்திய ரூபா மதிப்பில் 1,130 மட்டுமே ஆகும்.

இந்த Tablet ஆனது Cortex A8 தொழில்நுட்பத்தில் அமைந்ததும் 1GHz வேகத்தில் செயலாற்றக்கூடியதுமான Processor -ஐ கொண்டுள்ளதுடன் பிரதான நினைவகமாக 512MB அளவுடைய RAM - இனையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

மேலும் இதன் தொடுதிரையானது 5 அங்குல முடையதாகவும், துணைச்சேமிப்பு கொள்ளளவானது 4Gb ஆகக்காணப்படுவதுடன் இதனை microSD கார்ட்கள் மூலம தேவைக்கு ஏற்றவாறு அதிகரித்துக் கொள்ளக் கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## லினோவாவின் புதிய ஸ்மாட் போன்




சீனாவைச் சேர்ந்த Lenovo நிறுவனம், புத்தம் புதிய ஸ்மார்ட்போனை களமிறக்க உள்ளது.

Android Gelly Bean இயங்குதளத்தில் இயங்கும் குறித்த ஸ்மார்ட்போனுக்கு Lenovo P770 என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த ஸ்மார்ட் போனில் உள்ள Battery-யின் சக்தி Galaxy Note2-ல் உள்ள Battery-யை விட அதிகம். மேலும் இந்த Battery 21 மணிநேரம் இயங்கும் ஆற்றல் கொண்டது.

4.5 qHD Display-உடன் வரும் இந்த ஸ்மார்ட் போனில், 1.2 Gigahertz Dual Core Media tech HD 6577 Processor, 1 GB RAM 8MB Camera உள்ளது.

## Security Cam

### இரகசியமாக கண்காணிப்பதற்கு உதவும் மென்பொருள்

அலுவலகங்களிலும் சரி, ஏனைய பாதுகாப்பு தொடர்பான நிறுவனங்களிலும் சரி அங்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு இரகசிய கண்காணிப்புக் கமராக்கள் பயன்படுத்தப்படுவது வழமையான ஒன்று.

எனினும் இந்த முறைமையை நிறுவுவதற்கு அதிக செலவு ஏற்படுகின்றது. ஆனால் 2 MB கோப்பு அளவு கொண்ட SecurityCam மென்பொருளைப் பயன்படுத்தி குறைந்த செலவில் சாதாரணமான இணையக் கமராக்கள் மூலம் கண்காணிக்க முடியும்.

இம்முறைமையை இணைய இணைப்பினூடாக தொலைவிலிருந்தும் இயக்கக்கூடிய மற்றும் அவதானிக்கக்கூடிய வசதிகளும் குறித்த மென்பொருளில் காணப்படுகின்றன.

குறித்தமென்பொருளின் செயற்பாடானது கமராவின் கண்காணிப்பு எல்லைக்குள் நடமாட்டங்கள் அல்லது அசைவுகள் உண்டாகும் போது மட்டும் காணொலியாகப் பதிவு செய்யக்கூடியவாறோ அல்லது புகைப்படம்(Snapshot) எடுக்கக்கூடியவாறோ உருவாக்கப்பட்டுள்ளது.

## நோக்கியாவின் புதிய கைபேசி



உலகில் சிறப்பான இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சி செய்து வரும் நோக்கியா, புதிதாக Lumia 920 T என்ற ஸ்மார்ட் போனை அறிமுகம் செய்ய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த ஸ்மார்ட் போன் விண்டோஸ் 8 இயங்குதளத்தில் செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது Snap Dragon s&4 MSM&8960 Processor கொண்டதாக இருக்கும் என்றும், இதில் Adreno 320 & gpu தொழில்நுட்ப வசதியையும் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் 1280 X 720 Pixels திரை துல்லியம் வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வியத்தகு விண்டோஸ் - 8




புதிய முறையில் இயங்கி எதிர்பாராத வசதிகளை தரும் வகையில் வடி வமைக்கப்பட்டுள்ளது விண்டோஸ் 8.

குறிப்பிட்ட தொடு திரை, சதுரக்கட்ட அமைப்பு, விண்டோஸ்ஸ்டோர் போன்றவற்றை விடுத்து மற்ற சில அம்சங்களை இங்கு காணலாம்.

**Antivirus**

விண்டோஸ்8சிஸ்டத்துடன் புதிய முறையில் அன்ட்டி வைரஸ் மற்றும் பாதுகாப்பு புரோகிராம் ஒன்று இணைக்கப்பட்டு கிடைக்கிறது.

Windows Defender என அழைக்கப்படும் இந்த புரோகிராம், எமது தனிப்பட்ட பாவனைக்குரிய கணினியை வைரஸ், மால்வேர், ட்ரோஜன் புரோகிராம்கள் மற்றும் பிற கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களிலிருந்து பாதுகாப்பு தருகிறது.

**Battery Back up, Speed Boot up**

விண்டோஸ் 8 சிஸ்டத்தில் பெர்சனல் கணினிகள் மிக வேகமாக Boot ஆகும்படி அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் கணினி இயங்கத் தொடங்கும்போது, உடன் இயங்கும் Start up Pro grams பட்டியலை, நாம் Task Manager திறந்து சரி செய்திடலாம்.

மின்சக்தியைக் குறைக்கும் வகையில் செட் செய்திடலாம். இதனால் லேப்டாப் மற்றும் நோட்புக் கணினிகளில், டேப்ளட் பிசிக்களில் மின்சக்தி பயன்பாடு சிக்கனமாகிறது.

**Windows 8 Update**

தானாகவும், எளிதாகவும் கணினியில் Update செய்ய வசதி அளிக்கப்பட்டுள்ளது. இயங்குதளம் மட்டுமின்றி Appli cation Program files- களையும் Update செய்யலாம்.

மேலும் புதிய வசதிகள் தரும் வகையில் Files வெளியிடப்பட்டாலும், அவையும் சிஸ்டத்தில் தானாகப்பதியப்படுகின்றன.

**Windows Store Applica tion Program**

விண்டோஸ் 8 Metro Application Program, மற்ற Mobile Application Pro gram கள் போலவே இயங்குகின்றன.

கணினி ஒன்றில் இயங்கும் Software Application Program-கள் போலவே இவற்றின் செயற்பாடுகள் உள்ளன.

விண்டோஸ் 8 சிஸ்டம் ஒன்று தான் கணினிகளிலும், கைப்பேசிகளிலும் ஒரே மாதிரியாக இயங்கும் தன்மை கொண்ட சிஸ்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**Computer Mobile Games**

கைபேசிகள் வந்த பின்னர் விளையாட்டுகளில் ஆர்வமுள்ள நபர்கள், கணினிகளை அவ்வளவாக நாடுவதில்லை.

ஆனால் விண்டோஸ் 8 மூலம், கைப்பேசிகளில் இயங்கும் Games அனைத்தும் தனிப்பட்ட பாவனைக்குரிய கணினிகள், டேப்ளட் மற்றும் அல்ட்ராபுக் கணனிகளில் கிடைக்கின்றன.

**File Explorer**

முந்தைய விண்டோஸ் சிஸ்டங்களில் இதனை Windows Explorer என அழைத்து வந்தோம். இதில் தற்போது ஒரு ரிப்பன் இணைக்கப்பட்டுள்ளது.

இதில் Files-களை பற்றிய கூடுதல் புள்ளி விவரங்கள் கிடைக்கின்றன. குறிப்பாக ஒரு File-ஐ மாற்றி கொண்டிருக்கையில் அதனைச் சற்று நேரத்திற்கு நிறுத்தி வைக்கலாம். இதுவரை நாம் File-ஐ கையாண்ட வழிகளுக்கும் மேலாகப் பல வசதிகள் தற்போது விண்டோஸ் 8 சிஸ்டத்தில் தரப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

நாவற்குழி,கைதடி நவரத்தினராசா சரோஜினி தேவி 508073402V என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், வங்கி புத்தகமும் நல்லூருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.(சன்மானம் வழங்கப்படும்) தொடர்பு:077 343 3799

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை இராசதுரை (சங்கானை)



சங்கானை பட்டினசபை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராசதுரை நேற்றுமுன்தினம் 14.11.2012 புதன் கிழமை அகால மரணமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை -அன்னப்பிள்ளை தம்பதியினரின் மகனும், யோகராணியின் அன்புக்கணவரும்,பாஸ்கரன் (இந்தியா),பிரபாகரன் (பிரான்ஸ்), சுபாஸ்கரன், காலஞ்சென்ற சதீஸ்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் , காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கமுத்து தம்பதியரின் மருமகனும் பரிமளம், வள்ளியம்மை, செல்வராசா, சிவராசா, இதயராணி, காலஞ்சென்ற திலகவதி ஆகியோரின் சகோதரனும், சற்குணராசா, யோகமலர் ஆகியோரின் மைத்துனரும், சுபாசினி, சசிமீரா ஆகியோரின் அன்பு மாமனும், சுவேதா, நிவேதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (16.11.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பட்டினசபை வீதி,
சங்கானை. 0779184119

தகவல்
குடும்பத்தினர்.

(25371) (2.6.7)

# மூளாயில் நீரிழிவு சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், நவ. 16.

மூளாய் கூட்டு றவு வைத்தியசாலை யில் நேற்று நடை பெற்ற நீரிழிவுச் சிகிச்சை முகாமில் பெருமளவான மக்கள் பங்குபற்றிப் பயன்பெற்றனர்.

இரட்ணம் அறக் கட்டளை நிறுவன அனுசரணையுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர் மூளாய் நீரிழிவு சிகிச்சைப் பிரிவுடன் இணைந்து உலக நீரிழிவு தினமான நேற்று இந்த மருத்துவமுகாமை நடத்தியிருந்தனர்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவர் ம.ஞானேஸ் வரன் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் யாழ். போதனா வைத் தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சிவன் சுதன், பொது சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ம.சிவகுமார் ஆகியோருடன் மேலும் வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டு சிகிச்சை களை வழங்கினர். (16)

# புறக்கணிக்கப்படும் புனரமைப்பு பணிகள்

அக்கராயன், நவ.16

கிளிநொச்சி மாவட்டம் கோணாவிலில் உள்ள யூனியன்குளம் கிராமத்தின் மாமயன்குளப் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குளத்தைப் புனரமைக்குமாறு இங்குள்ள மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்துள்ள போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிய வருகின்றது.

யூனியன்குளம் கிராமத்தின் தென்கிழக்குப் பகுதியில் பாழடைந்த நிலையில் இந்தக்குளம் காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள விவசாயிகள் தமது விவசாய முயற்சிகளில் முழு அளவில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகின்றது. இதனைப் புனரமைப்புச் செய்தால் விவசாய முயற்சிகளுக்குப் பேருதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மழை காலத்தில் இந்தக் குள்த்தை வந்தடையும் நீர் கிராமத்தின் பிரதான வீதியைக் கடந்து அக்கராயன் ஆற்றினூடாக குடமுருட்டியை அடைந்து பூநகரிக் கடலில் வீணாகக் கலப்பதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குளத்தை உரிய வகையில் புனரமைப்பதன் வாயிலாக மழை நீரைக்குளத்தில் தேக்கிவைத்து விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)


## சேவை

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள..............
ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(சி/4839)(3.6.7) தொ.பே - 0212219686


## சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னைய தலைமைப் பணிமனை வாடகைக்கு விடுதல்

மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக உள்ள தலைமைப் பணிமனை இயங்கி வந்த மேல் மாடிக் கட்டடம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. இதற்குரிய விண்ணப்பப் படிவத்தை எமது தலைமை அலுவலகத்தில் பெற்று 20.11.2012 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சிற்றம்பலம் துரைராஜா, தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

(இ/1836) (2.6.7)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் செல்ரன் றஞ்சித்றாஜ் (மனிதவள அபிவிருத்தி உதவியாளர், உடுவில் பிரதேச செயலகம்) அவர்களின் அன்புத் தாயார்
**சக்கியால் எலிசபேத் (இராசமணி)**
அவர்கள் கடந்த 07.11. 2012 அன்று இறைபதம் அடைந்தது விட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ். மாவட்ட மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள்.

(25376) (2.6)





வட மாகாணத்தில்

121 அதிஷ்டசாலிகளுக்கு

பெறுமதி மிக்க பரிசுகள்......

ரூ.100,000/- பெறுமதியான புனித யாத்திரை மேற்கொள்ள தெரிவானோர் 2 பேர்

ரூ100,000/- பெறுமதியான வீட்டு உபகரணங்களை பெறுவோர் 3 பேர்

ரூ15,000/- பெறுமதியான காகில்ஸ் பரிசு கூப்பனைப் பெறுவோர் 51 பேர்

ரூ10,000/- பெறுமதியான பணப்பரிசில் பெறுவோர் 65 பேர்

பரிசுகளாக....
3 பெறுமதியான கார்கள்
225 சிங்கர் தம்ரோ வீட்டு உபகரண பொதிகள்
100 கற்றல் பொதிகள்
4500 காகில்ஸ் பரிசுக்கூப்பன்கள்
5000 பணப்பரிசு

பரிசுகள் இன்று பி.ப 2.30 மணிக்கு இருவேறு இடங்களில்

யாழ் அதிஷ்டசாலிகளுக்கு ⇨ தம்பர் மண்டபம், யாழ் மத்திய கல்லூரி

பிற மாவட்ட அதிஷ்டசாலிகளுக்கு ⇨ வன்னி பிரதேச காரியாலயம், உள்வட்ட வீதி,வவுனியா

இன்னமும் இருப்பது ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே!!

ஆண்டிறுதி மாபெரும் இறுதிச்சீட்டிழுப்பில் தகுதிபெற இன்றே இலங்கை வங்கி கணக்குகளில் சேமியுங்கள்!

(இ/1838) (2.6.7)

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

உதவிப்பொது முகாமையாளர்
இலங்கை வங்கி, வட மாகாணம்


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### தம்பிராசா சுப்பிரமணியம்

(நாதஸ்வர வித்துவான்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சுப்பிரமணியம் கடந்த 10.11.2012 சனிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில்.

தகவல்:
பெறாமக்கள் -நதீபன் (பிரான்ஸ்), ஜெயகாந்த், நாதரீதன், லாவண்யா (லண்டன்), தாரணி.

(25381)(2.6)

### ஆறுமுகம் தியாகராஜா (தியாகு)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தியாகராஜா கடந்த 12-11-2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - தனலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும், மோகனாம்பிகை (மோகனா) அவர்களின் அன்புக் கணவரும், சாமினி, சுபாஷினி, சுதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் தருமலிங்கம், திருமதி சரஸ்வதி, பிரகலாதன்(நாதன்), திருலோகேஸ்வரா (ஈஸ்வரா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாதேவி (கமலா), குகதாசன் (UK), விஜேந்திரா (விஜயன்), கமலாராணி (ராணி), கேமலதா (கேமா), சுகிர்தா(சுகி), தாரணி, லோகேந்திரா (லோகன்) ஆகியோரின் மைத்துனரும், ஹரிஸ்கந்தராஜ்(ஹரி), சிவராம் (ராம்), பிருந்தா ஆகியோரின் அன்பு மாமனும், ஜனனி, லக்ஷா, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, புறாடி லேன், அரியாலை.
00442083306048 (லண்டன்),
021 221 1414 (அரியாலை)

தகவல்:
சகோதரர்கள்,
திருமதி சரஸ்வதி இராசரத்தினம்,
ஆ.தர்மலிங்கம், ஆ.பிரகலாதன்,
ஆ.திரிலோகசுஸ்வரா.

(25385) (2.6.7)

## வீரசிங்கம் கட்டடத் தொகுதி 4ஆம் மாடி வாடகைக்கு உண்டு

வீரசிங்கம் கட்டட தொகுதியின் 4ஆம் மாடி விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கு அமைய வாடகைக்கு வழங்கப்படும். 3150 சதுர அடி விஸ்தீரணம் கொண்டதும் அறைகள் இணைந்த அமைந்துள்ளன. குளியலறை, மலசலகூடம், மின்சாரம், நீர்விநியோக வசதிகள், பாரிய அலுவலகம் நடத்தக்கூடிய தள அமைப்பைக் கொண்டது.

தொடர்பு-செயலாளர்,
யாழ். மாவட்டக்கூட்டுறவுச்சபை, வீரசிங்கம் கட்டட தொகுதி 2ஆம் மாடி,இல.12,
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 0212222324

## வீடு வாடகைக்கு உண்டு

பலாலி வீதி , திருநெல்வேலியில் பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
(25380)(2.6.7) தொடர்புக்கு-0776624396

## மாபிள் பதித்தல்

10 வருடங்கள் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தவர்களால் டோகா அரசாங்கத்தினால் பாராட்டு பெற்றவர்களால் உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற வகையில் [illegible] [illegible]
தொடர்புகளுக்கு-0773824871

(21592)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்

**சின்னையா பொன்னம்மா**



தோற்றம்
16.02.1944

மறைவு
18.10.2012

கடந்த 18.10.2012 வியாழக்கிழமை அன்றுஅமரத்துவமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.11.2012) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (17.11.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவிலும் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மருதங்கண்டு,
கரவெட்டிகிழக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(25388) (45.6.7)


# புதுக்குடியிருப்பில் படையினர் வசமுள்ள மரமுந்திரிகை விவரம் திரட்டப்படுகிறது

புதுக்குடியிருப்பு, நவ.16

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப் பாட்டுக்குள் இருக்கும் மரமுந்திரிகைத் தோட்டங்கள் தொடர்பான விவரங்கள் பிரதேச செயலகத்தால் கோரப் பட்டுள்ளன.

இந்த மரமுந்திரிகைத் தோட்டங்களை உரிமையாளருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு முன் வந்துள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள், முந்திரிகைத் தோட்டம் சம்பந்தமான முழு விவரங்களையும் பிரதேச செயலகத்திற்கு அறியத்தருமாறு அவர்களுக்குத் தெரிவித் துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 1974 ஆம் ஆண்டிலிருந்து மரமுந்திரிகைச் செய்கையில் அப்பிரதேச மக்கள் ஈடுபட்டு வந்தனர். இங்கு சுமார் 250 ஏக்கருக்கும் அதிகமான காணியில் மரமுந்திரிகைச் செய்கை மேற் கொள்ளப்பட்டது.

இந்தப் பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த காலப் பகுதியில் பொது மக்களால் பராமரிக்கப்பட்டு வந்த மர முந்திரிகைத் தோட்டங்கள் சூழ்நிலைக் கேற்றவாறு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.

போர் முடிவடைந் ததைத் தொடர்ந்து இப்பிரதேசம் பாது காப்புப் படையின ரின் கட்டுப்பாட்டுக் குள் வந்துள்ளது. போர் காரணமாக இடம்பெயர்ந்த மக் கள் மீண்டும் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள் ளார்கள்.

இந்த நிலையில் இப் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள பாதுகாப்புப் படையி னர் பொது மக்களுக் குச் சொந்தமான மர முந்திரிகைத் தோட் டங்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதுடன் இத்தோட்டங்கள் அரசுக்குச் சொந்தமா னவை என்றும் அறி வித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனால் பாதிக் கப்பட்ட உரிமையா ளர்கள், பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தங்களுக் குச் சொந்தமான மர முந்திரிகைத் தோட் டங்களை மீண்டும் பெற்றுத் த்ருமாறு சம்பந்தப்பட்ட அதி காரிகளிடம் கோரி யுள்ளனர்.

இவர்களின் கோரிக்கையை ஏற் றுக் கொண்ட அதி காரிகள் மரமுந்தி ரிகை சம்பந்தமான சகல விவரங்களை யும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத் துக்கு அறியத்தரு மாறு கோரியுள்ளனர்.

(க-115)


## பணிநிலை வெற்றிடம்

* வரவேற்பாளர்
* மெசின் உதவியாளர்
* அலுவலக உதவியாளர் (ஆண்)
* சிற்றூழியர் (பெண்)

**நேர்முகத்தேர்வு :**
17.11.2012 சனி
மு.ப 09.00 மணி - பி.ப 02.00 மணிவரை
(சுயவிபரக்கோவையுடன் சமூகமளிக்கவும்)

**அன்ரா டிஜிற்றல் இமேஜ்**
379/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8929 , 0776622981



ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வழங்கும் இதழியல் டிப்ளோமா

முழுநேரம் - (இரண்டு ஆண்டுகள்)
கல்வியாண்டு - 2013/2014
Diploma in Journalism - 2013/2014

**புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான. 2013/2014 ஆண்டுக்கான. புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக. அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

1. அச்சு ஊடகம் (Print Media)
2. இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
3. இணைய ஊடகம் (New Media)

**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்**

- செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
- றேடியோ மற்றும் ரி.வி நிகழ்ச்சிகள் தயாரிப்பு
- ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி
- சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
- ஆவணப்பட தயாரிப்பு
- சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான பயிற்சிகள்



**அனுமதிக்கான தெரிவுமுறை**

1. எழுத்துத் தேர்வு
(எழுத்தாற்றல், அறிக்கையிடும் திறன். மொழியாற்றல். சமூக அறிவு)
2. நேர்முகத் தேர்வு

**கற்கைக் காலம்** — 2 ஆண்டுகள் (முழுநேரம்)

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி—30.11.2012**

**கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கற்கைநெறிக் கட்டணம் | ரூ. | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூ. | 750.00 |
| நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூ. | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூ. | 1000.00 |
| மொத்தம் | ரூ. | 22,500.00 |



**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல.84 ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூ.100/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்துக்கு நேரடியாகவோ மற்றும் பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்

021222—9873

பதிவாளர்



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்

# போர் வரவு- செலவுத் திட்டம் இன்னும் முடிவுக்கு வரவில்லை

## நாடாளுமன்றில் சிவசக்தி ஆனந்தன்

கொழும்பு, நவ.16

1970 ஆம் ஆண்டளவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போர் வரவு- செலவுத்திட்டம் இன்றுவரை தொடர்கிறது. இது இன்னும் முடிவுக்கு வந்ததாக இல்லை.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் விசனம் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் மக்களின் இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளை தரைமட்டமாக்கிய இராணுவத்தினருக்கு வீடுகளையும், வீடுகளை இழந்த தமிழ் மக்களுக்கு பொட்டல்காட்டையும் காட்டியிருக்கிறது இந்த வரவு-செலவுத் திட்டம்.

1970களின் பிற்பகுதியில் ஆரம்பித்த போர் வரவு-செலவுத் திட்டம் இன்றுவரை தொடர்கின்றது. போரில் வெற்றி பெற்று விட்டோம் என்று வருடாந்தம் மிகப்பெருந் தொகை செலவில் வெற்றி விழாக்களியாட்டங்களையும் போர் வெற்றியின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள் என்று சாகசநிகழ்ச்சிகளையும் நடத்துகின்றது இந்த அரசு. யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகள் கழிந்தும் பாதுகாப்பற்கென மிகப் பெரும் நிதியை ஒதுக்கியிருப்பது தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் போர் இன்னமும் முடியவில்லை என்பதையே காட்டுகிறது.

வீடுகளை இழந்தவர்கள் மரங்களின் கீழ் வாழ, வேறு மாகாணங்களில் வாழ்ந்தவர்களை சகல வசதிகளுடன் கூடிய வீட்டுத் திட்டங்களில் குடியேற்றி வருகிறது.

வீடுகளை இழந்தவர்களுக்கு வீட்டைக் கட்டிக் கொடுக்கவில்லை. இந்தியாவால் வழங்கப்படும் வீடுகளைக் கூடத் தட்டிப்பறிக்கிறது அரசு.

இன்றும்கூட வன்னியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு, மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் போன்ற பகுதிகளிலும் யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சம்பூர் ஆகிய இடங்கள் உள்ளடங்கலாக ஏராளமான இடங்களில் அந்த மண்ணில் தமது சொந்தக் காணிகளில் நிரந்தரமாக வாழ்ந்து வந்த எமது மக்கள் மீள்குடியமர அனுமதி மறுக்கப்படுகின்றது.

செட்டிகுளத்தில் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த சுமார் 6,200 ஏக்கர் காணிகள் மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் கணக்கு வழக்கற்ற காணிகள் பறிக்கப்பட்டுள்ளன.

வசதியாக வாழ்ந்த எமது மக்களின் அத்தனை சொத்துக்களையும், வளங்களையும், வாழ்வாதாரங்களையும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்என்ற போர்வையில் அழித்தொழித் தது அரசு. அந்த மக்களின் வீடுகளைக் கட்டவோ, வாழ்வாதாரங்களை மீட்டெடுக்கவோ இன்றைய வரவு-செலவுத் திட்டத்தில்கூட ஒரு சதமேனும் ஒதுக்கப்படவில்லை. மாறாக, அவர்கள் வாழ்ந்து வளப்படுத்திய நிலங்களையும், வாழ்வாதாரங்களாகத் திகழ்ந்த பயன்தரு மரங்களையும் கொண்ட செழிப்பான நிலங்களையும் இராணுவம் அபகரித்துக் கொண்டுள்ளது.

எமது மக்கள் மீன்பிடிப்பதற்குத் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கும் ஆயுதப்படையினர், பல நூற்றுக்கணக்கான வேற்று மாகாணத்தவர்கள் எமது பகுதிகளில் குடியேறி மீன்பிடிக்க பாதுகாப்பளிக்கின்றனர்.

இதுபோன்றே தமிழ் மக்களின் விவசாயக் காணிகளில் சிங்களவர்கள் அத்துமீறி பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது வன்னியில் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

இவர்களுக்கு முப்படைகளும் பாதுகாப்பளிக்கின்றன. வடக்கு-கிழக்கில் பாதுகாப்பு பலப்படுத்துவதன் தாற்பரியத்தை இது புலப்படுத்துகின்றது.

இடம்பெயர்க்கப்பட்ட மூன்று லட்சம்பேரை மூன்று ஆண்டுகளுக்குள் குடியேற்றியமை ஒரு உலக சாதனை என்றும், அதனை உலகம் புரிந்துகொண்டு பாராட்ட வேண்டும் என்று பாராட்டு பிச்சை கேட்கும் அரசின் மீள்குடியேற்றக் கொள்கை இதுவே.

மேலும், தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களை அடாவடியாகப் பறிப்பதை அரசு நிறுத்த வேண்டும். அத்தகையோருக்கு பாதுகாப்புக் கொடுப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும். குளங்கள் அனைத்தையும் மக்களின் முழுமையான பயன்பாட்டுக்கு அனுமதிக்க வேண்டும். வடக்கு-கிழக்கில் வாழும் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படும்வரை இந்தப் பிரதேசங்களில் காணிப் பதிவு விடயங்களை நிறுத்த வேண்டும்.

கட்டப்படும் வீடுகளும் வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளும்போரில் அனைத்தையும் இழந்தவர்களைச் சென்றடைவதை வெளிப்படைத்தன்மையுடன் உத்தரவாதப்படுத்த வேண்டும். இல்லாதவிடத்து வரவு-செலவுத் திட்டமும் செயற்பாடுகளும் இலங்கை அரசின் இனஒழிப்புத் திட்டத்தை நிரூபிப்பதாகவே அமையும்.- என்றார். (ம-400)

## பாரதி சனசமூக நிலையத்துக்கு விளையாட்டு உபகரணங்கள்

வலி.வடக்கு, நவ.16

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாரதி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து 20 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

சனசமூக நிலைய நிர்வாகிகளின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.(3-86)

## சென்பீற்றர்ஸ் கழகத்துக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு பொற்பதி குடத்தனை சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பன்முகப்படுத்திய வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 25 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் விளையாட்டுத்துறையை வளர்த்தெடுக்கும் முகமாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(3-86)

## சமய சந்நிதிகளில்

சித்தன்கேணி நாக கன்னியம்மாள் ஆலய மாதாந்த வெள்ளிக்கிழமை பூசை இன்று காலை 8மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அம்பாள் வீதி உலா வருவார். (3-29)

* * *

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி ஆலய கந்த சஷ்டி பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சூரசங்காரமும் 20 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளன.

## பத்தும் உள்ளவன் நல்ல பத்தன்

*"கொல்லான் பொய் கூறான் களவிலான் எண்குணன் நல்லான் அடக்கம் உடையான் நடுச் செய்யவல்லான் பகுத்து உண்பான் மாசிலான் கள், காமம் இல்லான் இயமத்திடையில் நின்றானே"*

*எனத் திருமந்திர ஆகமப் பாடல் பக்தி உள்ளவனுக்கு இருக்கவேண்டிய பத்துச் சிறப்புக்களை அழகாகக் கூறியுள்ளது. அதாவது இதில் கூறப்பட்டுள்ள பத்துச் சிறப்புக்கள் கொல்லாமை, பொய் பேசாமை, களவு செய்யாமை, எண்குணத்தானாகிய ஈசனை வழிபடுதல், அடக்கம் உடைமை, நடுவுநிலைமை, பகிர்ந்துண்ணல், மாசற்று இருத்தல், கள்குடியாமை, காமம் இல்லாதிருத்தல் என்பனவாகும்.*

*ஒரு நல்ல மனிதனின் அடிப்படையான பண்பானது பக்தி உணர்வாகும். இதனை நன்கு உணர்ந்த பெரியோர்கள் நல்லவன் ஒருவன் என்று ஒருவரைப் பற்றிச் சொல்லும்போது அவன் சிவனே என்று தன்பாட்டில் இருக்கும் ஒரு பக்தன் எனக் கூறுவார்கள்.*




*ஒருவன் சிவ! சிவ! என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது அவனுக்குச் சிவகதியும் கிடைப்பது எளிதன்றோ. இதனாலன்றோ சிவ! சிவ! என்றிடத் தீவினை மாளும் எனத் திருமூலர் எடுத்துக்கூறியுள்ளார்.*

*மேலும் பக்தர் என்ற வடமொழி பக்தி உள்ளம் கொண்டவர் என்பதாகும். இது தமிழிற் பக்தர் எனப்படும். இந்தப் பக்தர் பத்துச் சிறப்பான குணங்கள் உடையவரெனவும் போற்றப்படவேண்டியவரன்றோ?*

*எனவே மேலே கூறப்பட்ட நல்ல பத்துக் குணங்கள் உடைய ஒருவரே உண்மையான நல்ல பக்தர் என்பதனை நாம் தெரிந்து நாமும் நல்ல பக்தராக இறைவனை வேண்டுதல் செய்வோம். பக்தி உடையோர் பரகதியடைவர்.*

நன்றி: ஞானச்சுடர்

## இரு தமிழரைக் கடத்திய பாகிஸ்தானியர்

### பிரான்ஸில் சம்பவம்

பரிஸ், நவ.16

பிரான்ஸின் பரிஸ் நகரில் இருந்து தெற்கு நோக்கிச் சென்ற இரு தமிழர்களைக் கடந்த வெள்ளிக்கிழமை கடத்திச் சென்றதாக நான்கு பாகிஸ்தான் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பாகிஸ்தானியர்களைக் கைது செய்த பொலிஸார் அவர்களை லியோன் சிறைச்சாலையில் அடைத்துள்ளனர்.

அவர்களுக்காகக் கடந்த செவ்வாய்க்கிழமை சட்டத்தரணிகள் விடுத்த பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும், தெரிவிக்கப்படுகிறது.

32 வயது,25வயதுகொண்ட இரு தமிழர்களையே மேற்படி பாகிஸ்தானியர்கள் கடத்தியுள்ளனர்.

ஆள்கடத்தல், கொலை, கொள்ளை, மற்றும் ஆயுதப் பயன்பாடுகள் போன்ற குற்றச்சாட்டுக்கள் மேற்படி நான்கு பாகிஸ்தானியர்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

எனினும் ஏன் இந்த இரு தமிழரையும் கடத்தினர் என்பது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (3)

## ஜி.சீ.ஈ. சாதாரண மாணவருக்கு இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.16

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நாளையும் நாளை மறுதினமும் காலை 8.30 மணிக்கு இந்தக் கருத்தரங்கு ஆரம்பமாகும் என தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (3-13)

# ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் ஐ.நா. விரைந்து செயற்படவேண்டும்

### இளங்கோவன் கூறுகிறார்

ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் ஐ.நா. விரைந்து செயற்பட வேண்டும் என்று தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தன் பொறுப்பைத் தட்டிக் கழித்ததோடு, பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள் கொலைக்குக் காரணமாக இருந்தது குறித்து, ஐ.நா., சபை மீது விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இது குறித்து, தி.மு.க. மாநிலங்களவை செய்தித் தொடர்பாளரான டி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்ததாவது:-

'டெசோ' மாநாடு, லண்டனில் நடைபெற்ற தமிழர்கள் மாநாடு ஆகியவற்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்தான், ஐ.நா. சபை அமைத்த குழுவின் அறிக்கையாகவும் உள்ளது. கசிந்த அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை, ஐ.நா. சபை கண்டுகொள்ளவில்லை. இலங்கை அரசின் ஆலோசனைகளைக் கேட்டு, அதன்படியே ஐ.நா.வின் இலங்கை நிர்வாகிகள் நடந்து கொண்டுள்ளனர். இதுகுறித்து, பொதுவான நாடுகள் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கை இனப்படுகொலை குறித்து பொதுவான விசாரணை தேவை என்று தான் டெசோ மற்றும் லண்டன் மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றினோம். மேற்கண்ட இரண்டு தீர்மானங்களையும் ஐ.நா. சபை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவர்களது சுய பரிசோதனைக்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையின்படியாவது, ஈழத் தமிழர்கள் விவகாரத்தில், ஐ.நா., விரைந்து செயற்பட வேண்டும்- என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்ட மெய்வன்மைச்சங்கத்தினால் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டது. பிரதம விருந்தினர் கொடியசைத்து நிகழ்வை ஆரம்பிக்க பாய்கிறார்கள் வீராங்கனைகள் (ங-23)

## துணுக்காய் பிரதேச செயலக கரப்பந்து பயிற்சி முகாம் இன்று

யாழ்ப்பாணம்,நவ.16

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலைகள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக்கழகங்கள் என்பவற்றைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட துணுக்காய் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலக பதில் விளையாட்டு உத்தியோகத்தர் போல்ராஜ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சி முகாமில் பயிற்றுவிப்பாளர்களாக சி. தாயாளபாலன், எஸ். சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (ங-23)

# பரபரப்பான கிரிக்கெட் போட்டி பற்றிக்ஸ் கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், நவ.16

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு 111 இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வென்றது.

இந்தப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணியினர் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தனர்.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக் கல்லூரி அணியினர் 40.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களைப்பெற்றனர்.

பற்றிக்ஸ் அணி சார்பில் இவான் 9 ஓட்டங்களையும், அனோஷன் 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் ஜான்சன், 11ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தேனிஷன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக் குகளையும், அன்றுஷன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி15 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி 36.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து, 49 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் அதிகபட்சமாக சிம்சன் 13 ஓட்டங்களை தனது அணி சார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பில் டிலக்ஸன் 13 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும் ஜேம்ஸ்ரீபன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக் கல்லூரி அணியினர் ஆட்ட நேர நிறைவில் 39 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக டிலக்ஸன் 36 ஓட்டங்களையும், யறோசன் 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் ஜெனோசன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், சிம்சன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 10ஓட்டங்களைக்கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

யாழ்.மத்திய கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட முன்னரே ஆட்ட நேரம் முடிவடைந்துவிட்டது.

இத்தகைய நிலை ஏற்பட்டால், போட்டி விதிப்படி முதலாவது இன்னிங்ஸில் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற அணிக்கே வெற்றி வழங்கப்படும்.

அதற்கமைய முதல் இன்னிங்ஸில் 14 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்த சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ங-23)

## படையினரால் புனரமைக்கப்பட்ட வலைப்பந்தாட்டத் திடல் திறப்பு



கொழும்புத்துறை, நவ.16

பாஷையூர் சென்.அன்ரனிஸ் றோ.க. மகளிர் வித்தியாலப் பாவனைக்கென மீளமைப்புச் செய்யப்பட்ட வலைப்பந்தாட்டத் திடல் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி தவலக்சுமி பேரின்பம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட 51 ஆவது படைப்பிரிவின் தளபதி சந்தனகுணரத்தின வலைப்பந்தாட்ட திடலை சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

பலாலி படைத்தலைமையகமும், கொழும்புத்துறை முகாம் இராணுவத்தினரும் இணைந்தே இந்த வலைப்பந்தாட்டத்திடலை புனரமைப்புச் செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக 512 ஆவது படையணித் தளபதி அஜித் பல்லேகல, பாஷையூர் சென். அன்ரனிஸ் விளைட்டுக்கழகத்தின் உபதலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை, யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் சண்முகம் , பாஷையூர் புனித அந் தோனியார் ஆலய உதவிப் பங்குத் தந்தை சுமன் அடிகளார் மற்றும் பழைய மாணவிகள்,அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர்கலந்து கொண்டனர். (ங-23-135)

# சிநேகபூர்வ ‘20/20’ ; பரிசை வென்றது றெயின்போ

யாழ்ப்பாணம், நவ.16

மானிப்பாய் பரிஷ் அணிக்கு எதிரான சிநேகபூர்வ '20/20' கிரிக்கெட் ஆட்டத்தில் அரசடி றெயின்போ அணி 5 இலக்குகளால் வெற்றியீட்டியது.

கடந்த வாரம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த சிநேகபூர்வ ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் அணியும், அரசடி றெயின்போ அணியும் மோதிக் கொண்டன.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் துவாரகன் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும், கோபி 20 ஓட்டங்களையும், வினோத் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அரசடி றெயின்போ விளையாட்டுக் கழக அணி சார்பில் நிஷாந்தன் 14 ஓட்டங்களைக்கொடுத்து 3 இலக்குகளையும், ஜெகதீபன் 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், சௌமிதரன் 14 ஓட்டங்களைக்கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

126 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய, அரசடி றெயின்போ விளையாட்டுக்கழக அணியினர் 18:3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தனர்.

இதில் டார்வின் 38 ஓட்டங்களையும்,யதுர்ஷன் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 23 ஓட்டங்களையும், தேசிகன் 15 ஓட்டங்களையும், விஸ்ணு 15 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணிசார்பில் யாழினியன் 12 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் தீபன், கிரிகரன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர். (ங-23)


## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கழகங்கள் விண்ணப்பிக்கலாம்


யாழ்ப்பாணம்,நவ.16

கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம், முத்துலிங்கம் ஜெகநாதனின் 23 ஆது ஆண்டு நிறைவையொட்டி யாழ். மாவட்ட கரப்பந் தாட்ட அணிகளுக்கிடையே கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டி எதிர் வரும் 24 ஆம் ,25 ஆம் திகதிகளில் இரு தினங்களாக இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள், மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் கிருஷாணிடம் விண்ணப்பங்களைப் பெற்றுபூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ங-23)





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவையின் ஏற்பாட்டில், முன்னாள் இடை நிலை மேற்பார்வையாளர் மேரி ஏலயன்ஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக சங்கானை கல்விக் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுப் பிரிவு பெண்களுக்கிடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர், அதிபர், பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுநருடன். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் 23





உலகின் தலைசிறந்த நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் 23 ஆண்டு கால கிரிக்கெட் வாழ்க்கையை நிறைவு செய்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதியன்று பாகிஸ்தானுக்கெதிரான கராச்சி டெஸ்டில் அறிமுகமான 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் நேற்றைய இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்துடன் தனது 23 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார்.

தனது 16 வயதினில் அறிமுகமான சச்சின் 39 ஆவது வயதிலும் தொடர்ந்தும் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# சேவாக் சதம்

## இந்தியா அபாரம்




இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் சேவாக்கின் அதிரடிச் சதத்தின் உதவியுடன் இந்திய அணி வலுவான இலக்கை முதல்நாளில் பெற்றுக் கொண்டது. நேற்றைய முதல் நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் அஹமதாபாத்தில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

கம்பீர் - சேவாக் இணையே நேற்றைய ஆட்டத்தினை ஆரம்பித்து வைத்தது. சேவாக் ஒரு நாள் ஆட்டம் போன்று அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். இங்கிலாந்தின் பந்து வீச்சை சவாலின்றி எதிர்கொண்ட இந்த இணை ஓட்டங்களைத் தொடர்ச்சியாகக் குவித்தது. இங்கிலாந்து அணி திணறியது. சேவாக் 45 பந்துகளில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

மதிய போசன இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமான முதலாவது பந்துப் பரிமாற்றத்தில் சேவாக் 80 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அண்டர்சனின் பந்து வீச்சில் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பை இங்கிலாந்து கோட்டை விட்டது. அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் கம்பீரின் ஆட்டமிழப்பொன்றையும் இங்கிலாந்து தவறவிட்டது. இருந்தும் அதனை சரிவரப் பயன்படுத்தாத கம்பீர் அதே பந்துப் பரிமாற்றத்தில் 45 ஓட்டங்களுடன் 'போல்டாகி' வெளியேறினார். முதலாவது இலக்குக்காக 134 ஓட்டங்கள் இணையாகப் பகிரப்பட்டிருந்தது. இந்த இணையை சுவான் பிரித்து வைத்தார்.

தொடர்ந்து நுழைந்த புஜார சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இங்கிலாந்து அணிக்கு தொடர் தொல்லையைக் கொடுத்தது இந்திய அணி. சேவாக் மறுமுனையில் 90 பந்துகளில் தனது 23 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். இரண்டாவது இலக்குக்காக 90 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சேவாக் 117 ஓட்டங்களுடன் சுவானின் சுழலில் 'போல்டானார்'.

அதன் பின்னர் களமிறங்கிய அனுப வீரர் சச்சின் 13 ஓட்டங்களுடனும், இளம் வீரர் விராத் ஹோக்லி 19 ஓட்டங்களுடனும் வெளியேறி இந்திய அணியின் இலக்குகளை துரிதப்படுத்தினர். 283 ஓட்டங்களுக்கு இந்திய அணி 4 இலக்குகளைப் பறிகொடுத்தது.

அசத்தலாக ஆடிய புஜாரா 67 பந்துகளில் தனது இரண்டாவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். நேற்றைய நாள் நிறைவு வரையில் இந்திய அணி 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் புஜாரா 98, யுவராஜ் சிங் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். நேற்றைய நாளில் கைப்பற்றப்பட்ட 4 இலக்குகளையும் சுவானே வீழ்த்தினார். (5)

# சச்சினை மட்டும் சார்ந்திருக்கலாமா



இங்கிலாந்து தொடரில் இந்திய அணி, சச்சினை மட்டும் சார்ந்து இருக்கக் கூடாது,' என்று கபில் தேவ் தெரிவித்தார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் நேற்று ஆரம்பமாகியது. இது குறித்து இந்தியக் கிரிக்கெட் ஜாம்பவான் கபில் தேவ் கூறியதாவது:

இங்கிலாந்து தொடரில் அனைவரது கவனமும் சச்சின் மீது தான் இருக்கும். அவர் இந்திய அணியின் முக்கிய வீரர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனாலும் அவரை மட்டும் சார்ந்து இருக்கக் கூடாது. இளம் வீரர்கள் பொறுப்புகளை தங்கள் தோளில் சுமக்கும் நேரம் வந்துவிட்டது.

சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தில் விளையாடும் போது, நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகிக்கும். ஏனெனில், இது போன்ற நிலையில் எந்த அணியும் முதலில் துடுப்பெடுத்தாடவே விரும்பும். இதனால், அணியின் பலத்திற்கு ஏற்ப ஆடுகளங்கள் அமைக்கப்பட வேண்டும். இல்லையெனில், அதுவே நமக்கு எதிராக திரும்பி விடும்.

அணியின் தொடக்க வீரர்கள் சேவாக், கம்பீருக்கு அதிக பொறுப்புள்ளது. ஆனால், கடந்த 15 முதல் 20 டெஸ்டில் இவர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இங்கிலாந்துக்கு எதிராக இவர்கள் சரியாக விளையாடவில்லை எனில், என்ன நடக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே அச்சமாக உள்ளது.

சகிர்கான் 'போர்மில்' இல்லை. ஹர்பஜனும் சமீபத்தில் சொதப்பியுள்ளார். இந்த நிலையில், ஒன்று அல்லது இரண்டு டெஸ்டில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றினாலே, பெரிய சாதனை தான்.

இங்கிலாந்து அணியில் வலுவான துடுப்பாட்ட வீரர்கள், சகலதுறை ஆட்டக்காரர்கள் உள்ளனர். அந்த அணியின் பந்து வீச்சும் நன்றாக உள்ளது. கடைசி வரை துடுப்பாட்ட வரிசை நீளுகிறது. இவர்களிடம் உள்ள ஒரே பலவீனம், ஒருங்கிணைந்து விளையாடாதது தான் - என்றார். (5)

# பதிலடி கொடுக்கிறது பங்களாதேஷ்

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆட்டத்துக்கு ஈடுகொடுத்து பங்களாதேஷ் அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பங்களாதேஷ் சார்பில் நமீம் ஸ்லாம் சதம் அடித்து அசத்த நேற்றைய மூன்றாவது நாள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 455 ஓட்டங்களைப் பெற்றது.


பங்களாதேஷ் சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டு போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் டாக்காவில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகளின் அணித் தலைவர் டரன் சமி, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன் படி களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 144 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 527 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் துடுப்பாட்டத்தில் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 203, ராம்டின் ஆட்டமிழக்காமல் 126 ஓட்டங்களையும், கொரன் பவல் 117 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அறிமுக வீரர் சொகாச் ஹாசி 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பங்களாதேஷ் அணியும் மேற்கிந்தியத்தீவுகளின் அதிரடிக்கு சற்றும் சளைக்காமல் ஆரம்பத்திலேயே வெளுத்துக் கட்டியது. நேற்றுமுன்தினம் ஆட்டநேர நிறைவில் பங்களாதேஷ் அணி 164 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது. களத்தில் நமீம் 27, சகிப் 16 ஓட்டங்களுடன் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானது. நமீம், சகிப் இணை தொடர்ந்தும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இவர்களது சிறந்த இணைப்பாட்டத்தை மேற்கிந்தியத் தீவுகள் அணி பிரிக்க முடியாது திணறியது. சகிப் தனது 10 ஆவது அரைச் சதத்தை கடந்தார்.

இந்த இணை 167 ஓட்டங்களை நான்காவது இலக்குக்காகப் பகிர்ந்த நிலையில் சகிப் 89 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த பங்களாதேஷ் அணி வலுவான இலக்கை நோக்கி முன்னேறியது. மறுமுனையில் ஆரம்பத்திலிருந்து கலக்கிய நமீம் ஸ்லாம் தனது முதலாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் சிறிது நேரத்திலேயே வெளியேறினார்.



362 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பங்களாதேஷின் ஐந்தாவது இலக்காக நமீம் 108 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார். தொடர்ந்து அணி மேலதிகமாக ஆறு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அணித் தலைவர் ரஹிம் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் இணைந்த ஹுஸைன், மகமதுல்லா ஜோடி மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த இணை பிரிக்கப்பட முடியாத 87 ஓட்டங்களை பகிர்ந்துள்ளது. நேற்றைய ஆட்ட நேர நிறைவில் பங்களாதேஷ் அணி 6 இலக்குகளை இழந்து 455 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. களத்தில் ஹுஸைன் 33, மகமதுல்லா 42 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். பந்து வீச்சில் ராம்போல் 3, சமி 2, பெருமாள் 1 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளனர். (5)


## எங்களின் பந்துவீச்சே உலகில் சிறந்தது - அம்லா

தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சே உலகில் சிறந்த வேகப்பந்து வீச்சு அணியாகக் காணப்படுவதாக தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர் ஹசிம் அம்லா தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி சிறப்பாகப் பந்துவீசியிருக்காத போதிலும், தமது அணியின் பந்துவீச்சுத் தொடர்பாக நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போதைய நிலையில் உலகின் சில பந்துவீச்சு வரிசைகள் சிறப்பானவையாகக் காணப்படுவதாகத் தெரிவித்த ஹசிம் அம்லா, தன்னுடைய கருத்துப்படி தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சு வரிசையே உலகில் சிறந்ததாகக் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

அத்தோடு ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளின் பந்துவீச்சு வரிசைகளும் மிகச்சிறப்பானவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசிகர்களுக்கு இலகுவான வீசா வேண்டும்: பாகிஸ்தான்



இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான கிரிக்கெட் போட்டியைப் பார்வையிட இந்தியாவிற்கு பயணம் செய்யவுள்ள பாகிஸ்தானைச் சேர்ந்த ரசிகர்களுக்கு இலகுவான வீசா நடைமுறை பன்பற்றப்பட வேண்டும் என்று பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தானின் முன்னாள் தலைவரும், பாகிஸ்தான் சார்பாக அதிக போட்டியில் பங்குபற்றியவருமான இன்ஸமாம் உல் ஹக் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவிற்குப் பயணம் செய்ய விரும்பும் ரசிகர்களுக்கு இலகுவான வீசா நடைமுறையை இந்திய அரசு பன்பற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இந்தியா பின்பற்றவுள்ள பாதுகாப்பு நடைமுறைகளில் தளர்வு ஏற்படாத அதேவேளை பாகிஸ்தானிய ரசிகர்களுக்கு இலகுவான முறையைப் பின்பற்றக் கூடியதுமான திட்டமொன்றை வகுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ரசிகர்கள் இந்தியாவிற்கு வருவதானால் இந்தியாவில் அவர்களுக்கென அனுசரணையாளர் ஒருவர் காணப்பட வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டுவர இந்தியக் கிரிக்கெட் சபை சிந்தித்து வருவதாக வெளியான தகவல்களை அடுத்தே இன்ஸமாம் உல் ஹக் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரான இஷான் மணி, பாகிஸ்தானிய ரசிகர்கள் இலகுவான முறையில் வீசாக்களை பெறுவதை உறுதி செய்வது பாகிஸ்தானியக் கிரிக்கெட் சபையின் பொறுப்பு எனத் தெரிவித்தார். (5)

## மரண அறிவித்தல்

### மகாலட்சுமி கந்தசாமி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகாலட்சுமி கந்தசாமி 14.11.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கந்தசாமியின் (முன்னாள் பதில் வைத்திய அதிகாரி -கிளிநொச்சி, முன்னாள் யோகர் சுவாமி திருவடி நிலைய முதியார் இல்லத்தலைவர்) அன்பு மனைவியும், முருகேசு, மீனாம்பிகை சிவகுமார் (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயும், சிவகுமாரின் (கனடா) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2012) வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு வன்னேரிக்குளம் ஐயனார்புரத்திலுள்ள யோகர் சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி மீனாம்பிகை சிவகுமார் (கனடா)

(சி/1650)(3.14)


## தேவை

பிரபல உணவகம் ஒன்றுக்கு சமையல் உதவியாள் தேவை. தங்கிநின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு- 0771751495

அனைத்து கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்

17.11.2012 / 19.11.2012 காலை 10.00 மணி

IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

உங்கள் வாழ்வை மேம்படுத்த

மருத்துவ உதவியாளர் பயிற்சி

O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும் கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் வாய்ப்பு.

பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)

லாவா வைத்தியசாலையில் செயன்முறைப் பயிற்சிகள்

திறமையான மாணவர்களுக்கு கொழும்பு Lanka Hospitals(Apollo ) நிறுவனத்தில் உடனடி வேலைவாய்ப்பு.

Knowledge Universe

(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :0777302882/0213208342
www.kugroup.info

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
சட்ட ஆலோசனையின் இறுதி நாள் 15.12.2012

ஏன் இந்தக் காலக்கெடுவினுள் நாம் திசைகாட்டியில் ஆலோசனை பெற்றாக வேண்டும்?

தனித்துவமானவர்கள்:

ஆம் வடபுலத்தில் மேற்படி ஆலோசனைத்துறையில் பலவித வெற்றிகளை ஈட்டி சாதனைபடைத்துவரும் ஒரேயொரு நிறுவனம் திசைகாட்டி மட்டுமே.

முதலுக்கு மோசமில்லை

முற்பணமோ பிற்பணமோ கொடுத்தவர் கேட்ட கணத்தில் மீளளிப்பு என்பதற்கிணங்க ஊரரறிய பல லட்சங்களை திருப்பிக் கொடுத்ததன் மூலம் தாம் முன்மாதிரியானவர்கள் என்பதை நிருபித்தவர்கள். எனவே உங்கள் முதலுக்கு மோசமில்லைத்தானே.

மீள எப்போ ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை.?

கௌரவ இயக்குநர் சபைத்தீர்மானத்தின் பிரகாரம் இதுவரை கிடைக்கப்பெற்ற விசேட ஆலோசனை செயற்திட்டத்திற்குரிய பல நூற்றுக்காணக்கான விண்ணப்பங்களிற்கு பரிகாரம் கண்ட பின்பே மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதால் மீளவும் ஆலோசனை வழங்கல் எப்போது ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை.

இன்னும் என்ன தாமதம் கறைபடியாத வரலாற்றைக் கொண்ட பகிரங்கத்தன்மையான முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான உங்கள் திசைகாட்டியிடம் விரைந்து வாருங்கள்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV 82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 0212219016

(25272)(3.6)


## மரண அறிவித்தல்

### கீதபொன்கலன் லக்ஸ்மன்



யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை கீதபொன்கலன் லக்ஸ்மன் நேற்று (14.11.2012) புதன்கிழமை ஆகாலமரணமடைந்தார்.

அன்னார் எழுவைதீவின் முதல் குருவானவரும், முல்லைத்தீவு உதவிப் பங்குத்தந்தையுமாவார்.

அருட்தந்தையின் நல்லடக்கத் திருப்பலி நாளை (17.11.2012) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்க நிகழ்வு நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

(சி/1848)(9.14) தகவல்:

குருமுதல்வர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
அருட் தந்தை பாஸ்ரின் ஆ.ஞானப்பிரகாசம்.


இலங்கை வாழ் மக்களே!

தென்னிந்திய திரைப்படத்துறையில் நீங்களும் பங்காற்ற அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திரைப்பட நடிகர், நடிகைகளுக்கான தேர்வு

இந்தியன் A.V.R மூவியின் தயாரிப்பு உதவியுடன் தயாரிக்கப்படும் புதிய திரைப்படங்களுக்கான புதுமுக நடிகர், நடிகைக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 18.11.2012 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் மேற்படி திகதியில் நடைபெறும் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகள்: வரத் 0774604576

(24314)(3.6)

Vinoth Curtains

யாழ். மண்ணில் அறிமுகமாகிறது

கேட்டின்ஸ் துறையில் நிபுணத்துவம் பெற்ற எம்மால் கேட்டின்ஸ், மெத்தைவிரிப்பு, றெயிலிங், போல்ஸ், குசன் கவர், வேற்றிக்கல் லைன்ஸ், வெனிசன் பிற்றிங், புளோ காபற் வேலைகள் செய்து கொடுக்கப்படுகிறது.


தொடர்பு- மைக்கல்
0774906323,
0723995447
0779519144

இல-50, நாவலர் வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.

(23933)(9.14)


## விண்ணக வாழ்வின் ஒரு வருடம்

அன்னை மடியில்
25 * 09 * 1945



இறைவன் அடியில்
16 * 11 * 2011

### அமரர் தம்பிராசா பீற்றர்சன் விஜயசிங்கம்

(முன்னாள் வரிமேற்பார்வையாளர், SHAMROCK ACADEMY நிர்வாகி)

"உயிருள்ள வரை எம்மை நேசித்தீர் இறந்த பின்னர் உம்மை நாம் மறவோம்"

உள்ளக் கமலத்தில் அன்புத்தேன் சுரந்த அற்புத மானிடனே!
உங்கள் நினைவுகளால் கலங்குகிறது எம் இதயம்.
எங்கள் குடும்பத்தின் ஒளியாய் திகழ்ந்து எல்லோருக்கும் இனியவனாக
வாழ்ந்து எம் உள்ளங்களில் என்றும் நிலைத்து விட்ட விஜயசிங்கம் பேரவனே
உமது உடல் மண்ணுக்குள் குடி புகுந்தாலும்
உமது ஆன்மா இறைவன் பதம் சேர்ந்திட நித்தம் வேண்டுகிறோம்.

7/1, பச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
021-222 7990

குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org